ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST-INDIA

பதிவு என் 2041 | மகாத்மா காந்தி வாழ்க | தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா, வெளி நாடு $1\frac{1}{2}$ அணா.




# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1–12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. | 12. |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ | 2. |

☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 3 | ஈரோடு பிரபவ ஸ்ரீ ஆடி மீ 30 உ (14—8—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 16

‘குமரன்’

வழிபற்றி உண்மை
நெறி காண்மின்!

வாரப்பதிப்பு
வருடச்சந்தா
உள்நாடு ரூ. 5
வெளிநாடு ரூ. 6

மாதப்பதிப்பு
வருடச்சந்தா.
உள்நாடு ரூ. 1-8-0
வெளிநாடு,, 2-0-0

மானேஜர்.

பார்ப்பனரல்லாதார்
சமூக முன்னேற்றத்திற்கு
உண்மையுடன் உழைப்பவன்

“குமரன்”

ஆதலின் இன்றே சந்தாதாரராய்ச்சேர்ந்து நாட்டின்
விடுதலை வழி கடைப்பிடியுங்கள்.
ஆணித்தரமான அபிப்பிராயம்,
அச்சமற்றகண்டனம் ஏராளமான செய்தி.
தேனென இனிக்கும் செந்தமிழ்நடை,
தேசிய தமிழ் வாரப்பத்திரிகைக்குள் தலைசிறந்து,
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும்
ஏராளமான சந்தாதாரர்களை உடையது.
எனவே விளம்பரத்திற்குத் தகுந்த பத்திரிகை
‘குமரன்’ அன்றிவேறில்லை.
இன்றே மானேஜருக்கு எழுதி விபரம் அறியுங்கள்
மாதிரிப்பிரதி இலவம் !

மானேஜர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட்,
காரைக்குடி.

மூன்று மாதத்தில்
மோட்டார் ஓட்ட கற்றுக்
கொள்ளலாம்

1916ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

தமிழ் புக்கீப்பிங்.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம். விலை ரூபாய் 1.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார்ப் பேட்டை, புதுச்சேரி

(பராபரமே தெய்வம்)

தபசிரேஷ்ட முனிவர்கள் அருள் பெற்றது !! வைத்திய முறைகளை யூகித்தறிந்து சுற்றுணர்ந்தது !!
இதுவரை வெளிவராதது !! இனிமேல் காணக்கூடாதது !!

# மகா தாம்பர சுன்னம்.

ஏன் கவலைப்படுகிறீர்கள் ! உங்கள்பயம் தீர்ந்து விட்டது !
ரண குஷ்டம் தீர்ந்து விட்டது. சகலரோகங்களும் ஒழிந்து விட்டது.

எத்தனை நாளைக்கு இந்தக் கஷ்டம், எத்தனை நாளைக்கு மூலையிலேயே இருப்பது தெய்வமே! எனும் அபச்சாரம் வேண்டாம். இனறே உங்கள் கஷ்டம் தீர்ந்தது. இது ஓர் மஹானால் அனுக்கிரஹிக்கப் பெற்றது.

**குஷ்டம்** புண்களில் கட்டியிருக்கும் கட்டுகளை ஒருவாரத்திற்குள் அவிழ்த்தெறிந்து ரணங்களை ஆற்றி புண்களில் உள்ள தோல்களெல்லாம் சுருங்கி விடுகிறது. பற்று, அரிப்பு, தடிப்பு, நாற்றம் தேமல், சொரிகளெல்லாம் தானே விட்டு தகடு தகடாக பெயர்ந்து உதிர்ந்து விடுகிறது, சுருக்கிச் சொல்லில் குஷ்டப்புழுக்கள் மடிந்து குஷ்ட விஷநீர்கள் வேறற்று விடுகிறபடியால். கை. கால், மூக்கு, அரைத்து, தடித்து, சுணைத்து, வீங்கி, புண்ணுகி, அரித்து நின்றவரும் ஓடி குறைநோய்களின் ரணங்களெல்லாம் ஆறி; வெண் குஷ்டம், கருங்குஷ்டம், செக்குஷ்டம், படர் குஷ்டம, குஷ்டமேகங்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து கால் ஆணி, சிழ் வெடிப்பு, மதமதப்பு, விருவிருப்பு, கட்டி, காடு, திமிர் குஷ்டம், குஷ்டமேகங்களெல்லாம் நிர்மூலமாகி பலபுகளி, மயிர்வெட்டு, குலைமுட்டி, புடையன், விரியன் முதலிய விஷக்குஷ்டங்களும் சளை, இருமல், தொண்டைக்கட்டு, கீச்சுக்குரல், அதிமூச்சு ஆள்ரூபத்தை மாற்றி வேற்றுமைப் படுத்தும் மகாகுஷ்ட ரோகங்களெல்லாம் மாயமாக பறந்து விடும்.

24-வேளை சுன்னம் விலை ரூபா 25. 12-வேளை சுன்னம் விலை ரூபா 13.
(அனுபானத்துடன்)

குறிப்பு:— அன்னிய நாட்டினர் முழுத்தொகையும் முன்பணமாக அனுப்பவேண்டியது. கடிதம் எழுதுவோர் தங்கள் விலாசம் தெளிவாய் எழுதவேணும். கேட்லாக் இனாம்,

உலகரக்ஷகன் ஆசிரியர்:—

## எம். கந்தசாமி பிள்ளை,

இந்திய மஹரிஷிகள் வைத்தியசாலை பழனி S. I.

13-ம் வருடம் பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது

# "ஆனந்தபோதினி".

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.
48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.
தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.
13-வருடங்களாக நடைபெற்றுவருவது

20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது
இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
பினங்கு, சிங்கப்பூர், கெட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு
வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனாம்:

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
கெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

## அதிவெகு ஆச்சரியம்.

ஆரூடம்:— தர்ம ஞானமான கேள்விகளை எழுதி அனுப்பினால் பரப்பிர்மம் சொரூபியான ஸ்ரீ தண்டபாணி கடவுளின் அருள் வாக்கியத்தால் தகுந்த பதில்கள் எழுதி அனுப்பப்படும். கேள்விகள் 6-க்கு ரூபாய் ஒன்று. மேற்கொண்டு கேள்வி 1-க்கு அணா நான்கு. தபால் சிலவு வேறு. இன்னும் வேறும் விஷயங்களுக்கும் எழுதி தெரிந்து கொள்ளவும். அன்னிய நாட்டு வாசிகள் முன்பணம் தபால் சிலவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி எல் அய்யர், சுப்பிரமணிய உபாசி
பழனி. Palni P. O. (S. I.)

பார்ப்பனீயமொழிந்த திதி.

---

என் வீட்டில் பஞ்சாங்க பிராமணன் திதி சொல்ல வந்தவர் சப்தமி திதியில் கொடுக்கவேண்டிய திதியை நவமியில் வருகிறது என்று சொன்னார். இப்பேர்ப்பட்ட அயோக்கியத்தனம் பிராமணருக்குத்தான் வருமேயொழிய பிராமணரல்லாதாருக்கு வராது. ஆகவே, பிராமணீயத்தையொழித்து ஷை திதியை தேசிகரைக்கொண்டு நடத்தினேன் என்று தில்லையம்பூர் ஆறுமுக இருங்கனர் எழுதகிறார்,



## பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் கம்பேனி, தஞ்சாவூர்.

## திருப்பூர்
## சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இரங்கோன் தனவைசிய இளைஞர்
தமிழ்ச்சங்கத்தின் நான்காவது
ஆண்டு நிறைவுவிழா.

ஷை விழா நிகழும், பிரபவ ஆண்டு, ஆவணித் திங்கள் மூன்றும் நாள் வெள்ளிக்கிழமை, மாலை மூன்றரை மணி முதல், திருமிகு, தி. செ. நா. இராமன் செட்டியார் அவர்களின் தலைமையில் 29-ஆம் வீதி, 86-ஆம் எண்ணுள்ள சங்கத்தில் நடைபெறும். அன்பர்களனைவரும் வந்திருந்து சிறப்புற நடத்திவைக்கும்படி ஷை சங்கத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

---

ஏழாயிரம் பண்ணை பால்ய நாடார் சங்கம்.

இவ்வாகஸ்டு மாதம் 12-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்குக் காரைக்குடி "குமரன்" ஆசிரியர் ஸ்ரீமான் செ. முருகப்ப செட்டியார் தலைமையின் கீழ் நடைபெறும். அன்று கதர் கண்காட்சி சாலையும் திறந்து வைக்கப்படும்.

# வைத்தியம் தீர்ந்து கலியாணம் பண்ணுவதா? கலியாணம் பண்ணினவுடன் வைத்தியம் தீருவதா?

அவியல் 8-ம் பாகம்.

கைவல்யசாமியார் எழுதினது.

வசந்தன்—நேற்று சில சங்கைகளைத் தீர்த்தனை. இன்று நான் உன்னிடம் பேசப்போகும் சங்கதி முக்கியமானது. அதிலுள்ள சங்கைகளை உன் புத்திஉதவியின் சொல்வன்மையால் தீர்ப்பதில்மட்டும் உன்மனம் செல்லாமல் உண்மையாய் உள்ளதையே பிரதானமாகக்கொண்டு சங்கைக்கு பதில் சொல்லவேண்டும். நம் தேசத்தில் அநேக கட்சிகளிருந்தாலும் அதை இரண்டு கட்சிகளிலடக்கலாம. ஒன்று வைத்தியம் தீர்ந்து கலியாணம் செய்யலாமென்பது. அதாவது ஜன சமூகத்தை சீர்திருத்தி அதனால் ஒவ்வொருவருக்கும் சுயமரியாதையை உண்டுபண்ணினால் சுயராஜ்ஜியம் தானே வந்துவிடும். நன்மன அடிமையை நீக்கிக்கொண்டால் அன்னிய மனிதருக்கு அடிமையாகவிருப்பது நீங்கிவிடு மென்கிறது ஒரு கட்சி. இன்னொரு கட்சி கலியாணம் செய்துவிட்டால் வைத்தியம் தீர்ந்துவிடும். அதாவது நாம் ஒருமனப்பட்டு சுயராச்சியம் கேட்டால சுயராச்சியம் வந்துவிடும். அதற்குபின் நமக்குள் வேண்டியதை நாமே சரிப்படுத்திக் கொள்ளலாமென்கிறது. "நாம் தமிழ் பத்திரிகைகளைப் படிப்பதில்லை. இங்கிலீஷ் பேப்பரே படிப்போம் எனக்குப் பத்திரிகைபடிக்க நேரமில்லை. படிக்கத் தொடங்கினாலும் மேல்வாரியாகவே பார்ப்பது வழக்கம். பத்திரிகையில் என்ன இருக்கிறது, எனக்குத் தெரியாதது என்ன இருக்கக்கூடும், 'குடியரசு' பார்ப்பானையும்; மதாச்சாரத்தையும் குற்றம் சொல்லுகிறது, என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் சொல்லிக்கொள்ளட்டும். உங்களை பின்பற்றும் பரிசுத்தம் நிறைந்த வாலிபர்கள் நீர் சொல்லுவதை ஆராய்ச்சிசெய்யக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனதால் என் சங்கைகளைப் போக்குவாயாக.

சந்திரன்—என்னருமை வசந்தா நீ கேட்ட கேள்வி விஸ்தாரத்திற்குப் பெரிதே ஒழிய பதில் வெகு சுலுவாய் சொல்லிவிடலாம். இரண்டு கட்சிக்காரர்களையும்மாப்பிள்ளை வீட்டார்களாகவைத்துக் கொள்ளுவோம். பெண்வீட்டார் இங்கிலாண்டும், பெண் சுயராச்சியமாகவும் நினைத்துக் கொள்ளுவோம். பைத்தியக்காரனுக்குப் பெண் யாராவது கொடுப்பார்களா? கலியாணமில்லாததினாலே வைத்தியம் என்பது பெண்வீட்டிற்குத் தெரிந்து மட்டும் போதாது. கலியாணமான உடன் வைத்தியம் தீர்ந்துவிடுமென்றும் தெரிய வேண்டும். இதற்கு நம்பிக்கை உண்டாக எதுவுமில்லை. பின், பைத்தியக்காரனுக்கு ஏராளமான சொத்திருந்தாலும் நினைத்த இடத்துப் பெண் கிடைக்காது. பின், பெண்வைத்துப்பிழைப்பதோ வைத்தியக்காரனுக்கு முடியாத காரியமென்பது உங்களுக்கும், எங்களுக்கும் தெரியும். எப்படியாவது சக்தி யுண்டாய் விட்டால் சொத்திற்கு போக்கிடமில்லை என்று பெண் வீட்டாரும் மாப்பிள்ளைவீட்டாரும் உலகந்தெரிந்தஒப்பந்தத்தால் கலியாணம் நடக்கவேண்டும. கலியாணமானால் வைத்தியம் அதிகமானாலும் ஆகிவிடும். அதிகமாகவே எதுவுமிருக்கிறதே ஒழிய தீருவதற்கு ஏதுவில்லை. எப்படி என்னில் வைத்தியக்காரன் பெண்ஜாதியிடம் வைத்தியக் கோபத்தைக் காண்பிப்பான். அவள் பயந்து ஓடவோ, ஒளியவோ, சத்தம்போடவோசெய்வாள். அப்பொழுது வைத்தியக்காரனுக்கு கோபமதிகரித்து பித்தமேறி உன்மத்தனாவான், ஊரார் கலியாணமான உடன் வைத்தியம் அதிகமாய்விட்டது என்பார்கள். வைத்தியம் தீர்ந்து கலியாணம் செய்யலாமென்கிறவன் வைத்தியத்திற்கு ஏதுவான சாஸ்திரங்களை பெலமாகக் கொண்டிருக்கும் புரோகித கூட்டத்தாரிடமும் பொது ஜனங்களிடமும் முறையிடுகிறார்கள். மனிதருக்கும், நூல்களுக்கும், செய்கைகளுக்கும், எல்லைகளுக்கும், கற்பனைத்தடைகளுக்கும் தலை தனித்து பலதலைமுறையாய் வழக்கமாய் விட்டபடியால் அந்தத் துறையிலும் நாமாக ஒன்று செய்ய முடியும் என்கிற உண்மை நம்முகத்தின் முன்னே நின்றாலும் கண்ணுக்குத் தெரியாமல் போகிறது. மேனாட்டுப் பழக்கம் வந்தும் நமக்குத் தெளிவுண்டாகவில்லை. தனக்குத் தானே நாயகனாயிருக்கும் உரிமை எல்லா மனித உரிமைகளிலும் பெரிது ஆனால் இந்நாட்டிலே உவ்வுரிமை நால வசனங்களாலும், பழமொழிகளினாலும், கிரியை சடங்குகளாலும் மறைக்கப்பட்டிருக்கிறது. நம்ம தேசத்தில் மனிதனுடைய புத்தி மேல்நோக்கிப் போகாமல் கிரிகைகளாலும், சாஸ்திரங்களாலும், கையையும், காலையும் கட்டிப் போட்டிருக்கிறார்கள். அடிநோனமல் காக்குமாறு பாதைகளை அழித்துவிட்டார்கள். தெய்வத்தின் பெயர்சொல்லி மனிதனை மனிதன் கிழ்படுத்தி அவமதிக்கும்படி செய்துவிட்டார்கள. இப்படிப்பட்ட தேசம் அடிமைகளை உண்டாக்குவதற்கு நல்ல தொழிற்சாலையாயிற்று. ஐயரே! புரோகிதர்களே! இது கலியுகமென்றும் மனிதனுடைய எளியபுத்தியை சுயேச்சைப்படி விட்டால் கெட்டுப்போகுமென்றும் ஆதலால் மூளையை உழைப்பதிலும் தலையை சாஸ்திரங்களுக்கு தாழ்த்துவதுமே சிறந்ததென்றும் போகாக்குறைக்கு எங்கள் காலில் விழுந்து எங்களுக்கேயெல்லாம கொடுத்துவிடுங்களென்று சொல்லுகிறீர்களே. இந்த அவமான வார்த்தைக்கு நாங்கள் அடங்கமாட்டோம் என்று சொன்னால் புரோகித சமூகங்களுக்கே கண் சிவந்துபோய் ஜாதியை விட்டுத்தள்ள முடியுமானால் செய்கிறார்கள். இப்பொழுது அவ் கஷ்டமாயிருப்பதால். தெய்வ தூஷணைக்காரன், பிராமணதுவேஷி, தேசத்துரோகி, தேசமுன்னேற்றத்தைத் தடைபடுத்துகிறான், என்று தானும் தூற்றி கூலிகொடுத்தும் திட்டி தன் கூட்டத்திற்குத் துரோகம் செய்யக் கூசிக்கலையும் கூட்டாளிகளோடு எங்கள் கக்ஷியை எப்படியாவது கெடுக்கப்பார்க்கிறார்களே என்று சொல்லுகிறார்கள். இதை எல்லாம் கேட்ட சர்க்கார் நீங்கள் பிழை செய்வீர்கள் உங்களிடம் அநேக கவித்தியாசம், உங்களுக்கு இயற்கை அன்பில்லை, நீங்களடையும் பங்கை எல்லோருமாக பகிர்ந்துண்ணும் பந்தி உங்களுக்குத் தெரியாது. ஆதலால் சுய சிந்தையும், சுய காரியமும் உங்களுக்குத வாது என்கிறார்கள். இதைக்கேட்டு மறுகட்சியார் அதிகாரத்திற்கு பின்வரும் பதிலைச் சொல்லுகிறார்கள். "பிழை செய்தால் பெரிய ஆபத்தில்லை தமக்குத்தானே அதிகாரமில்லாதிருப்பது பெரிய ஆபத்து. எங்களிஷ்டப்படி நடந்து பழகினாலொழிய நாங்கள் உண்மைக்குவந்து நிலைபெற முடியாது" நீங்கள் இப்போது ஜனாதிகாரம் என்னும் வண்டியில் சவாரிசெய்வது சரியே. ஆனால் உங்களுடைய பழைய பார்லிமெண்ட்சபையாகிய வண்டி இரவில் பயணந்தொடங்கிய காலத்தில் ஒரு வழக்கத்திலிருந்து மற்றொரு வழக்கத்திற்கு மாறினபோது அதன் இரைச்சல் வெற்றியாக கேட்கவில்லையே. ஒருவேளை ராஜாவின் சார்பு; பின்பு கோவில் கட்சி; பின ஜமீன்தார் கட்சி; பிறகு சாராயம் வடிப்போர் கட்சி, இங்ஙனம் கட்சிபேதமும், லஞ்சம் வாங்குதலும், கூச்சலும், சக்தியீனமும் உடையதாய் அந்த வண்டி பக்கத்திற்குப் பக்கம் சரிந்து சரிந்து நடந்தது. சபைகளின் தாய் என்று சொல்லும் பிரிட்டிஷ் பார்லிமெண்ட்சபை முன்புஎத்தனை பிழைகள் செய்யவில்லையா? ஸ்வராஜ்யமென்கிற ஜீவநதியானது எந்த வேகத்தால் பிழையாகிற குழியில் போய் விழுகிறதோ அதே வேகத்தில் அங்கிருந்து கிளம்பி சனத்தேற்படும் இடைகளைத்தானே நீக்கிக்கொள்ளும் என்ற விஷயத்தில் எங்கள் தேசத்திலேயுள்ள ஜனங்கள் சந்தேகப்படவில்லை. எங்கள் இடறுகல்களை மாத்திரம் கருதி எங்கள் முன்னேற்றத்தை தடுக்கலாகாது என்கிறார்கள். இதை எல்லாம் கேட்ட இன்னொரு கூட்டத்தார் எங்கே சுயராஜ்யம் கொடுத்து விடுவார்களோ வென்று நினைத்து அய்யோ பாழாய்ப் போன தெய்வமே! அப்பா! அண்ணே! அடி ஆத்தே! எல்லாரும் வாருங்கள் ஆலோசனையில்லா அனியாயத்தைக் கண்டீர்கள். மதத்தான இங்கிலீஷ் நீதியால் ஒருவாறு தலைவிதியைத் துடைக்கலாமென்றிருந்தோமே. அதிகாரவர்க்கம்செய்யப்போகும் நீதியைப் பார்த்தாயா. யார் அவர்கள் புத்தியைக் கெடுத்தவர்கள். நரைமகனுக்கு இப்படி புத்திபோதா, காலசக்தியின் தூதாக பிரிட்டிஷ் ஜாதி இந்தியாவுக்கு வந்ததென்று பெரியவர்கள் சொல்லக்கேட்டோம். ஒரு கிராமம் அல்லது தங்கள் வகுப்பின் எல்லைக்குள் புத்தியைக் கட்டுப்படுத்தி இருப்போர் எப்படி சுயராஜ்யத்திற்கு லாயக்குடையவர்கள். அங்ஙனமில்லாமல் பெரிய ராஜ்ய சிந்தனையும் அதற்குத்தக்க செய்கையும் பெறுவாரானால் மானுஷீகத்தைப்பற்றி அவர்களுக்கு விரிந்த உணர்ச்சி உண்டாகிறது என்னும் தத்துவம் இவர்கள் விஷயத்தில் பொருந்தாது. உலகமெல்லாம் ஒரு தத்துவம் இவர்களுக்குத் தனித்தத்துவம். எப்படியெனில் எங்கள் இந்துமதக்கடவுளே உலகத்தில் எல்லவரும் சமமாக வாழுங்களென்று அநேக சந்தர்ப்பங்களில் வந்து உபதேசித்ததும் எங்கள், மகான்கள் அதையே வற்புறுத்திச் சொன்னதாகவும், எங்கள் இந்து மதக்கிரந்தங்களில் எழுதப்பட்டிருக்கிறது. அதை வாயில் சொல்லிக்கொள்ளுகிறார்களே ஒழிய எங்கள் விஷயத்தில் ஒரு சிறிதாவது காட்டுவதில்லை. எங்களுக்கு மதமே முக்கியம். கடவுளும் அவரை அடைந்தமகான்களும் எங்களுக்குப் பிரதானம. அந்த முக்கிய பிரதானமே எங்கள் தேசத்தில் கைவிடப்பட்டு எங்களை கொடுமையாய், அக்கிரமமாய், வஞ்சனையாய், கீழாக்கியிருக்கையில் நீங்கள் கொடுக்கும் சுயராஜ்யத்தில் எங்களுக்குப் பங்கு கொடுப்பார்களென்று நினைக்க என்ன ஏது விருக்கிறது. இந்து மதத்தைத் தவிர்த்து, உலகத்திலுள்ள மற்ற ஒவ்வொருமதமும் தன் தன் ஸ்தாபகர் அல்லது ஸ்தாபகர்களின் ஜீவிய சரித்திரத்தை ஆதாரமாகக்கொண்டு விளங்குகிறது. அந்தமதங்களிலே எங்களைப் போன்ற ஒரு பகுதியை கொடுமைப்படுத்தி காலின்கீழ் அழுத்திக்கொண்டிருந்தாலும் ஒரு அர்த்தமுண்டு. இந்து மதம் அப்படியல்ல. மகான்களாலும் அவதார புருஷர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டதன்று. அபௌருஷேயமாய் நித்தியதத்துவங்கள் ஆதாரமாகக் கொண்டு விளங்குகிறது. இப்பேர்ப்பட்ட மதத்தில் எங்களை காலின் கீழ்த் தேய்க்கலாமா? நித்திய தத்துவங்களை ஆதாரமாகக் கொண்ட சித்தாந்தங்களையுடைய இந்து மதம் போதிப்பதாவது, வேதம் உங்களுக்குக் கற்பிப்பதுபோல் மற்றவர்களும் உங்கள் தேகங்களின் அம்சங்களே என்றும், ஏழைகளும் பணக்காரரும் புண்ணியவான்களும் பாவிகளும் எல்லோரும் பிரம்மம் என்னப்பட்ட அகண்ட பரிபூரண சொரூபத்தின் அம்சங்களே என்றும், மன

தார உணர்ந்து எல்லாரிடத்தும் ஜீவகாருண்யத்துடன் பிரவர்த்திக்கவே வேதம் கட்டளையிடுகிறது. அப்பேர்ப்பட்ட இந்து மதத்தில் இப்பேர்ப்பட்ட கொடுமையின் பாவமே நீங்கள் இங்கு வந்தீர்கள், இன்னும் கேளுங்கள். சங்கரர் மலையாளத்துப் பார்ப்பனராயிருந்ததினால் அஞ்ஞானக் கொடுமை நீங்கவில்லை. காசியில் பகவானே வித்தியாசத்தைப் போக்க வந்து உபதேசித்ததையும், இவர்தான் ராமனே எனும்படி எங்களை அன்பால் மார்புறத் தழுவின ராமானுஜாசாரியார், (அவர் சிஷியன் எங்கள் குலத்திலொருவரை அருவருக்க அதைத்தெரிந்து சிஷியனால் எங்கள் குலத்தவரை தோளிலேற்றி அரங்கன் சந்நிதி கொண்டுவரச் செய்த கதையும்) எல்லாருடைய பந்தத்தையும் விலங்கையும் தகர்த்த உத்தம சுதியுடைய அனைவரும் அதிகாரமுண்டென்று கீதையால் சித்தாந்தப்படுத்தின கிருஷ்ணனையும் விடப் பெரியவர்கள் யார்? இவர்கள் பேச்சைக் கேட்காத குருத்துரோகிகள் உங்களை ஏமாற்றினாலும் நாங்கள் எப்படி நம்புவது. பொது ரஸ்தா ஸகலருக்கும் பொதுவென்று உங்கள் ராஜாங்கத்திலிருந்தாலும் சில நாளைக்கு முன்தான் சட்டசபையில் எங்களுக்கும் பாத்தியதை யிருக்கிறதென்றும் சொல்ல ஏதுவேற்பட்டது. அதை நம்பி ஒரு சமூகத்தார் போனார்கள். அடியும் உதையும்பட்டு 144 ஆல் தடுக்கவும் பட்டார்கள். காங்கிரஸ்காரர்களும் சுயராஜ்யக் கட்சிக்காரர்களும் என்ன பிரசங்கம் செய்தாலும் எங்களுக்கு உதையும் அடியும் நிற்பதில்லை. எங்களை மிதித்துக் கொண்டு உங்களை ஏமாற்றப்பார்க்கிறார்கள். உதைக்குத்தப்பவும் திருப்பி அடிக்கவும் போலீஸ் இன்ஸ்பெக்டர்களும் சுப்பிரண்டுகளும் நாங்களா? கோர்டுக்குப்போய் நியாயம் பெறப்போனால் பார்க்கும் முகமெல்லாம் வேற்றுமுகமாக இருக்கிறதே. வக்கீலிடம்போக நாங்கள் ஏழையிலும் ஏழை. நேராக உங்களிடம் வர எங்களால் முடியுமா? முடிந்தாலும் படிப்படியாக வரவேண்டுமென்று குமஸ்தா எழுதிவைப்பான், நீங்கள் கையெழுத்தும் போடுவீர்கள். எங்களவர்கள் ஏராளம்பேராக இருந்து போலீஸிலும் டிப்டிக் கலெக்கட்டருகவும் எங்களில் சிலரிருந்தால் அடியாவது இல்லாமல் செய்து கொள்ளுவோம். எங்களில் சிலரிருக்கும் பாங்களாவுக்கு வருகிறார்கள். நாங்கள் கண்டறியாத மரியாதைகளைச் செய்கிறார்கள். நாங்களும் மெய்மறந்து உயர்ந்த ஜாதிக்காரர்கள் நம்மிடம் இவ்வளவு பிரியம் காண்பிக்கிறார்களே என்று சந்தோஷமடைந்து காபி, டீ, பிஸ்கோத் சோடா, ரொட்டி முதலியவற்றால் மரியாதை செய்கிறோம். அவர்கள் காரியம் தீர்ந்தவுடன் எங்களை வீதியில் நடக்கக்கூடாது என்கிறார்கள். இனியும் அநேக காரணங்கள் சீர்திருத்தம் வழக்கப்படாததிற்கு சொல்லுவோம். நாங்கள் இப்பொழுது மைனர்கள் எங்களவர்களான ஐந்து கோடிப் பேர்களுக்கும் நீங்களே கார்டியனாக இருங்கள். வசந்தா நேரமாய் விட்டது, பாக்கி நாளைச்சொல்லுகிறேன்.

---

## மதுரை ஸ்ரீகுமரன் திருவருட்சங்கத்தின் பதினைந்தாவது ஆண்டு விழா.

ஷை விழா நிகழும் பிரபவ ஞு ஆவணி மீ 4, 5உ நடைபெறும். மதுரை சப்ஜட்ஜி ஸ்ரீமான் எ. கி. இரத்தினவேலுப் பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல்., தலைமை வகிக்க இசைந்துள்ளார். அறிவுடையார் பலரால் அரிய விஷயங்கள் உபந்நியசிக்கப்பெறும். அன்பர்கள் விஜயம் செய்யும்படி சங்க அதிபர் திரு. எஸ். கலியாணசுந்தரம் பிள்ளையவர்கள் கேட்டுக்கொள்ளுகிறார்.

## சமூக ஊழல்கள்.

"தமிழ் நாட்டில்"

ஸ்ரீ பு. செல்வராஜன் எழுதுவது.

நந்தமிழர் ஆரிய மத நாகரிகத்தையேனும் தூய தமிழர்களின் நாகரிகத்தையேனும் கைக்கொள்வது கிடையாது. ஆரியர்களின் வழக்க ஒழுக்கங்களையாவது அல்லது தமிழர்களின் வழக்க ஒழுக்கங்களையாவது பின்பற்றுவதும் கிடையாது. இரண்டையும் ஒன்றாகக் குழப்பி தம் வாழ்க்கையையே மூட எண்ணங்களிலும், செய்கைகளிலும் செலுத்தி பாழ்படுகின்றனர். அத்தகைய செய்கைகளிற் சிலவற்றை குறிப்பிட நேர்ந்ததனால் அதை கவனிப்போம்.

### தலயாத்திரை.

நந்தமிழர் காசி யாத்திரை யென்றும் இராமேஸ்வர யாத்திரை யென்றும் போதல் உண்டு. இந்த யாத்திரைகள் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் அது கற்பனைகளுக்கத் தக்கதாயும் தேசத்திற்கும் மனதிற்கும் புதிய புதிய உற்சாகத்தை யளிப்பதாயுமிருந்திருக்கலாம். இன்று மியற்கைக் கல்வியே சாலச் சிறந்ததாகலான், அக்காலத்து மூதறிவாளர் கற்ற கல்வியை விருத்தி செய்து கொள்வதற்கும் தேக சுகத்திற்கும் தலயாத்திரை ஏற்றதென நினைத்தனர். அக்காலத்தில் இக்காலத்தை போன்று ரயில், மோட்டார், போன்ற வசதிகளில்லாமையால் யாத்திரிகள் நடந்து போகவே நேர்ந்தது. ஆகையால் வழியில் காடுகளில் நிறைந்துள்ள அரிய மூலிகைகளின் ஸ்பரிசமும் இனிய காற்றும் இவர்களை ஆரோக்கியவான்களாகச் செய்து கொண்டிருந்தது. ஆயின் இக்காலத்தில் ஆங்காங்கு ரயில்களும்மோட்டார்களும் நிறைந்து அவைகளின் மூலம் யாத்திரை செய்ய நேருவதால் யாது பிரயோசனமுள்ளதென்பது நமக்கு விளங்கவில்லை. உண்மை பக்தியுடன் கடவுளை தரிசிப்பதற்காகவெனக் கூறினால் அவ்வளவு தூரம் சென்று ஆண்டவனை வணங்குவதைவிட தாமிருக்குமிடத்திலிருந்தே கடவுளை தியானித்தல் மேலான முறை யல்லவா? அங்கு செல்லும் யாத்ரிகர்களில் ஆங்காங்கு மோசங்களுக்கும் ஏமாற்றுதல்களுக்கும் இலக்காகி அவமானப்படுபவர்கள் எத்தனைபேருளர். இராமர் பிறந்ததாகக் கூறப்படும் புண்ணிய அயோத்தியில் யாத்திரிகர்களிடை அங்குள்ளவர்கள் நடந்து கொள்ளும் முறை விவரிக்கின் துக்கம் பெருகும் அவ்வளவு மோசமானது. அது இப்படியிருக்க இத்தகைய காலத்தில் நம் சகோதர சகோதரிகள் தலையிலும் கையிலும் மூட்டை முடிச்சுகளைச் சுமந்துகொண்டு இத்தகைய அவகேட்டுக்கு ஆளாகி வருதல் எவ்வளவு பரிதாபகரமானது.

### மொட்டையடித்துக் கொள்ளல்.

தமிழ் நாட்டில் அநேகர் திருப்பதி, திருத்தணிகை போன்ற தலங்களுக்கு யாத்திரை போதல் உண்டு. ஆனால் மேற்கூறிய தல யாத்திரையைப்போன்றதன்று இது. ஏனெனில் இதற்கு பிரார்த்தனை செய்துக் கொண்டதன் பேரில் யாத்திரை செய்வோரின் தொகையே அதிகம். இந்த யாத்திரை யாதுக்கெனில், ஒருவனுக்கோ ஒருத்திக்கோ வரும் வியாதிகளுக்குக் கர்த்தா கடவுளெனக் கருதும் கல்லார் சிறிதும் யோசியாமல் ஒழுங்கில்லாத பல மாதிரி பிரார்த்தனைகளைச் செய்து கொள்வதுண்டு. அதில் குடும்பத்தோடு யாத்திரை செய்து தலையை மொட்டையாக சிரைத்துக் கொள்ளல், அடிதண்டம் போடுதல், பிச்சை யெடுத்தல், வேப்பஞ்சீலை யுடுத்தல், கொடை கலியாணம் செய்வித்தல் போன்ற பிரார்த்தனைகளே தலையாயன. இவைகளில் ஒன்றாகிய யாத்திரை செய்து மொட்டை யடித்தல் என்பது பிரார்த்தனை செய்து கொண்ட ஒரு குடும்பமோ அல்லது தனி மனிதனோ வீட்டிலிருந்து மஞ்சள் ஆடை யுடுத்திக்கொண்டு (தம்பதிகளாயிருந்தால் இருவரின் ஆடைகளையும் முடிந்து கொண்டு) விசேஷ வாத்திய கோஷங்களோடும் கோயிற் குடைகளின் நிழலில் சிறு சிறு உண்டியல்களின் பணம் வசூலித்துக் கொண்டு வீதிகளில் ஊர்வலம் வருவர். மூன்று நாளோ அல்லது ஐந்து நாளோ (பிரார்த்தித்துக் கொண்டதுபோல) ஊர்வலம் வந்த பிறகு இங்கிருந்து ரயில் வாகன மேறி குறித்த ஊரைச் சேர்ந்து ஸ்வாமிக்கு அபிஷேகம் அலங்காரம் முதலியவை விசேஷமாகச் செய்து ஒன்றாக்குப் பத்தாகக் கூலி கொடுத்து தலையைச் சிரைத்துக் கொள்வர். பிறகு நாமங்களையோ, விபூதி சந்தனங்களையோ (விசேஷமாக நாமந்தான்) பூசிக் கொள்வர் அச்சமயத்தில் அம்மாதிரி மொட்டைகளாய்க் கோயிலை வலம் வரும் போது அம்மானை கதைகளிற் கூறிய மாதிரி (மொட்டை யடித்து கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கொண்டு பெருமாள் கோயில் ஊர் வலம் செய்வித்தல் அக்காலத்தில் ஒரு தண்டனையாம்.) நமக்குத் தோற்றுகின்றதோடு இவ்வளவு அறியாமையிற்கிடத்தற்கு என்ன செய்வது என்ற விசாரம் வந்து விடுகிறது. அவ்வாறு அவர்கள் யாத்திரை போய் மொட்டை யடித்துக் கொள்ளாமற் போனால் தங்களுக்கு ஏதோ பெரும் ஆபத்து வரும் என்றெண்ணுகிறார்கள். இவ்விதமாகத் தங்கள் தலைமயிர் கொடுத்து விடுவதனால் கடவுள் தமக்கு யாதொன்றும் செய்வதில்லையாம். அத்தலைமயிரோ சென்னையிலும் இதரபாகங்களிலும் விற்கப்படுகிறது. (அங்குள்ள அம்பட்டர்கள் அதைவிற்று பணமாக்கிக் கொள்ளுகின்றனர்) இதை யறிந்திருந்தும் ஜனங்கள் மறுபடியும் செய்ததையே செய்கின்றனர். இவர்கள் உண்மை அன்புக்கடவுளை அடைந்தானந்த மனுபவிக்கும் நாள் எந்நாளோ? ஆண்டவனே! அத்தகையவர்களுக்கு உன் அரிய சக்தியின் மூலம் உண்மையை விளங்க வைக்க மாட்டாயா? இதுவும் நினது திருவிளையாடல்களில் ஒன்று?

### பிச்சை யெடுத்தல்.

இது பிரார்த்தித்துக்கொள்ளும் சார்பாரின் ஒரு வேடிக்கையான பிரார்த்தனை. சில பெண்கள் தம் குழந்தைகளுக்கேனும் தன் கணவன்மார்களுக்கேனும் வியாதிகளேதாகி

(இதன் தொடர்ச்சி 17-ம பக்கம் பார்க்க)

## மூவருக்கு வாழ்த்து.

ஸ்ரீமான்கள் திருவாளர், கலியாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு, ராமசாமி நாயக்கர் அவர்களுக்கு நமஸ்காரம்.

பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்கும் பிராமணர்களின் அக்கிரமங்களைப் போக்குவதற்கும் மாபெரும் தலைவர்களெல்லாம்கூடி யேகமனதாய் காங்கிரசில் சேரவேணுமென்று தீர்மானம்செய்த செய்தியை "திராவிடன்" "குடியரசு" மூலியமாய் பார்க்க பெரும் விடுதலை யேற்படப்போகிறதென்றே சொல்லவேண்டும்.

இதுசமயம் காங்கிரசை ஒரு வகுப்பார் அதாவது அய்யங்கார் திருக்கூட்டத்தார் தங்கள் இஷ்டப்படி யெப்படி உபயோகிக்கவேணுமோ அப்படி அப்படி உபயோகித்தும் வருவதைதகம் "குடி அரசு" பலதடவையோமுறை கண்டித்தும் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் சிறிதும் ஒன்றும் அறியாதவர்கள்போல் நடந்துவருவது கண்கூடாகயிருக்கிறது.

அய்யங்கார் திருக்கூட்டத்தார்கள் தேர்தல்காலத்தில்பாமரஜனங்களிடத்தில் "யெங்களை தங்கள் பிரதிநிதியாக தெரிந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்புங்கள்நாங்கள் சட்டசபையில்போய் அமர்ந்ததும் முதல்வேலை இரட்டையாட்சியை ஒழித்து மந்திரிசபை அமைக்காதிருக்கும்படிசெய்கிறோம்" என்று சொல்லி திருவோடுதாங்கி ஓட்டுவாங்கி அய்யங்கார் திருக்கூட்டம் இரட்டை ஆட்சிக்கு துணைபுரிந்தும் மந்திரிசபைக்கு ஆதரவளித்தும் கௌஹாத்தி தீர்மானத்தை அலக்ஷியம் செய்தும் நடந்துவருவது ஜனங்களுக்கு வெள்ளிடை மலைபோல் விளங்கிவிட்டது. புலியைப்போலுள்ள அய்யங்கார் கூட்டம் பசுவைப்போலுள்ள போர்வை போர்த்துக்கொண்டு பாமரஜனங்களை மோசஞ்செய்வது யினி முடியாது.

இதுவரையில் திருக்கூட்டத்தார் செய்துவந்த நயவஞ்சக ஆட்சியை ஜனங்கள் உணராதிருந்ததற்கு காரணம் உங்கள் மூவரின் கொள்கை பற்பல திறப்பட்டிருந்ததே. தாங்கள்மூவரும் ஒருதுறையில் யிறங்கி வேலைசெய்யும்படி யேற்படுத்திய கடவுளின் செயலை யெப்படி போற்றுவதென்று தெரியாது திகைக்கிறோம். யிதுசமயம் நமது பாரதநாடும்பாரத மக்களும் அடையும் கஷ்டத்தை நீக்கும்பொருட்டாகயேற்பட்ட தங்கள் மூவருக்கும் நீடித்த ஆயுளை தந்தும் நம் சகோதரர்கள் பிராமணன் என்ற பாசக்கயிற்றால் கட்டுப்பட்டிருக்கும் கட்டை அறுத்தும் சமத்துவத்தையும் சுயமரியாதையையும் நிலைநாட்ட பாடுபட்டுவரும் வைக்கம் வீரரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் நீடித்த ஆயுளுடன் அவர்களின் யெண்ணம் ஒருநிலைப்பட்டதாகயிருக்கும்படியும்காத்துரக்ஷித்துவரும்படியாகயெல்லாம் வல்லயிறைவனையிறைஞ்சுகிறோம்.

கோயம்புத்தூரில் மாபெருந்தலைவர்கள் யெல்லாம் ஒன்றுகூடி பிராமணரல்லாதார் யாவர்களும் காங்கிரசில் சேரவேணுமென்று முடிவுசெய்யப் போகிறார்களென்ற செய்திகள் கேள்விப்பட்ட சில பார்ப்பான்கள் கூடி தலைவர்களுக்குள் பிரிவு யேற்படுத்த பலவித சூழ்ச்சிகள் செய்தும் அது பலிக்காது போய்விட்டது. ஆகவே அவர்களுக்கும் அவர்கள் ஜாதி அகங்காரத்திற்கும் அழிவுகாலம் கிட்டிவிட்டது யென்பது திண்ணம்.

பிராமணரல்லாத தலைவர்கள் யாவர்களும் ஒன்றுசேர்ந்து நமது பாரதநாட்டு மக்கள் யாவர்களும் ஒன்று யென்பதையும், ஒரே தாயின் வயிற்றில் உற்பத்தியானவர்கள் யென்பதையும்விளக்கி ஜனங்களின் குருட்டு யெண்ணத்தை நீக்கி சமத்துவத்தை நிலைநாட்டும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். நமஸ்காரம்.

க. வேங்கடாஜலபதி,
சிங்கப்பூர்.

## நாலாவது மஜ்லிஸ்உல் உலாமா கான்பரன்ஸ்.

திருச்சியில் நாளது வருஷம் செப்டெம்பர் மாதம் 17, 18-ந் தேதிகளில் நடைபெறும்.

வட நாட்டில் பெரிய மதபிரசாரகரும், போசுகாரும் ஐக்கிய மாகாணத்து அஜம்கார் வாசியுமான மௌலானா மௌலவி சையத் ஷா சுலைமான் நாதவி சாயபு அவர்கள் மகாநாட்டில் தலைமை வகிப்பார்.

ஷை கான்பரன்ஸ் விஷயமாய் வேலை செய்யவும் நிதி வசூலிக்கவும் கான்பகதூர் பி. கலிபுல்லா சாஹிபு, M. A. B. L., கான்சாஹிப், N. M. காஜாமீன சாஹிப், ஜனாப் T. M. பீர்மஹமத்கமால் சாஹிப் முதலியவர்கள் திருச்சியிலிருந்து தஞ்சாவூருக்கு புறப்பட்டு விட்டார்கள். காரியதரிசியும் இவ்வூரில் பிரபல வர்த்தகருமான ஜனாப் நூர்முகமத் அதிராம பட்டிணம் பேஷ் மௌல்வி ஷைகுன்னு அஷ்மதலெவி சாஹிபு அவர்களைச் சேர்த்துக்கொண்டு [illegible] விஷயமாய் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். ஷை கான்பரன்ஸ் மிகவும் சிறப்பாக நடைபெற்று வெற்றியடையுமென்று நம்புகிறோம் என்று காரியதரிசி எழுதுகிறார்.

## மதுரை ஸ்ரீ குமரன் திருவருட் சங்கத்தின் பதினைந்தாவது ஆண்டு விழா.

ஷை விழா நிகழும் பிரபவ ஸு ஆவணி மீ 4, 5உ களில் நடைபெறும். அக்காலத்து மதுரை சப்ஜட்ஜ் ஸ்ரீமான் எ. வி. இரத்தினவேலுப் பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல். தலைமைவகிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். நலமிக்க அறிவுடையார் பலரால் அரிய பெரிய விஷயங்கள் உபந்நியசிக்கப்பெறும். நண்பர்கள் குழாங்களுடன் விஜயம் செய்யும்படி சங்க அதிபர் திருவாளர் எஸ். கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள் கேட்டுக்கொள்ளுகிறார்.

## கூட்டு வாக்காளர் தொகுதியின் தீமைகள்.

### முஸ்லீம்களுக்கு ஒரு எச்சரிக்கை.

தனிவாக்காளர் தொகுதிகள் முஸ்லீம்களுக்கு இன்றியமையாதவை.

"லைபுல் இஸ்லாமிக்"

ஜனாப், எம். டி. நிஜாமீர், எம். ஏ. எழுதுகிறார்.

தனி வாக்காளர் தொகுதிகள் சென்ற 30, 40 வருஷமாக பஞ்சாப் மாகாணத்தில் அநேக முனிசிபல் சபைகளில் இருந்து வருகின்றன. தனி வாக்காளர் தொகுதிகள் சமூக வேற்றுமைகளையும் சமூக சச்சரவுகளையும் அதிகப்படுத்துகின்றன வென்றாவது அல்லது கூட்டுத்தொகுதி கையாளப்பட்டால் சமூக வேற்றுமைகள் குறைந்து சமூக சச்சரவுகள் குறையுமென்றாவது ஒருவரும் துணிந்துகூற முடியாது. லாகூரிலும், அமிர்தசரஸிலும், தனி வாக்காளர் தொகுதிகள் பல ஆண்டுகளாக இருந்து வருகின்றன. ராவல்பிண்டியிலும், ஸியால்கோட்டிலும் எப்பொழுதும் கூட்டுத்தொகுதியே இருந்துவருகின்றது. சமூக சச்சரவுகளுக்கும், கலகங்களுக்கும் தனிவாக்காளர் தொகுதிகளாவது அல்லது கூட்டுத்தொகுதிகளாவது காரணமென்று யார்தான் துணிந்து கூறக்கூடும் ?

மின்டோ மார்லி சீர்திருத்தங்கள் இந்தியாவிற்கு வழங்கப்பட்ட சமயத்தில் தனி வாக்காளர் தொகுதிகள் வேண்டுமென முஸ்லீம்கள் வற்புறுத்தினார்கள். முஸ்லீம்களுடைய கோரிக்கை நீதியானதென்பதையும், நியாயமானதென்பதையும் முஸ்லீம்களல்லாதார் ஒப்புக்கொண்டு லக்னோ ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

### ஹிந்துக்களுக்கும் நன்மை.

தனிவாக்காளர் தொகுதியால முஸ்லீம்களுக்கு மட்டும் நன்மையும் பிரயோசனமுமிருப்பதாக கூறிவிடக்கூடாது. முஸ்லீம்கள் தங்களுடைய சுபநலத்தையும், சுயநன்மையும் கருதியே தனிவாக்காளர் தொகுதியை வற்புறுத்துகிறார்களென்றும் முஸ்லீம்கள் நாட்டின் நன்மையை நாடவில்லையென்றும் கூறிவிடுதல் கூடாது. இவ்விஷயம் மிகவும் சிக்கலான பிரசினையாகும். மிக்க ஆலோசனையுடனும் ஜாக்கிரதையுடனும் கவனிக்க வேண்டிய விஷமாகும். இந்திய நாடானது தன்னுடைய ராஜீய ஸ்வதந்தரங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஒரு மாறுதலை அடைந்து வரும் இக்காலத்தில் இந்திய சமூகத்தினர்க்கு எல்லோருக்கும் நன்மை பயக்கக்கூடிய வழியிலேயே மாறுதல்கள் ஏற்படவேண்டும். ஒரு சமூகத்தினருக்கு நன்மையும் மற்றவர்களுக்கு பாதகமும் ஏற்படக்கூடிய முறைகளை கையாளக்கூடாது. ஒரு சமூகத்திற்கும் மற்ற சமூகத்திற்கும் இடையில் வித்தியாசத்தையும் வறுமையையும் உண்டாக்கக்கூடிய முறைகளை கையாளக்கூடாது. ஒருநாட்டில் வசிக்கும் எல்லா சமூகத்தினரும் ஓர் விதமான

சம அந்தஸ்தையும் நிலைமையையும் அடைந்தாலொழிய நாட்டில் ஆட்சியும் அரசாங்கமும் செவ்வனே நடைபெற முடியாது.

### பிராமணர்களின் கொடுமை.

பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியா மீது அன்னியர்கள் படையெடுக்கும் பொருட்டு இடங்கொடுத்தது எது? நாட்டிலிருந்த சமூக வித்தியாசங்களே யொழிய வேறு ஒன்றும் அல்ல. ஒரு சமூகம் படித்தும் மற்ற சமூகம் படியாமல் அந்தகாரத்தில் மூழ்கியும் ஒரு சமூகம் செல்வத்தில் மிதந்தும் மற்ற சமூகம் வறுமையில் மிதந்தும் இருந்த நிலைமைதான் சமூக வேற்றுமைகளை உண்டாக்கி வைத்தது. பிராமணர்கள் தங்கள் மதத்தைச் சேர்ந்த சிலரை பறையர்களென்றும் தீண்டாதார்களென்றும் வைத்து சமூக வேற்றுமைகளை உண்டாக்கி வைத்தார்கள். முஸ்லீம்கள் இந்திய நாட்டின்மீது கொண்டிருந்த ஆதிகத்தினுடையவும் செல்வாக்கினுடையவும் காரணமாக பிராமணர்கள் உண்டாக்கி வைத்த இந்த நிலைமையை ஒழித்து சமூக சமத்துவத்தை உண்டாக்கிவைக்க முடிந்தது. சென்ற 150 வருஷ காலமாக இந்தியாவில் இருந்து வரும் பிரிட்டிஷ் ஆட்சியும் இதேவிதமாகத்தான் செய்திருக்கிறது. பிராமணர்கள் தனியே ஒதுங்கி நின்று சமூக வேற்றுமையை உண்டாக்கி வைக்கும் முயற்சியானது கரையான்போல் இந்திய சமூகமென்னும் மரத்தின்வேரை பற்றி மரத்தை அடியோடு வீழ்த்த முயற்சி செய்து வருகின்றது. பிரிட்டிஷ் ஆட்சியானது பணக்காரர்களை அதிக பணக்காரர்களாகவும் ஏழைகளை அதிக ஏழைகளாகவும் செய்து வருகின்றது. இந்நிலைமையில் முஸ்லிம்கள் பிரதினமும் ஏழ்மையென்னும் சமுத்திரத்தில் ஒவ்வொரு அடியாக கீழே போய்க்கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்கள் ஜட்காவண்டி ஓட்டிகளாகவும் பியூன்களாகவும் தண்ணீர் தூக்கிச் செல்லுபவர்களாகவும் விறகு பிளப்பவர்களாகவும் இருக்கின்றார்களே ஒழிய வேறொன்றையும் காணோம். இப்பரிதாபகர நிலைமையில் தனி வாக்காளர் தொகுதியானது முஸ்லிம்களை தங்கள் சுயமதிப்பை உணரச் செய்து மேற்சொன்ன தங்கள் தாழ்ந்த நிலையைவிட்டு மாறுதலடையும்படி செய்துவருகின்றது. இப்பொழுதிருக்கும் தனிவாக்காளர் தொகுதியே இன்னும் கொஞ்சகாலத்திற்குக் கொடுத்துவைத்தால் முஸ்லிம்கள் தங்களுடைய நிலைமையை சீர்திருத்திக்கொண்டு இதர சமூகத்தினர்களைப் போல் முன்னேற்றமடைந்து இந்தியாவின் நன்மைக்காக பாடுபட முடியும். இந்தியாவின் ஆட்சிக்கு உதவிசெய்யக்கூடும். ஏழைகளாகவும் கல்வியற்றவர்களாயும் இருக்கும் முஸ்லிம்களை நாட்டின் நன்மையை உத்தேசித்தேனும் முஸ்லிம்களல்லாதார்களெல்லோரும் முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட வேண்டாமா? முஸ்லிம்களை அஞ்ஞானத்திலும் வறுமையிலும் வளரவிடாமல் தடுப்பது கல்வியிலும் செல்வத்திலும் முன்னடைந்துள்ள இதர சமூகத்தினர்களின் கடமையல்லவா?

இந்தியாவின் தற்கால நிலைமையில் முஸ்லிம்களுக்கு தனிவாக்காளர் தொகுதி அத்தியாவஸ்யமாக இருக்கின்றது. முஸ்லிம்கள் பலமடைவதற்கு தனிவாக்காளர் தொகுதிகள் வேண்டியிருப்பதல்லாமல் இந்தியாவின் இராஜ்ய பரிபாலனத்தில் சம அந்தஸ்தையும், சம பங்கையும் எடுத்துக்கொள்வதற்கு முஸ்லிம்களுக்கு போதுமான சக்தியும் திறமையும் வரவேண்டியிருக்கும் அவசியத்திற்காகவும் முஸ்லிம்களுக்கு தற்காலம் தனி வாக்காளர் தொகுதிகள் அத்தியாவசியமாக வேண்டியிருக்கின்றது.

### யாசகர்களின் தொல்லை.

யாசகத்தை மூன்று வகையெனப் பிரிக்கலாம் முதலாவது கருணையாசகம், இதுவே இம்மையிற் புகழும் மறுமையில் வீடும் அடைதற்கு ஏற்ற சாதனமாகும்.

இரண்டாவது தாட்சண்ய யாசகம், இஃது அறிமுகமானவர்களின் கட்டாயத்திற்கு செய்யப்படுவது.

மூன்றாவது கௌரவ யாசகம். வந்தவர்கள் வெள்ளை வஸ்திர தாரியாயும் சகலாபரண பூஷிதராயுமிருந்தால் மிக்க பணிவுடன் அவர்களுக்கு அளிப்பதாகும். மற்சொன்ன இருவழியிலும் பொருளை வாரி இறைத்தல் நம்மவர்களிடம் மிகுதியாக உண்டு. இன்னும் நிரேக முழுவதும் திருநீற்றைவாரி அணிந்து கொண்டு தண்டு கமண்டலம, உருத்திராக்கம முதலிய சிவ சின்னங்களோடும, பச்சோந்தியைப் போல் மறுமிடத்தில் குங்குமம், துளசிமாலை, பூணூல் முதலிய வைணவ பக்தராய்த் தோன்றியும், ஆசி கூறிவரும் அற்புதர்களைக் கண்டு விட்டாலோ சாட்சாத் ஈஸ்வரனே தங்கள் இல்லத்திற்கு எழுந்தருளி விட்டார் போல் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். அந்தோ! இது என்ன வேடிக்கை இம்மோசக்கார ஆசாமிகள் செய்யும் பாமர ஜாலத்தைக் கண்டறிதல் அசாத்தியமாயிருக்கிறது. இது நிற்க, வந்த ஆஷாட பூதிகளோ அகப்பட்டதைச் சுற்றிக்கொண்டு கம்பி நீட்டுவதுமன்றி நம்மை ஏமாந்த சோணகிரிகள் என்றும் நினைத்து விடுகிறார்கள். அவர்கள் நினைப்பதில்தான் குற்றமென்ன. இவ்வேஷதாரிகளுக்கு கொடுக்கும் பொருளை நல்வழியில் உபயோகிக்க இவர்களுக்கு மனம் இடந்தராததாலன்றோ? நிற்க பின்னும் சிலருடைய சாதுர்யத்தை விளக்குவோம். பெரிய புண்ணியம், என் தலைமகளுக்கு கல்யாணம், உங்களாலே தான் நடக்கவேண்டியதிருக்கிறது, மகாப்பிரபு! என்று ஒருவர் வருகிறார். இன்னொருவர் மஹாகும்பாபிஷேகம், பக்த விஷயம, ஏதாவது பொருளுதவினால் உங்களுக்கு மோட்சமுண்டாகும, இல்லாவிட்டால் பாபமே சம்பவிக்கும் என்று பயமுறுத்துகிறார். பிறிதொருவர் இறக்குந்தருவாயில் உள்ளவர் போல் நடிக்கிறார். இன்னும் பல வழிகளில் பொய்யும் புளுகையும் சொல்லிக்கொண்டு புறப்பட்டு விடுகிறார்கள். இங்ஙனம் நடித்துத்திரியும் சோம்பேறிகளுக்கு பொருள் வழங்குவதால் தீமையே வந்து சேரும். இதனால் உண்மையில் புண்ணிய காரியத்தைக் கோரியும், வறுமைப்பிணியாலும் அங்கவீனர்களாயும் வருபவர்களுக்கு இல்லையென்று கூறமுடியாது. ஆனால் கூடியவரையிலும் அகக்கண் கொண்டு நோக்கி சற்பாத்திரத்தில் வழங்க வேண்டுமென்பதே நேர்மை முறையாகும்.

வேடம் புனைந்து வெளிவரும் மோசக்காரர்களே உங்களிடம் பலமில்லையா? வெட்கமில்லையா? அறிவில்லையா? வேலை செய்வதற்கஞ்சி இரப்பதற்குத் துணிந்த உங்களைப் போல் வீணர்கள் வேறுண்டோ? ஆண்டவன் உங்களுக்குஞ் சரியான அவயவங்களை அளிக்கவில்லையா? நீங்கள் மனிதப்பிறவி எடுத்ததின் பயனை உணரவில்லையா? வறியோர்க்கு ஈதலே ஈகையன்றி உங்களைப் போன்ற தடியர்களுக்கு ஈதல் பெரும் பாவமன்றோ? சோம்பேறிகளே! நீங்கள் வாழும் வாழ்க்கையும் நல் வாழ்க்கையாகுமா? மானம் விற்றுப் பொருள் தேடும் வேசிவாழ்க்கையிலும் இழிவான தன்றோ! பிறரை வஞ்சித்து உயிர் ஓம்பும் மதியிலிகாள்! யாவரையும் வஞ்சித்தோமென்று மகிழாதீர்கள். நன்மையை உணருங்கள் ஈசன் உங்கட்கு நன்மதியளித்து நல்வழி புகுத்துவாராக!

"பாரத நேயன்"

### பார்ப்பன போக்கிரித்தனம்,

சென்ற வாரம் கோயமுத்தூரில் சங்கீதக் கச்சேரி ஒன்று கான சமாஜத்தின் ஆதரவில் முதலில் சங்கராச்சாரியார் மடத்தில் நடத்த உத்தேசித்திருந்தனர். பார்ப்பனரல்லாதார் கச்சேரி அங்கு நடத்த பார்ப்பனர்கள் அனுமதிக்கவில்லை. ஆதலால் தியாகராய ஹாலில் நடந்தது,

அதில் ப்ளாட்பாரம் (மேடை) போட்டு அதன்மீதிருந்து பார்ப்பனரல்லாத பாடகர் ஸ்ரீமதி மாணிக்கத்தம்மாள் நடத்தும் கச்சேரியை பார்ப்பனர் கேட்கக்கூடாதுஎன்று சில பார்ப்பனர்கள் பிடில்காரரையும் மிருதங்கக்காரரையும் ஸ்ரீமதி மாணிக்கத்தம்பாளையும் கேலி செய்து, கைகொட்டி இரைச்சல் போட்டு, பாடகருக்கு மாலைபோட எத்தனித்ததையும் "சூத்திராளுக்கு மாலையிடக் கூடாது" என்று தடுத்து குழப்பம்செய்து விட்டார்கள். இவ்விதம் ஸ்ரீமதி மாணிக்கத்தம்மாளையும் அவருடைய சகாக்களையும், சமாஜத்தையும் அவமானப் படுத்தினது பிராமணரல்லாத சமூகத்திற்கே செய்த அவமானமாகும். இவ்விதமாக பிராமணரல்லாதவர்கள் எவ்வழியிலும் முன்னேற வொட்டாமல் சகல வழிகளிலும இடையூறு செய்யும் பிராமணர்களின் போக்கிரித்தனத்தை சுயமரியாதையுள்ள எந்த பிராமணரல்லாதாரும் இனி சகித்துக்கொண்டிருக்க முடியாது என்று மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்த ஒரு நேசர் "உண்மை விளம்பி" எழுதுகிறார்.

# திருப்பூர் மார்க்கட்டு நிலவரம்.

## மந்திரிகள் சவுதம் புஷ்பம் கிராக்கி

குடும்ப சம்பாஷணை

பெண்சாதி லட்சுமியம்மாள்:— என்ன? இவ்வளவு நேரம், பெண்ணு ருக்மணிக்கு வளைகாப்பு என்னு உமக்குத் தெரியாதோ கடையில் சாமான் வாங்கணும். பூ வாங்கணும் மேளத்தாளைக் காணோம்.

பருஷன் திம்மப்பய்யர்:— வெறுமனே கத்தாதே காரியமில்லாமல் போவேனே?

பெ. ல. இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே? ஆபீஸ் இல்லையே பின்னென்ன காரியம்?

பு. தி. இன்று நமது சென்னபட்டணத்திலிருந்து மந்திரி வந்தா, அதற்கு இருக்க வேண்டியதாயிற்று.

பெ. ல. என்ன இவ்வூருக்கு தினம் மந்திரி வந்தா வந்தா என்று பொய் சொல்லுவீர், இப்போது ஒருமாதத்திற்கு முன்னாலே மந்திரிவந்தாரென்றீர், தினம் தினம் அவன் என்னத்திற்குவரா.

பு. தி. அடிபோடி பைத்தியமே அதிகாரிகள்வந்தால் எதுக்குவருவா காரியமில்லாமல் வருவரோ?

பெ. ல, அவாள் வந்தா வந்திட்டு போரா உமக்கு என்ன, நீர் இங்கே ஏனோ வாத்துக்கென்ன?

பு. தி நா, ஆத்துக்குக் வாலாமென்று தான் வந்தே, அவசரமாய் ஆபீஸிலிருந்து சேவகன் வந்தான், எஜமான் கூப்பிடுவதாகச் சொன்னான், போனேன், அங்குளங்கள் வாத்தியாரெல்லாம் இருந்தார் நானும் இருந்தே கொஞ்ச நேரம் ஆய்விட்டது.

பெ. ல ஏதாவது விசேஷ முண்டோ இல்லா விட்டா உமக்கும் மற்ற வாத்தியார்களுக்கும் என்ன வேலே?

பு. தி. சுகாதார மந்திரி வந்திருப்பதாயும் முனிசிபல் பத்திரம் வாசித்துக் கொடுக்கப் போவதாயும் ஆபிசில் எங்களையும் இருக்கும் படி சொன்னார், இருந்தோம் அதிலென்ன?

பெ. ல. முனிசிபல் ஆபீசில் நீங்களில்லா விட்டா ஊரில் கௌன்சிலரில்லையா வர்த்தகாளில்லையா.

பு, தி. அடிபோடி நமது சேர்மனவாள் அநேகருக்கு இன்விடேஷன் அனுப்பியும் ஒருவரும் வரவில்லை, பத்திரம் வாசிக்கும் போது அவர் மட்டும் இருந்தா நன்னா இருக்காது, அதற்காக எங்களையும் முனிசிபல் ஆபிசில் குமஸ்தாக்களையும் இருக்கும்படி சொன்னஇருந்தோம். என்ன முழிப்பே போச்சிப்போ.

பெ. ல. அதே இப்பமட்டு வர்த்தகாள் வரவில்லை? இரண்டு மாதத்திற்கு முன்னே அபிவிருத்தி மந்திரி வந்தாரே அப்பமட்டும் எப்படி யெல்லாம் வந்தா

பு. தி. ப்பிமேல்லு? என்பதுசரியாயிருக்கு, பிணமே! அப்போ மட்டும்யார் வந்தா? அப்போதும் நாங்களும் ஸ்டூடன்ஸ்களும் தான், ஆனால் அப்போ பள்ளிக்கூடத்தில், பத்திரம் வாசித்தார்கள் சேர்மனவாளுக்கு சிரமமில்லாமல் போய் விட்டது.

பெ. ல. இல்லையே 'ஹிந்து' "சுதேசமித்திரன்" பத்திரிகையில் கூட்டம் அதிகமாயிருந்ததாக படித்து நம்ம பையன் சொன்னானே

பு. தி. அடிபோடி பயித்தியக்காரி, பத்திரிகைக்கு தெரியாது, நீ என்ன வேணுமென்றாலு உளறு.

பெ. ல. நா எதை உளறுகிறே. நம்ம சுப்பராயன் தான் சொன்னான்.

பு. தி. உனக்கு அவனுக்கும் ரொம்பத் தெரியுமாக்கும், பத்திரிகைக்கு எழுதரவா, எப்படி வேணுமென்றாலும் எழுதலாம் யார் கேக்கிரா.

பெ. ல, அப்படியாசங்கதி, தேரின்போது சுப்பராய மந்திரி வந்த போது பெரிய கூட்டமிருந்ததாகப் படித்தானே அதுவும் பொய்யோ.

பு. தி. அது வாஸ்துவம், தேரிலேமாடு எருது வாங்கிரவா விற்கிறவா கண்காட்சிக்குவந்தவா எல்லோரும் வந்தா. அது பெரிய கூட்டம் என்று சொல்வானேன் அப்படிதானிருந்தது அப்போது மாத்திரம் மந்திரியை பார்க்க உள்ளூர்காரர் யார் வந்தா.

பெ-ல:—போரா. மந்திரிகள் ஏது அடிக்கடி வர்ரா?

பு. தி:—டாக்டர் சுப்பராயன் தேருக்கு, கண்காட்சிக்கு பரிசு கொடுக்கவந்தார். கனம் ரங்கநாத முதலியார்வாள் பருத்தி போக்குவரத்து சட்ட விஷயமாய் வந்தார். இன்று வந்த கனம் ஆரோக்யசாமி முதலியாரவாள் திருப்பூருக்கு குழாய் வைக்க வந்தார்

பெ. ல;— குழாயா? மகாராஜ நன்றாய் இருக்கணும. பகவானே ஆறு மாதமாய் தண்ணீர் சுமந்து சுமந்து தலை சொட்டையாய் போய் விட்டது. உஸ் ஸ்

மகன், எஸ். எஸ். எல். ஸி. சுப்பராமன்:— ஏண்டி வெறுமனே கத்துரே. குழாயாவது கிழாயாவது. குழாய் உங்கப்பா வீட்டு முதலாக்கும்.

பெ ல:—ஏண்டா! உங்கப்பா இப்ப சொன்னாரே குழாய்வைக்க மந்திரிவந்திருக்கிராண்ணு.

ம. சு:—அந்த பூலுக்கு என்னதெரியும்?

பு. தி:—நீதான் சொல்லேண்டா? நேக்கு ஒண்ணுந் தெரியாட்டா சொல்லேன்.

ம. சு:—(குசு குசு என்று) ஆகஸ்டு மாதத்திலே இவா பேரிலே நம்பிக்கையில்லை என்று தீர்மானம் ஒன்று வருது. போன மீ கோயமுத்தூரிலே ஜுத்திரர் கான்பரன்சிலே ஒரு தீர்மானம் பண்ணியிருக்கிறது உனக்குத்தெரியும்ன்னே? அதிலே பட்டணத்திலே நம்மளவா இந்தமந்திரி வேணுமங்கரா. ஜுத்திரர் கூடாதென்கிரா பெரிய கூட்டத்தா. ஆகச்சே ஒத்தையிலிருந்து நமது ராமசாமி ஐயர் இவா எல்லாருங்கூடி கோயமுத்தூர் நம்ம செட்டியார், கவுண்டர் இவர்களைக்கொண்டு இங்கே ஒரு கூட்டம் நெக்ஸ்ட் சண்டே போடரா. அதுக்கு இந்த ஊர்காரரெல்லாம் இந்த மந்திரிகளே வேணுமென்ற ஒரு தீர்மானம் செய்யணும், அதற்காக இப்போ மந்திரிவந்து தண்ணீர் குழாய் வைக்கிறதாச் சொல்லுரா. அதைக் கேட்டு இந்த முண்டை ஆடுரா. யூண்டர்ஸாண்ட்...

பு. தி. இந்த ரகசியம் உனக்கார் சொன்னா?

ம. சு. என்ன ரகசியம் பிரமாதம். எல்லாரும் தான் சொல்லரா.

பெ. ல. எப்படியோ யாரோ இருக்கா போதாகுது பூக்கடை சாத்திடுவர். சீக்கிரம் போய் எவலாப் பூவும் வாங்கிவாரும்.

பு. தி. (கடைக்குப்போய் சும்மா திரும்பி வந்து) அடியே பூக்கடையில் ஒரு மொக்கு கூடக்கிடையாது எல்லாம் ஆய்விட்டது

பெ. ல. ஐயோ என்ன அநியாயம் யாரப் படிவாங்குரா? வளையகாப்புக்கு என்னசெய்ய வேண்டி அம்மா! என்ன அப்படி கிராக்கி?

பு. தி எல்லாம் முனிசிபாலிட்டிக்காரரே வாங்கிட்டா, மத்தியானம் கலால் மந்திரி வந்தபோதும் போகும்போதும் மாலைவேண்டியிருந்தது. கூடவந்தவாளுக்கும் போட வேண்டியிருந்தது. எல்லாம் ஆய்விட்டது.

பெ. ல. நான் பாத்தேனே மந்திரி போன பிறகு கடையிலே கொஞ்சம் இருந்ததே,

பு தி. மறுபடியும் டாக்டர் சுப்பராய மந்திரி அதே மெயில் வண்டியில் கோயமுத்தூரிலிருந்து வந்தார். அவருக்கு வேணுமண்ணோ? வாங்கிவிட்டா, அவரும் ரயிலில் தானே போரார்.

பெ. ல. உஸ் இனி என்ன செய்ய. தொலையட்டும், நாளைக்குக் கட்டாயம் கொடுக்கணுமென்று இன்றைக்கே கடைக்காரனிடம் சொல்லிவையும்.

பு. தி. கேட்டேன். முடியாதென்றிட்டான்.

பெ ல. ஏன் முடியாதாம்.

பு தி. நாளைக்கு மெயிலில் கனம் ரங்கநாத முதலியார் அபிவிருத்தி மந்திரி பட்டணம் போராராம் அவருக்கு மாலைபோடவேணுமாம், யாருக்கும் கொடுக்கக் கூடாதென்று முனிசிபாலிட்டியார் சொன்னார்களாம். கடைக்காரன் முடியாதென்கிறான்.

பெ. ல. இதென்ன எழவாயிருக்கு பூவுக்குஎன்னசெய்ய? அந்த மந்திரி இங்கெதற்கு மறுபடி வரா.

பு. தி. அவரிங்கே வருவதில்லையடி அப்படியே போராண்ணு சொன்னேனே.

பெ. ல. அப்படியே ரயிலிலே போவாளுக்கு மாலை எதுக்கு ரயிலில் போரவா வாரவாளுக்கு பூமாலை போடுவதெதற்கு?

பு. தி. போடி போரவா வாரவாளுக்கு எவனாவது போடுவனோ, மினிஸ்டர் ஆகச்சே போடுரா.

பெ. ல. யாரானாலென்ன, அப்படி யென்னவந்தது?

பு. தி. ஆமாண்டி நீ சொல்ராய் யாராவது சும்மா போடுவார்களா?

பெ. ல. பின்னென்ன?

ம. சு அப்பா, அப்பா, அவள் கிடக்கிற, இத்தையெல்லாம் பொம்மனாட்டிகிட்ட பேசாதே. போடி வாயைமூடிட்டு, எதை எதை பேசவேணுமோ அதைப்பேசணும். எம் போகுரா, எம் வர்ரா, என்னசேதியென்று சும்மா வெறுமனே கேட்கிறாள். அவர் எதுக்கோவர்ரா, இவ்வா எதுக்கோ போட்ரா. உனக்கென்ன கேக்கென்ன?

## 'மகாத்மாவும் வருணாச்சிரமமும்' என்ற தலைப்பில் சென்ற வாரம் எழுதினதற்கு ஆதாரமான மகாத்மாவின் பிரசங்கக் குறிப்பு.

மகாத்மா காந்தி வருணாசிரமத்தைப்பற்றி மைசூரில் பேசியதாக சென்றவாரம் குடியரசில் குறிப்பிட்ட விஷயத்தின் விபரமாவது:- "..................... தீண்டாமையென்னும் கொடிய வழக்கம் இந்து சமூகத்திலிருந்து விலகுவதற்கு முன்னால் சுயராஜ்யம் சித்திக்குமென்கிற நம்பிக்கை எனக்கில்லை. இந்து மதத்தில் நான் அறிந்தமட்டில் வருணாசிரம தர்மம் ஒரு வருணத்தைச் சேர்ந்தவர்கள் மற்றொரு வருணத்தாரைவிட உயர்ந்தவர்களென்று நினைக்க இடமில்லை

ஒவ்வொரு வருணத்தாருக்கும் ஒவ்வொரு தர்மம் விதிக்கப்பட்டிருக்கிறது. அவரவருக்கு விதிக்கப்பட்ட தர்மத்தை அந்தந்த வருணத்தார் செய்யும்போது அவர்கள் உயர்ந்தவர்களாகிறார்கள். பிராமணனுக்கு சில தர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அவன் சரிவர நிறைவேற்றும் போது அவன் உயர்ந்தவனாகிறான். ஜனசேவையே பிராமணனுடைய முக்கிய தர்மம். எளியவர்களைப் பாதுகாப்பது க்ஷத்திரியனுடைய தர்மம். அந்த தர்மத்தை அவன் செய்யும்போது அவன் மற்றெல்லோரிலும் மேம்பட்டவனாகிறான் இம்மாதிரியே இதர வர்ணத்தினர்களும் தத்தம் தர்மங்களை கடமைகளைச் செய்கையில் அவர்கள் உயர்ந்தவர்கள் ஆகிறார்கள்.

(இந்த இடத்தில் வைசியர், சூத்திரர் என்கிற வார்த்தை மகாத்மாவே சொல்லவில்லையோ அல்லது "சுதேசமித்திரன்" பிரசுரிக்கவில்லையோ தெரியவில்லை.)

இப்படியிருக்கையில் உயர்வு தாழ்வு எங்கிருந்து வருகிறது. வருணாசிரம தருமமானது சமுதாயநலத்தை ரக்ஷிப்பதற்காகவே ஏற்பட்டது. மற்றபடி ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரை ரக்ஷிப்பதற்கு ஏற்பட்டதன்று"

இந்த வாக்கியங்கள் சுதேசமித்திரன் பத்திரிகையில் காணப்படுகின்றன.

—:0:—

பெ. ல. ஆமாண்டா இப்போ பூ எங்கே?

ம. க. அப்பா, மத்தியான வண்டியிலே [illegible] ஈரோட்டுக்காவது [illegible] தாராபுரத்துக்காவது போய் வாரேன்னு சொல்லேன. சரி போடா பூ வரும் [illegible] என்னு பேசுகே.

பெ. ல. சரி [illegible] இருக்கட்டும் [illegible] படுகிறது தெரிகிறது.

பு. [illegible] (என்று [illegible] புறப்படுகிறார்.)

(இன்னும் வரும்)

## தனவைசிய நாடும் பார்ப்பனரும்

(ஸ்ரீ. ந, வீரப்பன்)

பார்ப்பனக்கொடுமைகளுக்கு பேராதரவு அளித்து வருவது தனவைசிய நாடு என்பதை அனைவரும் அறிவர். இமயம் முதல் குமரிவரை பார்ப்பனர் பார்ப்பனருக்கென்று சத்திரங்கள் ஏராளமாகக் கட்டியிருக்கின்றனர். ஆலயங்களில் பெரும்பாகம் தனவைசிய மக்களால் ஆக்கப்பட்டனவே யாகும். புரோகிதர்கட்கு அள்ளி வழங்கும் பணமும் வைதீக பார்ப்பனர்கட்கு கொடுக்கும் பணமும் அளவிலடங்கா. மேலும், பார்ப்பனர்களை தங்கள் காரியஸ்தர்களாக வைத்திருக்கின்றனர். அதன் பொருட்டும் மாதந்தோறும் ஏராளமான பொருளைப் பார்ப்பனர்கட்கு கொடுத்து வருகின்றனர். இவ்விதம் பலவேறு வழியாகத் தங்களைக் காப்பாற்றிவரும் தனவைசிய மக்களை பார்ப்பனர்கள் எவ்வளவு தூரம் மதிக்கிறார்கள் என்பதை எண்ணுகின்ற பொழுது சுயமரியாதையுள்ள அன்பர்களின் உள்ளம் துடிக்குமென்பதில் ஐயமின்று.

பார்ப்பனக் கொடுமைகளை ஒழிக்கவேண்டுமென்ற உணர்ச்சி உண்டான காலமுதல் அவ்வியக்கத்தில் சில தனவைசிய இளைஞர்கள் சேர்ந்திருந்தார்களாயினும், அவ்வமயம் தனவைசிய நாட்டில் பார்ப்பனக் கொடுமைகளை ஒடுக்கும் இயக்கம் உரம்பெற்று திகழவில்லை. நாளா வட்டத்தில் அவ்வுணர்ச்சி வாலிபர்களின் மனத்தை யீர்த்தது எனினும பகிரங்கமாக முன்வந்து அவ்வியக்கத்தை வளர்க்க ஒருவரும் துணியவில்லை. சில அன்பர்கள் அவ்வியக்கத்தின் உண்மையினை பத்திரிகை வாயிலாகவும் இளைஞர்கள் உள்ளத்தில் பதியுமாறு செய்து வந்தனர். இவ்வுணர்ச்சி இளைஞர் உள்ளத்தில் இடம் பெறும் தருவாயில், சில பார்ப்பனர்கள் அவ்வியக்கத்தைக் குறித்து துர் எண்ணம் உண்டாகுமாறு செய்தார்களாயினும், இளைஞர்களது மனம் ஒருவழியிலும் செல்லாது தத்தளித்துக் கொண்டிருந்தது.

### வைக்கம் வீரர்.

இந்நிலையில் வைக்கம் வீரரும், சுயமரியாதை இயக்கத்தின் தலைவருமான திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் தனவைசிய நாட்டிற்கு விஜயம் செய்தார்கள். அவர்களை திரு. சொ. முருகப்ப செட்டியாரும், அவர் பத்திரிகையாகிய "குமரனும்" ஆதரிக்கவே சில இளைஞர்கள் நாயக்கரவர்களை எதிர்நோக்கி நின்றார்கள்.

அன்பர் நாயக்கரது வரவால் தனவைசிய நாடு புத்துணர்வு பெற்றுவிட்டதென்றே கூறுதல் வேண்டும். பார்ப்பனர்களது கொடுமைகளுக்கு ஆதரவளித்துவந்த தனவைசிய நாடு விழிப்புற்று விட்டது. நாயக்கரது அன்பு ததும்பும் சொற்பொழிவுகள் தனவைசியரது மனத்தைக் [illegible] தனவைசிய இளைஞர்கள் [illegible] அதிக விருப்புடையோராய்க் காணப்படுகின்றனர். அன்பர் நாயக்கர் [illegible] [illegible] மீதும் சுயநலப் பார்ப்பனர்களால் கட்டிவிடப்பட்ட புளுகுகள் நாயக்கரது வருகையால் வெட்ட வெளிச்சமாகி விட்டன பார்ப்பனர்களது மாயைகள் ஒன்றன்பின்னொன்றாக தன வைசியர்களது கண்களுக்குப் புலனாகி வருகின்றன. அக்கொடுமைகளினின்றும் நீங்கி சுயமரியாதையோடு வாழ தனவைசியர்கள் எண்ணுகின்றனர். இதனைக் கண்டு பொறுக்காது சுயநலப் பார்ப்பனர்கள் இவ்வியக்கத்தைத் தொலைக்க முயற்சி செய்கின்றனர். தனவைசிய நாட்டிலுள்ள புரோகிதர்கள் தங்களது பிழைப்பை நிலைநிறுத்தும் பொருட்டு ஒரு சங்கம் அமைப்பதற்கு முயற்சிகள் செய்துகொண்டிருக்கின்றனர். புரோகிதர்கள் சங்கம் அமைத்து தங்கள் பிழைப்பை நிலைநிறுத்த எண்ணுவது பேதமையே அன்றி வேறன்று. தனவைசியர்களை யேமாற்றிய காலம் மலையேறிவிட்டதென்பதை பார்ப்பனர்கள் உணரவேண்டும். ஒரு சில பெரியோர்கள் ஆதரவளிப்பினும் வருங்கால மக்களாகிய இளைஞர்கள் பார்ப்பன கொடுமைகளுக்கு இடங்கொடுக்க மாட்டார்களென்பது திண்ணம்.

சுயமரியாதை என்னும் வித்து, இளைஞர்களென்னும் வயலில் பயிரிடப்பட்டிருந்தது. அப்பயிருக்குக் காலமழையாக நாயக்கரது வரவு பொழிந்த தென்பதை எவரே மறுக்கமுடியும்? எதிர் காலத்தில் தனவைசியநாடு சுயமரியாதையோடு வாழுமென்பதில் சந்தேகமில்லை. தன வைசிய நாட்டிலுள்ள பெரியார்களும் இவ்வியக்கத்துக்கு ஆதரவளிக்க முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நாட்டிலுள்ள பெண்மணிகள் தெய்வத்தினிடத்து மிகுந்த பக்தியுடையவர்கள். அன்னார் பார்ப்பனர்கட்கு கொடுத்ாலன்றி இறைவனுக்குத் திருப்தி உண்டாகாதென எண்ணி யிருந்தனர். நாயக்கரது சொற்பொழிவை செவிமடுத்த பின்னர் பார்ப்பனர்களின கொடுமைகள் அவர்களுக்கு நன்கு புலனாகிவிட்டன. எனவே நாயக்கரது வரவால் தனவைசிய நாடு புத்துணர்வு பெற்று சுயமரியாதையை பொன்னேபோற் போற்ற முன்வந்திருப்பது எதிர்கால நல்வாழ்வின் குறியைக் காட்டுகின்றது. சுயமரியாதை வாழ்க! பார்ப்பனர் கொடுமைகள் மாய்க!

("தமிழ் நாடு")

## பம்பாய் மாகாண பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

### திரு. எ. இராமசாமி முதலியார் விஜயம் செய்வார்.

சென்னை ஆகஸ்டு 11.

திரு. எ. இராமசாமி முதலியார் அவர்கள் இம்மாதக் கடைசியில் பம்பாய் மாகாணப் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு விஜயம் செய்வதற்காகவும் அங்குள்ளோருக்கு [illegible] [illegible] தீர்மானத்தை [illegible] தற்காகவும் பம்பாய்செல்ல சென்னையைவிட்டுக் கிளம்புவார். அவர் அம்மாகாணத்தின் [illegible] தெரிந்துகொண்டு [illegible] செய்யப்பட [illegible] பெறவும் [illegible].

# பொழுது புலர்ந்தது

## பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்.

(சென்னை தேர்தல்)

தேர்தல்களைப்பற்றி அடிக்கடி நாம் எழுதிவந்திருக்கிறோம். அதாவது தேசத்தின் பெயரையும் காங்கிரசின் பேரையும் சொல்லிக்கொண்டு பார்ப்பனர்கள் பதவி பெறுவதற்காகவும், அவர்களுக்கு கிடைக்காது என்று தோன்றும் சமயங்களில் உண்மை சூத்திரர்களான அவர்கள் அடிமைகளுக்காவது கிடைக்கும்படி பார்க்கவுமே இதுவரை வேஷம் போட்டுக் கொண்டு வந்தார்கள். இப்போதும் போடுகிறார்கள், இனியும் போடப் போகிறார்கள்.

இதைப் பற்றி சுமார் 5, 6 வருஷ காலமாகவே நாம் வாதாடி வருகிறோம். நாம் காங்கிரசிலிருந்த காலத்திலும் ஒவ்வொரு சமயத்திலும் காங்கிரசின் பேரால் யாரும் தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்றும் சொல்லி ஒவ்வொரு தீர்மானத்தையும் எதிர்த்து அனேகமாக வெற்றி பெற்றுக் கொண்டே வந்தோம். கடைசியாக ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடும் கல்யாணசுந்தர முதலியாரும் பார்ப்பனர்களுக்கு உடந்தையாகி காஞ்சிபுரம் மகாநாட்டில் இதை நிறைவேற்ற அனுமதித்து விட்டார்கள். அந்தசமயத்தில்கூட நமக்கு அதை எதிர்த்துப் பேச சவுகரியம் கொடுக்காமல் நாம் தண்ணீர் சாப்பிடுவதற்குள் இந்த தீர்மானத்தை பிரேரேபித்து ஆமோதித்து முடித்து விட்டார்கள் என்றும், நாம தண்ணீர் சாப்பிட்டு திரும்பிபார்த்ததும நம்மை எல்லோரும் பார்த்து, ஏமாந்துபோய் விட்டாயே என்று சிரித்தார்கள் என்றும் அப்போதே "குடி அரசில்" எழுதி இருக்கிறோம். அது முதல் காங்கிரசின் பேரால் தேர்தலுக்கு நிற்பது என்பதும், அதுவும் பார்ப்பனர்களுக்கு வேண்டியவர்களைத்தான் நிறுத்துவது என்பதும், வழக்கமாய் வந்து கொண்டே இருக்கிறது. அதற்கு முன்னால் கூட காங்கிரசின் பேரால் பார்ப்பனர்கள் தேர்தல் நடத்துவந்த நாம் ஆங்காங்கு போய் கண்டித்தும் வந்திருக்கிறோம. நமக்கு விரோதமாக பார்ப்பனரல்லாத பத்திரிக்கைகளும் கூட நம்மை கண்டித்து காங்கிரசுக்காரருக்கே ஓட்டு கொடுக்க வேண்டும் என்று எழுதிவந்தன. இந்த கொடுமைகளே நம்மை வகுப்பு வாரி தத்துவத்தை இன்னும் அதிகமாக வலியுறுத்தவும் செய்தன. அதற்கும் விரோதமாக அனேக பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளும்கூட எழுதியும்வந்தன. இவ்வளவும் இந்த 2,3 வருஷத்திய 'குடி அரசி'னால் வெளியாகி பார்ப்பனரல்லாதார் பத்திரிக்கைகளும் தலைவர்களும் உண்மையுணர்ந்து இப்போது தான் காங்கிரசுக்கு விரோதமாகக் கூட தேர்தல் பிரசாரம் செய்யவும் காங்கிரசுக்கு விரோதமாய் வெற்றி பெற்றவர்களை ஆதரிக்கவும், முன்வரக்கூடிய நிலைமை வந்திருப்பதோடு காங்கிரசுக்கும் காங்கிரசுக்காரர் என்போர்கள் செலவு செய்யும் பணத்திற்கும் விரோதமாய் பொது ஜனங்கள் ஓட்டு செய்யவும் முன் வந்து விட்டார்கள். இது ஒருபெரிய கண் விழிப்பு என்று தான் சொல்லவேண்டும்.

அதோடு கூட தொழிலாளர்கள் அரசியல் கட்சிகளில் சேரக்கூடாது. தொழிலாளர்களுக்கென்று தனிக் கட்சி இருக்கவேண்டும். தொழிலாளர்கள் தங்கள் தொழிலாளர் கட்சியின் பேராலேயே தேர்தலில் நிற்கத் தகுந்த யோக்கியதை அடையவேண்டும். அரசியல் காரர்களை நம்பக்கூடாது. அவர்கள் அயோக்கியர்கள். முதலாளிகளுக்கு திருட்டுத்தனமாய் உதவி செய்து தங்கள் சுய நலம் பெறுவதற்காக தொழிலாளர்களை ஏமாற்றுகிறவர்கள் என்றும் இந்த 4, 5 வருஷமாய் நாம சொல்லிக் கொண்டும் எழுதிக் கொண்டும் வருவது யாவருக்கும் தெரிந்திருக்கலாம். உதாரணமாக ஒரு காலத்தில் நாம காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாயிருக்கும் போது கோயமுத்தூரில் ஒரு தொழிலாளர் கூட்டத்தில் இம்மாதிரி பேசினதற்காக நம்முடைய வழிப்பயணச் செலவை அதாவது காங்கிரஸ் சம்பந்தமாய் நாம் சுற்றுப்பிரயாணம் செய்த பிரயாணச்செலவை ஒப்புக் கொள்ள முடியாது என்பதாக ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்காரும் வரதராஜுலு நாயுடுவும் ஒரு கமிட்டி மீட்டிங்கில சொன்னார்கள். அப்போதும் நாம இதையே தான் சொன்னோம்.

இன்றையதினம் தான் அது தொழிலாளருக்கும் மற்றும் தொழிலாள நண்பர்களுக்கும் நிஜமான நாளாயிற்று,

இப்போது எங்கு பார்த்தாலும் வரிசையாக காங்கிரசு அபேக்ஷகர்கள் என்போர்கள் தோல்வி அடைந்து வருவதும், காங்கிரஸ் அபேக்ஷகர்கள் அல்லாதவர்கள் மற்ற எந்த கட்சியாரானாலும் ஒரு கட்சியிலும் சேராதவர்களானாலும வெற்றி பெறுவதும் பத்திரிகைகளில் பார்த்து வருகிறோம. இந்நிலைமை நமது நாட்டில் ஏற்பட்டிருப்பதற்கு உண்மையாளர்கள் சந்தோஷப் படாமல் இருக்கவே முடியாது. நாட்டில் கொஞ்சமாவது கண்விழிப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதை யாவரும ஒப்புக்கொண்டுதான ஆகவேண்டும் இந்த விழிப்பை பாழாக்காமல் மக்களை மேலும் மேலும் கண் விழிக்கச் செய்தால் நாட்டையும், மக்களையும் வஞ்சகர்கள், அயோக்கியர்கள், சுயநலக்காரர்கள் கையிலிருந்து தப்புவித்த பலனை அடையலாம் என்பது நமது ஆசை.


உண்மையிலேயே சென்னைத் தொழிலாளர் சார்பாக வெற்றி பெற்ற ஸ்ரீமான் செல்வபதி செட்டியார் தேர்தலின் மூலம் நமக்கு புதிய ஊக்கம் உண்டாகிறது. நாம செல்வபதி செட்டியார்வெற்றி பெறமாட்டார் என்றும் வீணாய் தொழிலாளர்களுக்கு முதல் முதல் தோல்வி உண்டாகக்கூடாது என்றும் கருதி ஸ்ரீ செல்வபதி செட்டியாருக்கும் ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியாருக்கும் பின்வாங்கிக்கொள்ளும்படி கடிதம் எழுதினோம் ஏனென்றால் நாம் சென்னைக்கு சென்ற வாரம போயிருந்தபொழுது தொழிலாளர் தேர்தலைப்பற்றிதான் சில கனவான்களையும் அதில் ஈடுபட்டு உழைத்துக் கொண்டிருந்தவர்களையும் விசாரித்தோம. அவ்விசாரணையில் தொழிலாளர் பிரதிநிதி வெற்றிபெற முடியாதென்றும் எதிராளிகளால் ஓட்டர்களுக்கு தாராளமாய் பணம விநியோகிக்கப் படுகிறதென்றும், இதுவரையில் ஆயிரக்கணக்காய் செலவாகி விட்டதென்றும், இனியும் செய்யக்காத்திருக்கிறார்கள் என்றும் தெரிந்தோம். அதிலிருந்து நமக்கு நம்பிக்கையில்லாததால் இம்மாதிரி யோசனை சொன்னோம். அப்படி இருந்தும் இன்றையதினம் தொழிலாளருக்கு வெற்றி என்று பார்த்ததும் நாம் எவ்வளவுதூரம் மகிழ்ச்சி அடைந்திருப்போம் என்பது யோசிப்பவர்களுக்கு விளங்கும்.

ஸ்ரீமான் சக்கரைச் செட்டியார் வெற்றியில் மகிழ்ச்சிகொள்ளத்தக்க புதிய விஷயம் ஒன்றும் இல்லை. ஸ்ரீமான் 'டூடல்' முதலியார் இதற்காக எவ்வளவோ தூரம பார்ப்பனரல்லாதாரை வெம்மைபோட்டு வைத்தும் வீணாய் போய்விட்டதே என்று பரிதாபப்படாமல் இருக்கமுடியாது. மற்றபடி ஜனாப் அமீத்கான் தோல்வியிலும் அதிசயத்தக்க விஷயம் ஒன்றுமில்லை மற்ற தேர்தல்களும் சூதாடுவதுபோலவே இரண்டில் ஒன்று என்பதாக முடிந்திருக்கின்றன, எனினும் "காங்கிரஸ்" "தேசியம" என்பவைகளின் புரட்டு வெளியாய் வருகிறது. என்பதைத் தவிர வேறு விசேஷமில்லை. ஸ்ரீமான் செல்வபதி செட்டியார் முதலியவர்கள் வெற்றியினால் சர்ப்பொரேஷனுக்கு பிரமாதமான நன்மை வந்துவிடும் என்பதாகவும் நாம் மகிழ்ச்சியடையவில்லை. நாட்டிற்கு உண்மையான நன்மையாய தொழிலாளர் நன்மைக்காக அவர்களது ஆதிக்கம வளர அஸ்திவாரக்கல் பிரம்பூர் தேர்தலினால் போடப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்தவரை மகிழ்ச்சி அடைகிறோம். அய்யோ பாவம் அய்யங்கார்களே! அவர்களது கோஷ்டியார்களே!! தினமும் அமாவாசை இருட்டு ஏற்படாது. தினமும் திருட்டு கிடையாது. "பலநாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுப்போவான்" என்பது உங்கள் விஷயத்தில் மாத்திரம் ஏன் பலிக்காமல் போகும் என்று எண்ணி ஏமாறுகிறீர்கள் என்று உங்களுக்கும் சமாதானம் சொல்லிவிட்டு, சென்னை தவிர வெளியிடங்களில் உள்ள உங்களைப் பின்பற்றுகிறவர்களையும் இனியாவது யோக்கியமாய் நடந்துகொள்ளுங்கள் என்றும சொல்லியிதை முடிக்கிறோம்.

---

## தஞ்சையில் சுயமரியாதையுணர்ச்சி கொழுந்துவிட்டுத் தழைகிறது.

11-8-27ல் ஜில்லா போர்டு மீட்டிங் ஹாலில் போர்டு வைஸ் பிரஸிடெண்டு தேர்தல் நடைபெற்றது. பிரபல பார்ப்பனரல்லாதார் தலைவரும் மாஜி வைஸ் பிரஸிடெண்டுமான நெடும்பலம ஸ்ரீமான சாமியப்பமுதலியார் மீண்டும் போட்டியின்றி யேகமனதாய் தெரிந்தெடுக்கப்பட்டார். வெற்றியுற்ற முதலியாரை வாழ்த்துகிறோம். இவ்வெற்றிக்குக் காரணமான பார்ப்பனரல்லாதார் தலைவர்களுள் உள்ள ஐக்கியமும் சகிப்புத்தன்மையும் என்றும் மேன்மேலும் வளர இறைவனை இறைஞ்சுகிறோம் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞு ஆடி 30உ

# அரசியல் புரட்டு.

இதுகாலை இந்திய நாட்டை சுயமரியாதை அடையமுடியாமலும் விடுதலை பெறமுடியாமலும் உண்மையாய் தடுத்துக்கொண்டிருப்பவை எவை என்பதாக ஒரு அறிஞன் யோசித்துப் பார்ப்பானேயாகில் இந்துமத இயக்கமும் இந்திய அரசியல் இயக்கமுந்தான் என்பதாகவே முடிவுசெய்வான்.

நம்மக்களின் சுயமரியாதைக்கு இடையூறாயிருப்பது இந்துமதம் என்பதை அநேக தடவைகளில் பேசியும் எழுதியும் வந்திருக்கிறோம். அதுபோலவே இந்திய அரசியல் இயக்கத்தால் நமது விடுதலை தடைப்பட்டு அடிமைத்தன்மை பலப்பட்டு வருவதையும், பலதடவை பேசியும் எழுதியும் வந்திருந்திருப்பதுடன், இவ்விரண்டும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்கும் சுயநலத்துக்கும் பார்ப்பனர்களால் நமதுநாட்டில் ஏற்படுத்தப்பட்டதென்பதையும் எடுத்துச் சொல்லிவந்திருக்கிறோம். எனினும் இதுசமயம் அரசியல் புரட்டைப் பற்றியே இத்தலையங்கம் எழுதுகிறோம். உதாரணமாக அரசியல் இயக்கம் தோற்றுவித்த காலத்திலேயே இதை தோற்றுவித்தவர்கள் கருத்தென்னவென்பதை யோசித்தால் விளங்கும். அதாவது அரசாங்க உத்தியோகத்தில் இந்தியர்கள் சம உரிமை பெறவும், அரசாங்க அதிகாரத்தில் பங்கு பெறவும், அரசாங்கத்தையே நடத்திக் கொடுப்பதற்கு கட்டுப்பட்டு அரசாங்க சேவை செய்யவுமேதான் கருத்துக்கொண்டு நமது மக்கள்போல் சில படித்தவர்கள் என்னும் பார்ப்பனர்கள் அரசியல் இயக்கங்களை ஆரம்பித்தார்களே ஒழிய வேறில்லை.

இவ்வியக்கம் தோன்றிய நாள்தொட்டு அதன் உத்தேசப்படியே உத்தியோகங்களும் அதிகாரங்களும் ஏராளமாக பெறவும் அவைகள் அவ்வளவும் பார்ப்பனர்கள் அடையவும் ஏற்பாடு ஆகி வருகிறதை பார்க்கின்றோம். பார்ப்பனரல்லாதார் யாராவது இவ்வுத்தியோகங்களிலோ அதிகாரங்களிலோ பங்குபெற ஆசைப்பட்டு விட்டால் அந்த க்ஷணமே பார்ப்பன அரசியல் மாற்றமடைந்துவிடுகிறது. பார்ப்பனரல்லாதாருக்கு வகுப்புவாதம் கற்பிக்கப் படுகிறது. பார்ப்பனரல்லாதார் மீது தேசத் துரோகமும் வகுப்பு துவேஷமும் கற்பிக்கப்பட்டு விடுகிறது. பார்ப்பனரல்லாதாரும் தங்கள் தங்கள் சமூகத்துக்கு துரோகம்செய்து, சமூகத்தை காட்டிக்கொடுத்து, சமூகத் தலைவர்களையும் கொள்கைகளையும் கொலை செய்தாலொழிய உத்தியோகம் சம்பாதிக்க முடியாத நிலையில் பார்ப்பனர்கள் ஆக்கி விட்டார்கள். யாராவது பார்ப்பனர்களை லக்ஷியம் செய்யாமல் பார்ப்பனரல்லாதார் சமூக நலத்தைக் கோரி உழைப்பதின் மூலம் ஏதாவது உத்தியோகம் பெற்றுவிட்டால், அந்த உத்தியோகத்தை அழிப்பதற்கு எவ்வளவு பிரயத்தனங்கள் வேண்டுமானாலும் செய்து அதை அழித்துவிடுகிறார்கள்.

சாதாரணமாய் யோசித்துப் பார்ப்போமானால் பார்ப்பனர்கள் என்ன அக்கிரமங்கள் செய்தாலும் அவர்கள் எப்படியாவது உத்தியோகம் பெற்று தங்கள் வகுப்பு நலத்தை பெருக்க அதை உபயோகப் படுத்திக் கொள்ளுகிறார்கள், பார்ப்பன ரல்லாதார் எவ்வளவு நியாயமாய் நடந்தாலும் அவர்களுக்கு உத்தியோகம் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் அதை தங்கள் வகுப்புநலத்துக்கு நடத்த விடுகிறதில்லை.

இதற்கு உதாரணம் "மகாத்மா காந்தியால் தேசம் பாழாகி விடுகிறது அராஜகம் வலுத்து விடுகிறது அவரை ஜெயிலில்பிடித்துப்போடவேண்டும்" என்பதாக யகாகனம் சீனிவாச சாஸ்திரியும் சர். சங்கர நாயரும் ஆகிய இருவருமே சொன்னார்கள்

ஆனால் கனம் சீனிவாச சாஸ்திரிக்கு மீ 4000 ரூபா சம்பளமுள்ள உத்தியோகம் கிடைத்தது. அடுத்த சீர்திருத்தத்தில் கவர்னர் வேலையும் கிடைக்கப்போகிறது சர் சங்கர நாயருக்கோ கேசு ஏற்பட்டு 2 லட்ச ரூபா கையிலிருந்தபணம செலவாயிற்று. யாதொரு உத்தியோகத்திற்கும் லாயக்கில்லாமலும் போய் விட்டார்.

தவிர பிரிட்டிஷாருக்கும் ஜர்மனியாருக்கும் யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது அமெரிக்கா கவர்மெண்டாருக்கு இங்கிலீஷ் கவர்ன்மெண்டுக்கு விரோதமாய் கடிதம் எழுதின கூட்டத்தைச் சேர்ந்தவர் சர். சி பி. ராமசாமி அய்யர். ஆனால அவருக்கு மாதம் 2000 ரூபா சம்பளமுள்ள அட்வொகெட் ஜனரல் வேலையும பிறகு மாதம் 5500 ரூபா சம்பள முள்ள நிர்வாக சபை சட்ட மெம்பர் வேலையும, இரண்டு தடவை ஜினீவாவுக்கு இந்தியப் பிரதிநிதியாய் போகும் பதவியும், திரும்பி வந்து சட்ட மெம்பர் வேலை காலாவதியானதும் இந்திய கவுன்சில் சட்ட மெம்பர் வேலை கூட கிடைக்கக்கூடிய யோகமும் இருந்து வருகிறது. பஞ்சாப்படுகொலையை ஆதரித்த கனம் நரசிம்மேஸ்வர சர்மாவுக்கு மாதம் 6500 ரூபாசம்பளமுள்ள இந்திய கவுன்சில் வேலையும் கொடுக்கப்பட்டது.

ஒத்துழையாமையை வைத ஸ்ரீமான் டி. ரங்காச்சாரியாரின் பிள்ளைகுட்டிகளுக்கெல்லாம் 1000, 500 சம்பளமுள்ள உத்தியோகங்களும்கொடுக்கப்பட்டது. அவருக்கு இந்திய பிரதிநிதியாய் வெளிநாடுகளுக்குப் போகத் தருந்த பாக்கியமும் கிடைத்தது. அடுத்த சட்ட மெம்பர் வேலைக்கு அவ்விவாரக்கல்லும் நாட்ட முயற்சி நடந்து வருகிறது.

"ஒத்துழையாமை சட்டவிரோதம், காந்திக்கு மூளை இல்லை. தேசத்திற்கு சிறைக்கு போய் விட்டு வந்தவர்களை வகுப்புதுவேஷத்திற்காக சிறைக்கு அனுப்ப வேண்டும்" என்று சொன்ன ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் காங்கிரஸ் தலைவர் இந்திய அரசியல் தலைவர் முதலிய பெருமைகளோடு விளங்குகிறார்

ரிஷிமூலம், நதிமூலம் கேழ்கக்கூடாது என்பது போல் நமது ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு இவைகள் யாருக்கும்தெரியமுடியாதவர். யாரும்கேட்கவுங்கூடாது என்கிற பெருமைபடைத்தஸ்ரீமான் சத்தியமூர்த்தியவர்கள் எவ்வளவுதூரம் தேசத்துக்காக ஊதியம் இல்லாமல் பாடுபட்டவர் எவ்வளவுதூரம் சொந்தமான அபிப்பிராயமுடையவர் எவ்வளவு தூரம் நாணயமானவர் என்பது அறியாதார் ஒருவருமிருக்கமாட்டார்கள். அப்பேர்ப்பட்டவர் இன்று சென்னை மாகாண அரசியல் தலைவராய் விளங்குவதோடு சர்க்காரை எதிர்க்கும் கட்சித் தலைவராயும் இருப்பதோடு கவனர் பிரபுவையும், கவர்னர ஜனரல் பிரபுவையும் நேரில் பார்த்துப்பேசக் கூடியவராயும், அடுத்த தகாங்கிரசுக்கு அரசியல் திட்டம் ஏற்படுத்துபவராகவும் இருக்கிறார். இவர்கள் எல்லாம் அரசியலின் பேரால் பெரிய மனிதர்களானவர்கள் அல்லவா?

இது தவிர "உத்தியோகம கூடாது" என்றுவேஷம்போடுகிற நம்நாட்டு அரசியல் பார்ப்பனர்களின் குடும்பத்தார்களாகியஒரு அய்யங்கார் இன்ஸ்பெக்டர் ஜனரல் ஆப் பஞ்சாயத்து என்பதாக ஸ்ரீமான் என். கோபால்சாமி அய்யங்கார் மீ 2000 ரூ வாங்கிக்கொண்டிருக்கிறார். மற்றொரு அய்யங்கார் ஸ்ரீமான் வி டி. கிருஷ்ணமாச்சாரியர் பரோடா திவானாக மீ 3000 ரூ வாங்கிக் கொண்டிருக்கிறார் மற்றொரு அய்யங்கார் ஸ்ரீமான் டி. விஜயராகவாச்சாரியர் மீ 3000 ரூ சம்பளம் வாங்கிக்கொண்டு டில்லியில் இருக்கிறார். மற்றொரு பார்ப்பனர் ஸ்ரீ டி. ராகவய்யர் எனபவர் மீ 2000 ரு வாங்கிக் கொண்டு ரிவினியூபோர்டு மெம்பர் கூட்டப் பார்க்கிறார். மற்றொரு பார்ப்பனர் ஸ்ரீமான் பி. சீதாராமய்யர் என்பவர் மீ 2000 ரூ. வாங்கிக்கொண்டு கவர்மென்ட் காரியதரிசியாய் இருக்கிறார். இன்னம் எத்தனையோ பார்ப்பனர் கலெக்டர், ஐகோர்ட்ஜட்ஜி, முதலிய பெரிய உத்தியோகங்களில் மீ 1000, 2000. 3000, வீதம் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இவர்களில் ஒருவராவது இந்த உத்தியோகங்கள் பெறுதற்குப் பார்ப்பன சமூகத்தைக் காட்டிக்கொடுத்தாவது பார்ப்பன சமூகங்களின் அக்கிரமமான கொள்கைகளைக் கண்டித்தாவது தங்கள் சகோதரர்களான பார்ப்பனர்களை வைதாவது ஒரு சிறு உத்தியோகமும் பெறவேயில்லை, ஆனால், நம்மவர்கள் ஒரு சிறு முனிசிபல் கவுன்சிலர்வேலை பெறவேண்டுமானால் என்ன செய்தால் கிடைக்கிறது என்பது நேயர்களுக்குத்தெரியும். பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு பார்ப்பனரல்லாதாரை வைதால் தான் கிடைக்கிறது.

## திராவிடன்.

'திராவிடன்' பத்திரிகை விஷயமாய் இதற்குமுன் இரண்டொரு தடவை எழுதியபடி அதாவது திராவிடன் பத்திரிகையின் ஆசிரியத் தொழிலையும் நிர்வாகத்தையும் ஏற்றுக் கொள்வது என்பதாக முடிவு ஏற்பட்டு விட்டதால் அநேகமாக இம்மாத முடிவுக்குள்ளாகவே ஏற்றுக்கொள்ளக்கூடும்.

தனவணிகநாட்டு சுற்றுப் பிரயாணத்திற்குப் பிறகு உடல்நிலை சற்று கெட்டுப் போய் இருக்கிறது.

ஆதலால் ஒருவாரம் குற்றாலம் போய் அங்கிருந்துகொண்டே சென்னை போக வேண்டிய விஷயங்களைப்பற்றி ஏற்பாடு செய்யலாமென பதாக நினைத்திருக்கிறோம். அநேகமாக 17 தேதி அல்லது 18 தேதி இவ்விடமிருந்து குற்றாலத்திற்கு புறப்படுவதாயிருக்கலாம். அங்கிருந்து இம்மாத முடிவுக்குள்ளாகவே சென்னை செல்ல உத்தேசம்.

அங்காங்குள்ள நண்பர்கள் அதற்குள்ளாக ஒரு 500 சந்தாதாரர்களையாவது சேர்த்து அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். திராவிடனை ஒப்புக் கொள்ளும்படி நமக்கு கட்டளையிட்ட சுமார் 500க்கு மேற்பட்ட நண்பர்களில் அநேகர் அதாவது ஒருவர் நாம் ஒப்புக் கொண்டால் 100 சந்தா சேர்த்துக் கொடுப்பதாகவும், மற்றவர் 50 சந்தா சேர்த்துக் கொடுப்பதாகவும், பலர் 20, 30, வீதம் சேர்த்துக்கொடுப்பதாகவும், மற்றும் பலர் வேறு என்ன என்னமோ உதவி செய்வதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். தஞ்சை மதுரை ஜில்லா நண்பர்கள் மாத்திரம் 1000 சந்தாதாரர்களை சேர்த்துக் கொடுப்பதாய் வாக்களித்திருக்கிறார்கள் எல்லா கனவான்களும் இதுசமயம் வாக்குகளை நிறைவேற்றி நமக்கும் குற்றாலத்திற்கு எழுதும்படியாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

இதை நண்பர்கள் அஸ்வாரசியமாய் கவனிக்கக்கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். தற்காலம் உலகத்தை புரட்டி வருவதே பத்திரிகைகள் தான் என்பதையும் அந்த விஷயத்தில் நாம் அஸ்வாரசியமாய் இருந்து வந்ததால்தான் நமது சமூகத்துக்கு இவ்வளவு சுலபமாய் ஒரு கைக்குள் அடங்கக்கூடிய கூட்டத்தார் இவ்வளவு கொடுமைகள் செய்ய இடமேற்பட்டு வந்தது என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

"குடி அரசு" என்கிற குட்டிப்பத்திரிகையால் பாமர மக்கள் எவ்வளவு தூரம் விழிப்படைய முடிந்தது என்பதையும் எவ்வளவு தூரம் சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அது போல் "திராவிடன்" என்கிற தினப் பத்திரிகையால் நமது முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் எவ்வளவு தூரம் எதிரிகளாயுள்ளவர்களின் கொடுமையை எடுத்துக் காட்டக்கூடும் என்பதையும் கவனித்து பாருங்கள். பார்ப்பனரல்லாத கட்சியைச் சேர்ந்தவர்கள் 6 வருஷம் அதிகாரத்திலிருந்தும், நியாயம், ஒழுங்கு, மனச்சாக்ஷி என்கிற பூச்சாண்டிகளுக்கு பயந்து கொண்டு கேவலம் தங்கள் கக்ஷிபத்திரிகையின் நன்மைக்குகூட ஒரு காரியமும் செய்யாமல் காலத்தை கடத்தி வந்தார்கள்.

நமது விரோதிகளால் சிருஷ்டிக்கப்பட்ட மந்திரிகளைக்கொண்டு இந்த 6, 7 மாதத்தில் நமது விரோதிகள் அவர்கள் ஆதிக்கத்திற்கு எவ்வளவு காரியத்தை சாதித்துக் கொண்டார்கள் என்பதை யோசிப்பார்களானால் தங்களது இளிச்சவாய்த்தனம் விளங்காமல் போகாது. காலை ஒரு உத்திரவு, மாலை ஒரு உத்திரவு, இரண்டையும் அடித்து விட்டு மறுநாள் ஒரு உத்திரவு வீதம் மந்திரிகளின் கையைப் பிடித்துப்போடச் செய்கிறார்களா இல்லையா? இதில் ஏதாவது இரகசியம் உண்டா!

வெளிப்படையாய் இன்ன காரியம் எனக்குச் செய்தால் உனக்கு இன்ன காரியம் செய்வேன் என்று கடைவைத்து விற்பது போல் ஸ்தாபன ஸ்தாபன பதவிகளையும் உத்தியோகங்களையும் விற்கிறார்களா இல்லையா?

இம்மாதிரி என்ன என்ன வழிகளில் நமது எதிரிகள் நமக்கு தீங்கு செய்து வருகிறார்கள். இக்கொடுமையில் இருந்து தப்ப நமக்கு இப்பத்திரிகைகள் இல்லாமல் வேறு என்ன ஆயுதம் இருக்கிறது.

ஆகவே நண்பர்களே தயவு செய்து இந்த இரண்டு வார்த்தை வீணாக்காதீர்கள். கண்டிப்பாய் சந்தாதாரர்களைச் சேர்த்துங்கள். செப்டம்பர் முதல் தேதிக்கு 'திராவிடன்' 3000 காப்பிகள் தமிழ் மக்களிடை உலாவவேண்டும். இதற்குள் விளம்பரங்கள் சேர்ப்பவர்களும், விளம்பரம் சேர்த்துக் கொடுங்கள் குறைந்தது 2500 காப்பிக்கு உத்திரவாதமேற்று விளம்பரம் சம்பாதியுங்கள். வீணாய் காலத்தைக் கடத்தாதீர்கள்.

'திராவிடனை' நாம் ஏற்றுகொள்வதனால் 'குடி அரசு' குறைந்துவிடும் என்று சிலர் பயப்படுகின்றார்கள். அதைப்பற்றி யாரும் கவலைப்படவேண்டியதில்லை. அது எப்படியும் உங்கள் தயவால் தமிழ் மக்களிடம் 5000 பிரதிகள் பிரதிவாரமும் உலாவிக்கொண்டுதான் இருக்கும். எனவே தமிழ் நாட்டில் உள்ளவர்களும் வெளி நாட்டில் உள்ளவர்களும் சற்று கவனம் வைக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

---

உதாரணமாக இப்போதைய மந்திரிகள் தங்கள் வேலையைக்காப்பாற்றிக்கொள்ள எவ்வளவு தூரம் பார்ப்பனர்களுக்கு கையாளாக இருந்தால் முடிகிறது என்பதைப் பார்த்தால் தெரியும். அன்றியும் ஸ்ரீமான்கள் டி. எ. ராமலிங்கம் செட்டியாரும் வெள்ளியங்கிரிக் கவுண்டரும் முறையே எவ்வளவு எவ்வளவு படித்தவர்கள் எவ்வளவு பெரிய குடும்பத்தார்கள். கவர்ன்மெண்டுக்கு எவ்வளவு தூரம் நல்ல பிள்ளைகளாய் இருந்தவர்கள். இபபடியெல்லாம் இருந்தும் ஒரு மீ 2000 ரூபாய் உத்தியோகத்திற்கும் ஒரு சட்டசபை முதலிய சிறு பதவிகளுக்கும் எவ்வளவு பெரிய கொலைபாதகம் செய்யவேண்டியதாய் இருக்கிறது. தங்கள் சமூகத்தார் கூடி ஒரு ஒழுங்குபடியான சபையின் மூலம் விதிப்படியான பிரதிநிதிகள் கூடி செய்த தீர்மானத்தை அழிப்பதற்கு எவ்வளவு பிரயத்தனங்கள் செய்கிறார்கள். இன்னும் ஒவ்வொரு ஊரிலும் எதாவது ஒரு பதவியோ உத்தியோகமோ வேண்டியிருந்தால் இன்னமும் என்ன என்ன செய்யும்படி ஏற்பட்டுவிடுகிறது என்பவைகளைப் பார்ப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. இதுகளுக்கெல்லாம் காரணம் அரசியல் புரட்டுத்தானு அல்லவா? இந்த உத்தியோகங்கள் அரசியல் புரட்டுகளினால் உண்டானதுகளா அல்லவா? இதுகள் பார்ப்பனரல்லாதார் கழுத்தைத் திருகுகிறதா இல்லையா? இவற்றை எதற்காக சொல்லுகிறோம் என்றால் நமது நாட்டு அரசியல் இயக்கம் வெறும் புரட்டும் அயோக்கியத்தனமும் கொண்டது என்பதையும் அது பார்ப்பனர்கள் பிழைக்கவும் பார்ப்பனரலலாதாரை அழிக்கவுமான நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டு அந்தப்படியே நடந்து வருகிறது என்பதையும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் யோக்கியமான பார்ப்பனரல்லாதார் அரசியல்மூலம் தேசத்திற்கோ சமூகத்திற்கோ நன்மைசெய்ய முடியாது என்பதையும் வெளியாக்கச்செய்யவும் எப்படியாவது இம்மாதிரியான அரசியல் இயக்கங்கள் ஒழிந்தாலல்லது காட்டிற்கு விடுதலையோ நமது சமூகத்திற்கு சுயமரியாதையோ கிடைக்க மார்க்கமில்லை என்பதை ஜனங்கள் அறியவும் இதை எழுதுகிறோம்.

---

## ஈரோட்டில் முதல் மந்திரி திருவிழா

ஈரோடு முனிசிபாலிட்டியாரால் ஒரு ஹைஸ்கூல் திட்டமொன்று ஏற்படுத்தினதின் கருத்தையும், அதன்பேரில மஹாஜன ஸ்கூல்காரர்கள் முதன் மந்திரிக்கு எழுதியதின்பேரில் டை ஹைஸ்கூலில் 4-வது 5-வது பாரங்களை எடுத்துவிடவேண்டுமென்று மந்திரி உத்திரவு போட்டார் என்பதையும், 2, 3 வாரங்களுக்கு முன் 'குடி அரசில்' எழுதியிருந்தோம். முதன் மந்திரியின் இந்த உத்திரவின்பேரில் ஈரோடு சேர்மென் சிலபலமான சிபார்சுகளைப் பிடித்துக் கொண்டுபோய், அதாவது நம்பிக்கை யில்லாத தீர்மானத்திற்கு எதிரிடையாய் கக்ஷி சேர்ப்பதாய்ச் சொல்லி, அந்த உத்திரவை மாற்றி மறுபடியும் ஒரேஅடியாய் 4-வது, 5-வது, 6-வது பாரங்கள் வைத்துக்கொள்ள உத்திரவு போடும்படி கேட்க, நமது மந்திரியார் அதே மாதிரி உத்திரவு போட்டார். தவிரவும் இந்தப் பள்ளிக்கூடத்தை திறந்துவைக்க இதே மந்திரியை ஆரம்பத்தில முனிசிபல் சேர்மன் சீமான் சீனிவாச முதலியார் கேட்டுக்கொண்ட பொழுது, வருவதாய் வாக்களித்துவிட்டு. மறுபடி, யார் யாரோ முதல் மந்திரியிடம் சேர்மெனின் யோக்கியதைகளைச்சொன்ன பிறகு, அப்படியானால் நான் அங்கு வருவதில்லை என்று சொல்லி வராமல் நின்று கொண்டார். சேர்மென் எத்தனையோ தந்தி அடித்தும் எத்தனையோ சிபார்சு

பிடித்துப் ஒரே அடியாய் மாட்டேன் என்று சொல்லி விட்டார். பிறகு நம்பிக்கையில்லாத தீர்மானம் வருவதை அறிந்தனும் யார் என்ன சொன்னாலும் கேழ்க்க வேண்டியவராய் விட்டதோடு ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியார் சொல்படி நடக்கவேண்டியவரானதினாலும் மறுபடியும் அதே பள்ளிக்கூடத் திறப்பு விழாவுக்கு பள்ளிக்கூடம் திறந்து ஒரு மாசத்திற்கு மேலான பிறகு வந்து சேர்ந்தார்.

முனிசிபல் பள்ளிக்கூடத்திற்கு 'மிரப்' பள்ளிக்கூடம் என்று பெயர் வைக்கப்பட்டது. முனிசிபல் ரீடிங் ரூமுக்கு 'காக்ஸ்' ரீடிங் ரூமென்று பெயர் வைக்கப்பட்டது. இந்தப் பெயர்களுடன் பள்ளிக்கூடத்தையும் ரீடிங்ரூமையும் திறந்துவைத்தார்.

இந்தப் பெயர்கள், முனிசிபல் பணங்களை சேர்மென் அடித்த கொள்ளைக்கு உதவியாகவிருந்த கனவான்களுக்கு லஞ்சமாகக் கொடுப்பதாய் எண்ணிக்கொண்டு இட்ட பெயராக விளங்கிற்று. இந்த பெயர் வைக்கும் சடங்குக்கு குறைந்தது 500 ரூபாயாவது முனிசிபாலிட்டி கணக்கில் செலவு எழுதக்கூடும் பகுதியாவது பாடு பட்டவருக்கும் ஆகும். இந்த மந்திரி முதலில் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டு வந்ததும், முதலில் பள்ளிக்கூடம் ஒரே அடியாய் 4, 5, 6-வது பாரங்கள் வைக்க உத்திரவு கொடுத்துவிட்டு, மறுபடி அதை கேன்சல் செய்ததும், மறுபடி அதை மாற்றி 5-வது 6-வது பாரங்கள் வைக்க உத்திரவு கொடுத்ததும், நம்பிக்கையில்லாத தீர்மானத்தை எதிர்த்து வேலை செய்வதற்கு லஞ்சமாக காணப்பட்டது.

இவ்வளவோடு போகவில்லை "குதிரை கீழே தள்ளினதோடு குழியும் பறித்தது" என்பதுபோல் முதல் மந்திரியார் மகாஜன இஸ்கூலையும் வந்து பார்ப்பதாக தானுகவே சொல்லி அனுப்பி வந்து பார்த்து பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் இவ்வளவு கூட்டமாயிருந்தால் வாத்தியாயர்களுக்கு கஷ்டமல்லவா ஆதலால் வேறுபள்ளிக்கூடம் ஏற்பட்டதால் எட்மாஸ்டருக்கு நன்மைதானே என்றும் சொன்னாராம். அய்யோ பாவம் மகாஜன ஹைஸ்கூல் பேரிலும், எட்மாஸ்டர் பேரிலும் மந்திரிக்கு எவ்வளவு பரிதாபம். அதிகமாக பிள்ளைகளை பெறுவதுகூட தாயிக்கும் தகப்பனுக்கும் கஷ்டம் தான். சிலவற்றை வேறு ஒருவன் ஒப்புக் கொள்வது தாய் தகப்பனுக்கு நன்மைதானே என்று கூட மந்திரிக்கு தோன்றலாம். நமது மந்திரிகளின் தாபார் அந்தக் காலத்தில் கதைகளாக எழுதிவைத்த நபாபுகள் தர்பாரிலும் இப்படி நடந்ததாக எழுத அவர்களுக்கு தோன்றவில்லை.

இந்தமாதிரி நடந்தால் திருப்பூரில் மாத்திரந்தானு மந்திரிகளை ஆதரிக்கக் கூட்டம் போடுவார்கள். இன்னம் சந்து பொந்து மூலை முடுக்கு எல்லா இடங்களிலும் நமது சேர்மன் சீனிவாச முதலியார் ஸ்ரீமான்கள் ராமலிங்க செட்டியார் கம்பனியார் மாத்திரமல்லாமல் இன்னும் எத்தனையோ கம்பெனியாரும் போடுவார்கள். நடக்கிற வரையில் நடக்கட்டும். இந்த மந்திரிகளோடேயே உலகம் முடியப் போவதில்லை.

## முனிசிபாலிட்டிக்கு ஒரு விண்ணப்பம்.

ஈரோடு முனிபல் ஆஸ்பத்திரியில் வியாதி பார்த்துக்கொள்ள வருபவர்களின் எண்ணிக்கை இந்த டாக்டர் வந்த பிறகு முன்னையவிட இப்போது ஒன்றுக்கு மூன்றாய் பெருகிவிட்டது. வியாதியஸ்தர்கள் வந்தால் கூட்டம் கூட்டமாய் வெகு நேரம் காத்திருக்கவேண்டி வருகிறது. முனிசிபல் நிர்வாகிகள் எத்தனையோ வழிகளில் பாழாக்கும் பொது ஜனங்களின் வரிப்பணத்தை இந்த வழிக்கு கொஞ்சம் உபயோகிக்க நினைத்தார்களானால் பாழாக்கின பாவத்திற்கு கொஞ்சம் சாந்தியாகவாவது இருக்கும். ஆதலால் இப்போது இருக்கும் டாகடருக்கு உதவியாக ஒரு எல். எம். பி. யை நியமித்தால் ஜனங்களுக்கு இன்னும் எவ்வளவோ சௌகரியம் ஏற்படும். உடனுக்குடன் வியாதியஸ்தர்கள் மருந்துபெற்றுப் போகவும் அனுகூலமாயிருக்கும்.

பெண்கள் குழந்தைகள் முதலானவர்களுக்கு வயித்தியம் பார்க்க ஒரு லேடி அப்பாத்திகிரியை நியமித்து வருவது அனுகூலமானாலும், நல்ல அனுபோகமும் கெட்டிக்காரத்தனமும் உள்ள லேடி அப்பாத்திகிரியை மாற்றி விட்டு, இப்பொழுதுதான் வைத்தியப் பள்ளிக்கூடத்தில் இருந்து வந்த ஒரு புதிய லேடி அப்பாத்திகிரியை நியமித்தார்கள் இப்போது முனிசிபல் பணம் போகும்பொள்ளைக்கு அவருக்கும் கொஞ்சம் போவதால் ஒன்றும் முழுகிப்போகாது. ஆனாலும் ஜனங்களுக்கும் கொஞ்சம் அனுகூல மேற்படக்கூடாதா என்று தான் இந்த யோசனை சொல்லுகிறேன்.

இந்த டாக்டர் நிரம்பவும் அக்கரையோடும் அனுபோக ஆற்றலுடனும் வேலை பார்க்கிறார். அதனாலேயே தான் கூட்டம் அதிகமாகிவிட்டது. வெளி ஊர்களில் இருந்தும் வியாதியஸ்தர்கள் வந்து குவிகிறார்கள். இவ்வளவையும் கவனிக்கவேண்டி இருக்கிறபடியால் எவ்வளவு நேரம் வியாதியஸ்தர்கள் ஆஸ்பத்திரியில் காத்திருப்பது. ஆகையால் ஒன்று அதிகக்கூட்டம் வருவதற்கு இல்லாமல் இவரை மாற்றிவிட்டு பழய டாகடரையாவது தருவிக்கவேண்டும், அல்லது இவருக்கு உதவியாக ஒரு சின்ன டாகடரையாவது நியமிக்கவேண்டுமாய் காருண்ய முனிசிபல் நிருவாகத்தாரை கேட்டுக்கொள்ளுகிறேன். 'ஒரு நோயாளி'.

## நாடார் மஹாஜன வாரம்.

### நாடார் மஹாஜனங்களுக்கோர் வேண்டுகோள்.

நமது சங்கத்தின் நோக்கங்களை நம்மவர்கள்பாலும், நம் ஏனைய சகோதரர்கள் மத்தியிலும், எளிதில் பரப்புவதற்கனுகூலமாகவும், மது சமூகத்தில் புதிய ஊக்கத்தை உண்டாக்கி, சங்கத்தின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்யும்பொருட்டும், "நாடார் மஹாஜன வாரம்" எனும் இப்புனித ஸ்தாபனம் ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது.

இவ்வைபவம் சிறப்பாய் நடைபெறுவதற்குரிய சகல முயற்சிகளையும் முன் நின்று எடுத்துக் கொள்வது தங்களது முதற் கடமையெனக்கொண்டு, இவ்வாரத்தை சங்கத்திற்கு பிரதிஷ்டை செய்து கீழ்கண்ட நற்காரியங்களை விமரிசையாக நடத்தி உதவும்படி அபிமானிகளை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நாளது பிரபவ-௵ ஆவணி-௴ 7-உ வரை நாம் செய்யவேண்டிய நற் காரியங்களாவன:—

காலையில்:—ஜாதிய பஜனையுடன் ஊர்வலம் வருதல்.

பகலில்:—நம ஜனசமூகத்தாரிடம், சந்தா, நன்கொடை, தலைக்கட்டுவரி இவைகள் மூலம் சங்கத்திற்கு பணம் வசூலித்தல்.

இரவில்:—பொதுக் கூட்டங்கள் கூட்டி நமது சங்க நோக்கங்களையும், நம் ஜனசமூக முன்னேற்றத்திற்குரிய வழிகளையும் குறித்து உபந்நியாசித்தல்.

என்று ஸ்ரீமான்கள்
பா. ம. பண்டிய நாடார்,
ஆ. அ. ஆறுமுக நாடார்,
ஆகிய காரியதரிசிகள் எழுதுகிறார்.

## ஓர் மறுப்பு.

திருப்பூரில் பார்ப்பனரல்லாதார் பேரால் கூட்டப்போகும் ஒரு போலி மகாநாட்டிற்கு எதிரிடையாய் ஒரு மகாநாடு கூட்டப்படப் போவதாகவும் அதற்கு ஸ்ரீமான்கள் ஷண்முகம் செட்டியார் ரத்தினசபாபதி முதலியார் வரதராஜுலு நாயுடு ராமசாமி நாயக்கர் முதலியோர்கள் வரப்போவதாகவும், பார்ப்பனப் பத்திரிக்கைகளில் வெளியாய் இருக்கிறது. இது கொஞ்சமும் ஆதாரமற்றது. இதற்கு மறுப்பு அசோசியேட் பிரஸ் பிரதிநிதியிடம் நேரில் தெரிவித்தும் பத்திரிக்கைகளில் வெளியாகவில்லை நம்மைப் பொருத்தவரை அப்பேர்ப்பட்ட மகாநாடு கூட்டுவதைப்பற்றி கொஞ்சம் கூடக்கருதவில்லை என்றும் கூட்டலாமா என்று பலர் யோசனை கேட்பதற்குக்கூட அவசியமில்லை என்று தெரிவித்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## டாக்டர் வரதராஜுலு அவர்களின் ஈரோடு விஜயம்.

நிகழும் ஆவணி-௴ 1-உ (17-8-27) புதன்கிழமையன்று "தமிழ் நாடு" பத்திராதிபர் டாக்டர் வரதராஜுலு அவர்கள் ஈரோட்டிற்கு விஜயம் செய்வார்கள். திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தலைமையில், காலை 10-மணிக்கு மண்டி வீதியில் "லக்ஷ்மி குடி நூல் கதர் சாலை" டாக்டர் அவர்களால் திறக்கப்பெறும். மாலை 4 மணிக்கு நேப்பியா வீதியில் அமைந்துள்ள பஞ்சாயத்து கோர்ட்டு மேன்மாடியில், டாக்டர் அவர்கள் தமிழர் ஸமாஜத்தாரால் உபசரிக்கப்பெறுவர், மாலை 5-மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாகும். 6 மணிக்கு "அலி சவுக்கில்" டாக்டர் அவர்கள் அரியதோர் உபந்யாசம் நிகழ்த்துவார்கள். திரு. ஈ. வே. ராமசாமிநாயக்கர் அவர்கள் அக்கிராசனம் வகிப்பார். பிரமுகர்கள் பலர் ஈடுபட இசைந்துள்ளார்கள்.

தமிழர் ஸமாஜத்தார்

# திருவண்ணாமலை கோவில் வழக்கு

"குறுக்கு விசாரணை முடியவில்லை கோயிலுக்குள் யாவரும் நுழையலாம்"

திருவண்ணாமலை கோயில் வழக்கு 5—8—27ல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கோர்ட்டு மண்டபம் முழுதும் வெளியிலும் உள்ளும் எள் விழுவதற்கும் இடமில்லாதபடி மக்கள் நிரம்பியிருந்தனர். வாதி ஸ்ரீமான் கண்ணப்பருக்கு வேலூர் திரு. வி. எஸ் பத்பநாப முதலியார் ஆஜரானார். எதிரிகளுக்கு சென்னை வக்கில் வி. என். குப்பராவ் திருவண்ணாமலை வக்கீல்களாய் திரு விஜயராகவாச்சாரியார், இராமசாமி ஐயர் முதலியோர் தோன்றினர்.

முதலாவதாகத் திரு. குப்பராவ் அவர்களால் திரு. கண்ணப்பர் விசாரணை செய்யப்பட்டார். இவ்விசாரணையின் சுருக்கம்:—

நான் திராவிடன் பத்திராபதிபர் என் சம்பளம் ரூபா 100. எனக்குக் குன்னத்தூரில் நிலங்கள் இருக்கின்றன. நான் இவ்வழக்கை நடாத்த சந்தா வசூல் செய்யவில்லை. ஆனால் திரு. தண்டபாணிப் பிள்ளையவர்களால் இவ்வழக்கை நடாத்த நன்கொடை வசூலிக்கப்படுகின்றது. நான் என் சொந்தப்பணம் மிகவும் செலவழித்துள்ளேன். சந்தா வசூல் கணக்கைத் திரு. தண்டபாணிப் பிள்ளையிடம் கேட்க வேண்டும். அவர் 6-2-27ல் இங்கு பிரசங்கம் செய்தவர்களுள் ஒருவர். என்னுடைய சாட்சிகளில் யாராவது நன்கொடை கொடுத்திருக்கின்றார்களா அல்லவா என்பது எனக்குத் தெரியாது. சென்ற ஓர் ஆண்டாகக் குருக்கள் தரகராய் இன்றி கோயிலில் கடவுள் வணக்கம் நடை பெற வேண்டுமென்று பிரசங்கம் செய்து வருகின்றோம். பிராமணரல்லாதாரில் சிலர்குருக்களிடத்தில் கொடுத்து தேங்காய் உடைக்கின்றார்கள். நான் உற்சவ காலங்களில் சில பெரிய கோயில்களுக்குச் சென்றிருக்கின்றேன். போன கோயில்களுள் அழகர் கோயிலில் பக்தர்கள் நேரில் தேங்காய் உடைப்பதைக் கண்டிருக்கின்றேன். சில சில கோயில்களுள் சில சில வழக்க முண்டு. நேராகத் தேங்காய்உடைப்பது வழக்கத்துக்கு விரோதமென்று சொல்லலாம். மதுரையில் பலர் நேரிலேயே தேங்காய் உடைத்திருக்கின்றனர். திருவண்ணாமலைக் கோயிலில் தேங்காய் உடைக்கும் வழக்கம் என்னவென்பது எனக்குத் தெரியாது. நான் கோயிலுக்குக் கற்பூரம் தேங்காய்பழம் ஒன்றும் வாங்கிக் கொண்டு போகவில்லை. குருக்களிடத்தில் தேங்காய் கொடுத்து உடைப்பவர்கள் பைத்தியக்காரர்கள் என்பது என் அபிப்பிராயம். அந்தப் பைத்தியம் எனக்கு எப்பொழுதும் கிடையாது என்னுடன் கூட வந்தவர்களுக்கும் கிடையாது. நான் நேரில் பூஜை செய்ய வேண்டுமென்றும் கோயிலைச் சுற்றிப் பார்ப்பதற்கும் சாமியைக் கண்டு ஒரு கும்பிடு போடுவதற்கும் அன்று சென்றேன். கையெடுத்துக் கும்பிடுவது வைத்தியமில்லை. விக்கிரகத்தைப் பார்த்த பின்பு தான் கையெடுத்துக் கும்பிடவேண்டுமென்பது என் எண்ணமல்ல. நான் கோயிலுக்குள் நுழையும் போது இந்த இடத்துக்குப் போக வேண்டும், இந்த இடத்துக்குப் போகக் கூடாதென்று யோசிக்கவில்லை. நான் பிரசங்கம் செய்த போது எல்லா இந்துக்களும் கர்ப்பக் கிருகம் உள்பட எல்லா இடங்கட்கும் செல்லலாமென்று நான் எடுத்துரைத்தேன் திருவண்ணாமலைக் கோயிலில் கர்ப்பக்கிருகத்துள் குருக்கள் தவிர மற்றவர்கள் பிராமணரல்லாதாரும் போகக் கூடாதென்பது எனக்குத் தெரியாது. என் பிரசங்கம் கேட்பவர்மனதில் என்ன உணர்ச்சியை உண்டாகியிருக்குமென்று என்னால் சொல்லமுடியாது. கர்ப்பக்கிருகம் உள்பட எல்லா இடங்கட்கும் செல்லலாமென்று நான் பிரசங்கம் செய்தது போலியல்ல. உண்மையுணர்ச்சியுடனே செய்தேன். ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் எனக்கு மட்டும் கர்ப்பக்கிருகத்துள் போகவேண்டுமென்ற அவா கிடையாது. சமயம் வாய்த்திருந்தால் நான் கர்ப்பக்கிருகத்துள் நுழைந்திருப்பனே அன்றோவென என்னால் சொல்ல முடியாது. நான் எப்பொழுதும் சட்டவரம்புக்கு மீறி நடப்பவன் அல்ல, கர்ப்பக்கிருகத்துள் எவராவது போவது சட்டத்தை மீறி நடப்பதாகாது. கர்ப்பக்கிருகத்துள் போகும் போது யாராவது தடுத்தால்பல வந்தப்படுத்திப் போவது சட்ட வரம்புக்கு மீறியதாகும். நான் என் பிரசங்கத்தில் யாராவது தடுக்காது இருந்தால் கர்ப்பக் கிருகத்துள் நுழையுங்கள் என்று சொல்லவில்லை. நான் பல இடங்களில் செய்த பிரசங்கத்தையே திருவண்ணாமலையிலும் செய்தேன். திருவண்ணாமலை தவிர மற்ற ஊர்களில் பிரசங்கம் முடிந்தவுடன் கோயிலுக்குச்சென்றதில்லை. ஏனெனின் அவ்வூர் கோயில்களை நான்முன்னாடியே பார்த்திருக்கின்றேன்.

என் அபிப்பிராயத்தில் ஆதிதிராவிடர்களும இந்துக்களாவார்கள். ஆகவே ஆதிதிராவிடர்களும் கோவிலுக்குள் நுழையலாம். நான அவ்வாறே பிரசங்கமும் செய்தேன். ஆதிதிராவிடர்கள் கர்ப்பக் கிருகத்துள் போவது குற்றமென்று சொல்லமாட்டேன். நான் ஆதிதிராவிடர்கள் கோயிலுக்குள் நுழையலாமென்றே பிரசங்கமும் செய்தேன். ஆதிதிராவிடர்கள் நுழைந்ததற்காகப் பிராயச்சித்தம் செய்வது சரியல்ல. எனக்குத் தெரிந்த டிரஸ்டிகள்யாவரும் பிராமணரல்லாதார்களே! கூட்டத்தில் எத்தனைபேர் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்து அங்கத்தவர்களானார்களோ நான் சொல்ல முடியாது. என் சாட்சிகள் அச்சங்கத்தின் அங்கத்தவர்களோ என்னவோ எனக்குத்தெரியாது? என் சாட்சிகளாய இராமச்சந்திர ரெட்டியார், வரதராஜ ரெட்டியார், போலீஸ் இன்ஸ்பெக்டர் கோபால் பிள்ளை சங்கரப்ப நாயக்கர் பிராஸிக்யூட்டிங் சப் இன்ஸ்பெக்டர் சிவப்பிரகாசமுதலியார் இவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். இளைஞர் சங்கம் ஆதிதிராவிடர்களையும் அங்கத்தவர்களாய்க்கொண்டது. ஆனால் பிராமணர்களை ஏற்றுக்கொள்வதில்லை. நான் இளைஞர் சங்கத்தில், ஆதிதிராவிடர்கோவிலுக்குள் நுழையவேண்டுமென்று பேசினேனோ என்னமோ எனக்குத்தெரியாது. சுரேந்திரநாத் ஆரியா கோயில் நுழைவைப் பற்றி பேசினாரோ என்னமோ எனக்கு ஞாபகமில்லை. அவர் பேசவில்லை யென்றும் சொல்லமுடியாது. நான் திரு ஆரியாவைச் சாக்ஷியாய்ப்போடவில்லை. என்கூட்டத்துக்கு ஆதிதிராவிடர்கள் வந்தார்களோ அல்லவோ என்பது எனக்குத்தெரியாது. கோயிலுக்குள் போகும்போது ஆதிதிராவிடர்கள் வந்தார்களோ அல்லவோ வென்பதுந் தெரியாது. ஆதிதிராவிடர்களை நான் கோயிலுக்குள் வரவேண்டாமென்றும் சொல்லவில்லை. சாட்சிகளின் பெயர் எனக்கு முன்பே தெரியும் அவர்கள் ஏன் என்னுடன் கோயிலுக்குள் வந்தார்களென்று சொல்ல முடியாது. 6—2—27-ல் இவர்கள் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். நான் திருவண்ணாமலைக்கு வந்த பிற்பாடுதான் அவர்கள் பெயர்கள் தெரியும்.

நான் இது என்ன கோபுரம் என்று கேட்டேன். கிளி கோபுரமென்று சொன்னார்கள். இப்பிராதை நானே தயாரித்தேன். வக்கீலிடமிருந்து செக்ஷன்கள் தெரிந்து கொண்டேன். சிவப்பிரகாச முதலியார் பிராது எழுதிக்கொடுக்கவில்லை. மூன்றாவது எதிரி ஊரில் இல்லை என்று எனக்குத் தெரியும். அவர் தம் சொந்த ஊரில் இருந்தார். 3-வது எதிரி ஒரு தந்தியனுப்பி கதவை அடைக்கும்படியாய்ச் செய்தார் என்று நான் கேள்விப்பட்டேன். 7—2—27க்குப் பின் நான் கோயிலுக்குள் போகவில்லை. கிளி கோபுரவாயில் கதவுகள் மிகப்பெரியன. இரண்டு கதவுகள் உண்டு. நான் போகும் போது சிறு கதவுதான் சாத்தினார்கள். சிறு கதவுக்குப் பூட்டு உண்டா அன்றா என்பதை நான் கவனிக்கவில்லை. திருவண்ணாமலைக்கோயில் எத்தனை மணிக்குச் சாத்துவதென்பது எனக்குத் தெரியாது. எல்லாச் சிவன் கோயில்களும் அர்த்தஜாம பூஜைக்குப்பின்புதான் மூடப்படுகின்றன. கிளி கோபுரத்திற்குள் இருந்தவர்களை நான் சாட்சிகளாய்ப் போடவில்லை. இத்துடன் கோர்ட்டு பகல் 3½ மணிக்குக் கலைந்தது. மறுபடியும் 8—8—27-ல் வாய்தா போடப்பட்டது. நாளை வரும்.) (திராவிடன்)

## திரு. நாயக்கரின் சொற்பொழிவு.

இது காரைக்குடியில் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் செய்த உபந்யாசமாகும். திரு. நாயக்கரின் உருவப்படம் முகப்பில் விளங்குகிறது. புத்தகத்தின் விலை அணா ஒன்று. வெளியூர்களிலுள்ளவர் ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். 50 பிரதிகள் வாங்குவோருக்கு தபால் சார்ஜ் இனாம்.

வேண்டுவோர் கீழ்க் காணுவோரிடம் பெற்றுக்கொள்ளலாம்:—

1 மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.

2. கருமுத்து. சிவலிங்கச் செட்டியார்,
ஆ. தெக்கூர்

3. என், ராமச்சந்திரன் சேர்வை, பி. ஏ., பி. எல்.,
வக்கீல், சிவகங்கை

# சென்னை கார்ப்பொரேஷன் தேர்தல்.

## ஓட்டு விவரம்.

### தொழிலாளர் வெற்றி.

இன்று காலை சென்னை கார்ப்போரேஷன் கட்டடத்தில் சென்ற இரண்டு தினங்களாக நிகழ்ந்த முனிசிபல் தேர்தல்களில் ஓட்டுகளைக் கணக்கிடத் துவக்கினார்கள். கமிஷனர் மற்ற அபேக்ஷகர்களின் பிரதிநிதிகளுக்கு முன்னிலையில் டிவிஷன் வாரியாக ஓட்டுப்பெட்டிகளை உடைத்து கணக்கிட்டார். ஓட்டு விவரங்களையும் தேர்தல் முடிவையும் அறிய ஆவல்கொண்டு கார்ப்போரேஷன் கட்டடத்திற்கு வெளியே பெருந்திரளாக ஜனங்கள் கூடியிருந்தனர். இதற்குமுன் நிகழ்ந்தது போன்று கார்போரேஷன் கட்டடத்திற் கருகில் எத்தகைய குழப்பமுமேற்படாமல் தடுப்பதன் பொருட்டு தக்க போலீஸ் பந்தோபஸ்துகளும் செய்திருந்தார்கள், எல்லா டிவிஷனின் பெட்டிகளும் உடைக்கப்பட்டு ஓட்டுகளைக் கணக்கிட்டபின் கமிஷனர் தேர்தல் முடிவை கீழ்க்கண்டவாறு வெளியிட்டார்:—

**பெரம்பூர் டிவிஷன்.**

ஸ்ரீ. ஜி, செல்வபதி செட்டியார் 319 ஓட்டுகள்.
ஸ்ரீ. பி. பக்தவத்சலு நாயுடு 220 ,,
செல்லுபடியாகாதவை 13 ,,
ஸ்ரீ. ஜி. செல்வபதி செட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**பெத்துநாயக்கன்பேட்டை**

ஸ்ரீ. வி. சக்கரைச் செட்டியார் 447 ,,
ஸ்ரீ. பி. பாலசுந்தர முதலியார் 210 ,,
செல்லுபடியாகாதவை 10 ,,
ஸ்ரீ. வி. சக்கரைச் செட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**நாயப்பேட்டை டிவிஷன்**

ஸ்ரீ. ஓ. எ. ஓ கே. லட்சமணன் செட்டியார் 361 ஓட்டுகள்
ஸ்ரீ. வாசுதேவ் 341 ,,
ஸ்ரீ. டி. எஸ். சாமிநாதன் 63 ,,
செல்லுபடியாகாதவை 15 ,,
ஸ்ரீ. லட்சுமணன் செட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**சிந்தாதிரிப்பேட்டை டிவிஷன்**

ஸ்ரீ. டி. பி. மீனாட்சிசுந்தரம் 555 ஓட்டுகள்
ஸ்ரீ. வி. சிவப்பிரகாச முதலியார் 480 ஓட்டுகள்
செல்லுபடியாகாதவை 16 ,,
ஸ்ரீ. மீனாட்சிசுந்தரம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**திருவேட்டீஸ்வரன் பேட்டை**

ஸ்ரீ. கிருஷ்ணதாஸ் லாலா 497 ஓட்டுகள்
ஸ்ரீ. அப்துல் ஹமீதுகான் 494 ஓட்டுகள்
செல்லுபடியாகாதவை 29
ஸ்ரீ. கிருஷ்ணதாஸ் லாலா தேர்ந்தெடுக்கப்பட்டார்.


அறிக்கை:— என் குருநாதர் ஹரித்துவாரம் மங்களபுரி பாவாஜி பெரிய யோகி மகான் நாலேர் தலைமுறையாய்க் கையாண்டு வந்த இம்முறையை நான் இருபது வருஷம் தொண்டு செய்து தெரிந்து கொண்டு சாதுக்கள் அகாடாவை விட்டு பழனிக்கு வந்து அனேக கொடிய ரோகஸ்தர்களுக்குக் கொடுத்து குணம் செய்ததற்குள்ள நற்சாட்சிகள் பலவுள. பக்தர், பிரபுக்கள் வேண்டுகோளுக்கிணங்கி குறைந்த விலைக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன. பலவித குஷ்ட ரோகங்களுக்கும் இன்னும் அனேகம் ரோகங்களுக்கும் ஏற்பட்ட அனுபானத்துடன் கொடுத்துக் கைகண்டது, பல சீதோஷ்ண ஸ்திதிக்கும் ஆண் பெண் இருபாலரும் எந்த வயதாகயிருந்தாலும் சாப்பிடச்சரியாய் அமைக்கப் பட்டது. அபார சக்தி வாய்ந்தது. வாந்தி முதலிய எவ்விதக்கெடுதலும் செய்யாதது.



# தாம்பர பற்பம்.

தீரும் வியாதிகள்:— கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், சொறி குஷ்டம், பொரி குஷ்டம், விரிகுஷ்டம், எரி குஷ்டம் கபாலகுஷ்டம், குறை நோய், சில்லட்டைக்கடி, கடி விஷங்கள் 8-ம் நீராம்பல். பெருவயிறு, மகோதரம், நீர்கவசை, குன்மம், அண்டவாய்வு ஆனைக்கால், சூலை, திமிர், மதமதப்பு, உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம் அழுகி நாற்ற முடையவர்கள், ஆணிப்புண்கள், குழிப்புண், கிராணி, கண்டமாலை, பவுத்திரம் இன்னும் அனேக கொடியரோகங்களைசீக்கிரத்தில 5, 10, 21-வேளைகளில் குணப்படுத்தும்.

| | | | |
|---|---|---|---|
| விலை விபரம் | முதல் நெ. தாம்பரபற்பம் அனுபான சூர்ணத்துடன் | 21-நாள் விலை ரூ. 30 | (தபால் பிரத்தி யேகம் |
| | ,, ,, ,, ,, | 10-நாள் விலை ரூ. 15 | |
| | 2-ம் நெ. ,, ,, ,, | 40-நாள் விலை ரூ. 40 | |

1. நற்சாட்சி:—பினங்கு பிரை [Prai] யிலிருக்கும் சி. வி. தோமஸ் என்பவர் மருந்து சாப்பிட்டு அனுபோகத்தைச் சொல்லுகிறதைக் கவனியுங்கள்:—

ஐயா, எனக்கு நீங்கள் அனுப்பியமுதல் நம்பர்தாம்பிர பற்பத்தை நான் 5நாள் சாப்பிட்டேன் கருமேக நீர் சம்பந்தமான சகல ரோகங்களும் நீங்கி சுகமாகி விட்டது. இனியும் பாக்கி மருந்து கைவசமிருக்கிறது. கஷ்டப் படுகிறவர்களை சௌக்கியப்படுத்தி ரக்ஷிக்கும் பொருட்டு கடவுள் உங்களை அவதார ரூபமாக ஏற்படுத்தியிருக்கிறார் என்பதற்கு நான் உறுதியாய் நம்பிக் கொள்ளுகிறேன். 16-2-27. சி. வி. தோமஸ்,

என் பேருக்கு தாங்களனுப்பிய தாம்பிர பஸ்பமானது மிகவும் அருமையானதும் அற்புதமானதுமான வேலை செய்திருக்கிறது: எப்படி யெனில்:— ஓர் எளிய ஸ்திரீக்கு காலில் முழங்காலுக்குக் கீழ் நுணுக்காயைப் போல் மேகவியாதி கால் பாதமிரண்டும் வீக்கம், இதற்காக நானும் சிலரும் சேர்ந்து பணம் வசூலித்து ௸ பஸ்பத்தின் வி. பி. யை வாங்குவதற்காக தயார் செய்து பார்சல் எங்களுக்குக் கிடைத்த அன்றைதினமே கொடுத்து இரண்டு தினம் நாலுவேளையில் காய்காயாக இருந்தது வற்றவும், பாதவீக்கமாக இருந்தது வடியவும், ஆரம்பித்து 5-நாள் 10-வேளை மருந்தில் முற்றிலும் உதிர்ந்து வீக்கமும் வாங்கி விட்டது. அநேகருக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாகி விட்டது.

6-2-25 (Sd) T. A. பிள்ளை, மூர்ரோட்டு பெங்களூர் டவுன்.

விபரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

**ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள்,**
சுதானந்த மெடிகல்ஹால், பழனி. மதுரை ஜில்லா, தென்னிந்திய.
தந்தி விலாசம்:— 'சர்குரு பழனி'

நமது சோல் ஏஜண்டு { M. E. நாயுடு அவர்கள், டிரஸ்ஸர் 86டே. லூக்கெடாங்கு ரோட்டு. கிளாங்கு—Klang F. M. S


## சென்னைமாகாண நாடார் மகா ஜனங்கள் மகாநாடு.

சென்னை மகாண நாடார் மகா ஜனங்களின் மகாநாடு அக்டோபர் மீ 1, 2, 3 வ களில் கும்பகோணத்தில் நடைபெறும். ஸ்ரீமான் ஆர். கே, ஷண்முகம் செட்டியார் எம். எல். ஏ. அவர்கள் தலைமை வகிப்பார். இந்த மகாநாடுகள் இதுவரை பெரும்பாலும் பெரிய பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர்களை முக்கியமாய் பார்ப்பன உத்தியோகஸ்தர்களையே தலைமைவகிக்க தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்தது. இப்போது ஒரு அரசியல் வாதியை, பார்ப்பனரல்லாதாரை, தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தில் சேர்ந்து பார்ப்பனத் தலைவர்களை வைகிறவர் என்பவரைத் தேர்ந்தெடுத்திருப்பது அச்சமூக மனமாற்றத்தைக் காட்டுகிறது. இதுவும் சுயமரியாதைக்கு ஒரு நற் குறியேயாகும்.

## ஸ்ரீமான் எஸ். ராமநாதன்.

கதர் போர்ட்டு காரியதரிசி ஸ்ரீமான் எஸ். ராமநாதன் ரணசிகிச்சை (ஆப்ரேஷன்) செய்து கொள்வதற்காக சென்னை சென்று அங்கு ஆஸ்பத்திரியில் ஆப்ரேஷன் செய்து கொண்டு சுகமே இருக்கிறார். நான்கு நாளையில் ஈரோட்டுக்கு வருவார்.

# தமிழ்த்தாய்.

தமிழ் நாட்டில், தமிழ் மக்களிடையில் யாய் தமிழைப்பற்றி எழுதும் நிலையில் நமது தமிழ்த்தாய் இருக்கின்றாள். தமிழ்த்தாயின் பிள்ளைகள் ஆங்கில மாதின் பிள்ளையாகவும், பிறமொழிகளின் பிள்ளையாகவும், மாறிவருங்காலத்தில் இவ்வெழுத்தேனும் எழுதாதிருப்போமாயின் நமது கடமையினின்றும் வழுவினோம் ஆவோம். தமிழ்த்தாயின் பிள்ளைகள் வேறுமாதின் பிள்ளையாக மாறினும் மாறாதிருப்பினும் நமக்கு என்னை என்று வாளாகிடக்கும் மக்களையுடைய நாட்டில் நாம் இதையேனும் எழுதாதிருக்க எங்ஙனம் முடியும்.

தமிழ்த்தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் தமிழ் மொழியைப் போற்றாது மேனாட்டு மொழியில் மோகங்கொண்டும், அதனைப் பேசுவதாலும், எழுதுவதாலும் பெரும் புகழ் உண்டாகிறதென்றும் வீணே அருமைத் தமிழ்த்தாயை மறந்திருக்கின்றனர். மேனாட்டு மொழியைப் படிப்பது வயிற்றை வளர்ப்பதற்காக என்பதை அறவே மறந்துவிட்டனர்.

தமிழ்க் கல்வி சிறிது கற்றோரேனும் தமது தாயை யுள்ளன்போடு பற்றுகிறார்களோவெனின் அதுவும் இல்லையே! தமிழ்த்தாயைப் போற்றுவதென்பது அருமைத் தமிழ் வழக்கங்களிற் சிறந்தனவற்றைக் கொள்ள வேண்டுமென்பதை அன்பர்கட்கு யாம் சொல்லத்தேவையில்லை. தமிழ் நாட்டில் சுமார் நாலுகோடி மக்கள் இருந்தும் நமது தாய் இங்ஙனந் திண்டாடுவது தயின் தலைவிதிபோலும்.

தமிழ்மொழியாலேயே எந்த நாட்டுப் பொருள்களையும் ஒலித்திட முடியும், எழுதுவதும் தமிழ் எழுத்தாலேயே எழுதிடவும் முடியும். பிறநாட்டுப் பொருள்களைப்பற்றி ஒலிக்குமிடத்து ஒலித்திறம்அறிந்து ஒலித்திடின் ஒரு சிறிதும் குற்றமில்லாது ஒலிக்கலாம்.

இங்ஙனம ஒலித்திறனறியா மக்களே அருமைத் தமிழ்மொழியில் மற்றைய வெழுத்துக்களைக் கலக்கினர். மற்றைபோர்க்குத் தெரியாது என்று சிலர் கூறலாம், தெரியாதவர்கள், ஒருவர் பேசுவதையோ எழுதுவதையோ கேட்டும், கண்டும், பழகிடமுடியுமே. நமது 'அன்பு' ஏட்டில் தனித்தமிழாக எழுதிவருவதாற் பல அன்பர்கள் நாங்கள் அன்பேட்டினால் தமிழ் எண்களைக் கற்றுக் கொண்டோம் என்று நேரே கூறியிருக்கின்றனர். இது புகழுரையல்ல, உண்மையுரையாகும். இன்னும செய்தியேட்டு ஆசிரியர்களில் தமிழில் எண் எழுதத் தெரியாதோர் எத்தனைபேரோ இருக்கின்றனர் மற்றைய மக்கட்கு எண்கள் தெரியாதது ஓர் வியப்பல்ல.

ஈசுவரன், புத்தகம், துட்டன், ஒளடதம், தோத்திரம், புட்பம் கத்தூரி சுவாசம், சினேகம், விடயம் இவைகளில் வடமொழி எழுத்தை விலக்கி யெழுதியதாற் பொருள் தெரியவில்லை!

இவைகட்கு தனித்தமிழ் மொழியாகவழங்கவும் முடியாதோ உற்று நோக்குங்கள்!

கடவுள், ஏடு, கொடியன், மருந்து வணக்கம் அலரி, மான்மதம், காற்று, நட்பு, செய்தி இங்ஙனமாகத் தனித் தமிழில் எழுதி வாய் இனிக்கும்படி கூறுதல் எங்கள் மக்கட்கு எக்காலத்து வாய்க்குமோ!

மேனாட்டு மொழிகளில், நமது மொழிகளை வழங்கவேண்டுமெனின் தமிழ்எழுத்து ஒன்றிற்குப் பல எழுத்துக்கள் இயைத்தே எழுதிநின்றனர். அதேபோலப் பிற எழுத்துக்களைத் தமிழில் எழுதுங்காலத்து இரண்டு மூன்று எழுத்துக்கள் வேண்டுமாயின் எழுதி அவ்வெழுத்தை ஏன் காட்டுதல்கூடாது. வடமொழி எழுத்தொன்றைத் தமிழில் எழுதவேண்டுமாயின், சிறீமான் என்று எழுதலாம், இதில் அவ்வொலி இல்லையா? தனித்தமிழ் மொழியில் வழங்க வேண்டுமாயின் திருவன் என்று எழுதினாற் குற்றம் என்ன வந்துவிட்டது.

தமிழில் திருவன், திருவாளர். திருமிகு திருவாட்டி, என்று வழங்குவது சாலச்சிறந்ததாகாதோ? சிலர் எவைகளைப்பற்றியோ யெழுதிக்கொண்டு போம்போது திருவன், திருவாளர் என்று எழுதாதுபோயின் தமிழுக்கு என்னமோசம் வந்துவிட்டது என்று எளனம் செய்கின்றனர். இவர் இன்னும் இங்ஙனம் எழுதியும், தனித் தமிழ் மொழியில இனி எழுதப் பழகாதுபோயினும் சின்னாளின் எழுதுகோலின வாய் அறுபட்டிடுமென்று ஒருதலையாக அறிந்து கொள்ளட்டும்!

தமிழ் மொழியில் இயன்றவரை வடமொழிகளையும் கலவாமல் வருவதே சாலச்சிறந்ததாகும். இதுபோது அவ்வளவு முற்போக்குக்கு மக்களைத் திருப்ப முடியாது போயினும், வடமொழி எழுத்துக்களையேனும், மேனாட்டுமொழி எழுத்துக்களையேனும் கண்டிப்பாய் அகற்றித் தொலைக்கவே வேண்டும். இங்ஙனம் நிகழுமேல் மக்கட்குத் தமிழில் பேரூக்கம் நிகழ்ந்திடும். பின்னர்த் தனித்தமிழாகவே வழங்க முன் வந்திடுவர் என்பதும் ஒருதலை. இதனைச் ஏட்டாளர்கள் நோக்கிடின் விரைவிற் கைகூடும். செய்தி யேட்டாளர்களோ வயிற்றுப் பிழைப்பொன்றையே நோக்கித் தமிழ் மொழியைப் பாழாக்கிக் கொண்டு உரிமை, உரிமை என்ற எழுத்தைமாத்திரம் எழுதுகோலால் எழுதிடுகின்றனர். (உள்ளசதிலோ காசுவந்தால் சரியெனபதுதான்) எந்த நாடாவது முன்னேற வேண்டுமேல அந்நாட்டு மொழி முன்னேறவேண்டுமென்பதை யோர்கின்றார்கள் இல்லையே!

தமிழ் நாட்டிலோ பிறநாடுகளிலோ நடந்துவரும பத்திரிகைகளில் வடமொழி எழுத்தேனும், ஆங்கில எழுத்தேனும் இலலாத பத்திரிகை ஒன்றை இன்று கொண்டுவந்து கொடுப்பவர்களுக்கு நூறு வெண்பொற்காசுகள் இனும் கொடுக்கின்றோம். அம்மவோ! தமிழ்த்தாயின் பிள்ளைகள் இந்நிலையிலா இருக்கவேண்டும் தமிழ்ப் பத்திரிகையென்று பெயர்வைத்துக் கொண்டு சோற்றிற் கல்லைக்கலந்தது போலத்தமிழ் மொழியில் பிற எழுத்துக்களையா கலந்திடல்வேண்டும்! பத்திரிகை படித்திடும் அன்பர்களேனும் இதனை நன்று கவனிப்பின் ஒருவாறு திருந்தலாம். இவ்வாறு தமிழ்த்தாய்க்கு வேண்டு நலனுற்றுவோமானால் தமிழ்த்தாய், மேனிலையடைவாள், தமிழ்த்தாய் மேனிலை அடையுங்காலத்து மக்களுக்குள் ஒற்றுமையுணர்ச்சியுண்டாகும், ஒற்றுமையுண்டாகவே பல நலன் நிகழும்.

அன்பர்களே! தமிழ்த் தாயிடம் உண்மையன்புபதியுமேல், தமிழ்மொழி யெவர்பேசுகின்றாரோ அவர் உடன் பிறந்தவராக நெஞ்சில் நிகழும். நமது தமிழ் மக்களோடு நெருங்கிப் பழகுவதால் அவர்கள் அருமை தெரியாதிருக்கின்றோம். நீவிர், நமது நாடன்றிப் பிறநாடுகட்குச் செல்லுகையில் அருமைத் தமிழ்த்தாயின் பெருமை யுங்கட்குத் தெரியவரும்; பர்மாவை எடுத்துக்கொள்ளுங்கள். தமிழ் மக்களில்லாத ஒரு சிற்றூருக்குச் செல்வீர்களேல் ஆண்டு பர்மியர்களே விளங்குவர். அப்போது ஒரு தமிழ் மகனை அதிலும் தாழ்த்தப்பட்ட சாதியாரொருவனைக்காணில் எவ்வளவு களிபேருவகை கொள்ளுகின்றீர். இப்போது சாதி வேற்றுமை எங்கே? உமது பணச்செருக்கெங்கே? உமது கல்விச்செருக் கெங்கே? எல்லாம் தமிழ் மொழியின் முன்னர்ப் பறந்தோடிற்றல்லவா?

இந்த நிலையில் மாத்திரம் பற்றுதல் நிகழுவானேன். உடன் பிறந்தாரோடு வாழுங்காலத்து மாத்திரம் இவர் துருக்கக்கொள்கையினர், இவர் கிருத்தவர், இவர் நாடார், இவர பறையர், இவர் வண்ணார், இவர் சக்கிலியர், இவர் ஈழுவர், இவர் பள்ளர் என்ற வேற்றுமை தோன்றுவானேன்? இது உங்கள் அறியாமை! அறியாமை!!

தமிழ்க்கொடி வாடிக்கிடந்தது இப்போது வணிகநாட்டிற் சிறிது தலை தூக்கி நிமிரப் பார்க்கிறது. பிற ஒவ்வொரு ஊரார்களும் தமிழ்த்தாயைப் போற்ற எழுங்கள்! விடிந்துவிட்டது, இன்னும் தூங்காதேயுங்கள்! உங்கள் பொருளையெல்லாம் தமிழுக்காகச் செலவு செய்யுங்கள்? உங்கள் முயற்சியெல்லாம் தமிழுக்கே கொடுங்கள்! உங்கள் இளமையைத் தமிழுக்காகப் பயன் படுத்துங்கள்! பிறமொழிகளைத் தூற்றாதேயுங்கள்! உங்கள் மொழிக்காகப் பாடுபடுங்கள் அப்போதே நாடு உரிமை யெய்தும், அப்போதே நமது நாட்டு ஏழையர்க்கு உய்வுண்டு. எல்லீரும் வாரும்.

அம்மை அப்பனை வணங்குவோமாக!

அன்பு! அன்பு!! அன்பு!!!

"அன்பு"

## பிராமணப்புரோகித பகிஷ்காரம்.

8-8-27 உ ஞாயிற்றுக்கிழமை அய்யம்பாளையம் கிராம கர்ணம் எஸ். அழகிய சுந்தரம் பிள்ளை அவர்கள் தன்னுடைய தகப்பனார் வருஷாந்தர சிரார்த்தத்தை பிராமணர்களைக்கொண்டு நடத்தாமல் ஸ்நானம் செய்து விநாயகரை வணக்கம் செய்து விட்டு தன்னுடைய பந்துக்கள் சிநேகிதர்களுக்கு சாப்பாடு நடத்தி பூர்த்தி செய்தார் அய்யாரின் கொள்கை மிகவும் பாராட்டத்தக்கதே என்று அய்யம்பாளையம் திரு. சோமசாமிநாடாலியார் எழுதுகிறார்.

## சிங்கப்பூர்.

ஸ்ரீமான்கள் கோ. சாரங்கபாணி நாயுடு, கோபால், ராஜகோபால், சுப்பய்யா, கோவிந்தசாமி, வெங்கிடாசலபதி ஆகியகனவான்களும், கோலாலம்பூர் "குடி அரசு" அபிமானிகளும் சேர்ந்து கீழ்காணும் கனவான்களை "குடி அரசு" சந்தா நேயர்களாகச் சேர்த்துக்கொடுத்திருக்கிறார்கள்.

360 எம். ராமசாமி வள்ளலார்
361 எஸ். எஸ். சின்னத்தம்பி
362 கே. என். நாராயணதாஸ்
363 எஸ். எம். சுந்தரம்
364 வி. பக்கிரித்தேவர்
365 டி. முனிசாமி தேவர்
366 . எ. லட்சுமணன்
367 ஆர். எஸ். கே. சுப்பராய செட்டியார்
368 எஸ். ராஜகோபால் உடையார்
369 எம், எஸ். வடிவேலு பிள்ளை
370 எஸ். கே: வி, ஆர், வீரப்ப பிள்ளை
371 வி. ஒ. கே. எஸ். காமிநாத பிள்ளை
372 என். எஸ். ஆர். எம். சிங்காரம் பிள்ளை
373 டி. வன். கே. கோவிந்தசாமி பிள்ளை
374 ஆர். சுந்தர முதலியார்
375 ஏ. எஸ். பி. எஸ். வி. ஆர். மாணிக்கம் பிள்ளை
376 கே. சி. துரையப்பா
377 வி. வேங்கைமைதீன் ராவுத்தர்
378 எம். முருகப்பா
379 டி. கே ஈ. ச. அப்துல்கனி
380 எஸ். பி. காசிம் ராவுத்தர்
381 எம். ஈ. எஸ். ஈ. மகாமூன் பிரதர்ஸ்
382 கே. எஸ். முகமதின் பிச்சை ராவுத்தர்
383 எஸ். டி, பி, பொன்னுசாமி பிள்ளை
384 கே. இஸ்மால் கனி ராவுத்தர்
385 வி. எ. பி எஸ். முனியப்ப செட்டியார்
386 எஸ். என். எ. டி. சிதம்பரம் செட்டியார்.
387 ஆர். கே. டி. எம். சோமசுந்தரம் செட்டியார்
388 எம். ஆர். எம். அருணாசலம் பிள்ளை
389 எம். கே. பி. ஆர். வீராசாமி நாயுடு
390 கே. எ. எம். பி கல்லைய பிள்ளை
391 எம். கே எம். கருப்பன் செட்டியார்
392 கே. எம. எம். அளகப்ப செட்டியார்
393 எ. எல். எம். முத்தைய பிள்ளை
394 கே. வி. ஏ. எல். முத்தைய செட்டியார்
395 எஸ். பி கே. அண்ணாமலை செட்டியார்
396 வி ஆர். எஸ். ராமசாமி பிள்ளை
397 ஏ. என். அண்ணாமலை செட்டியார்
398 எஸ். பி. வி. ஈ. வைரவன் செட்டியார்
399 எம். எம். எல். பெரியண்ணன் பிள்ளை
400 ஜி. வி. ஸ்ரீனிவாசகம்
401 அப்துல் ரஜாக் கான்
402 கே. கொண்டய்யா
403 ஆர். என். வி. ஈ. உடையப்ப செட்டியார்
404 எம். பி. எம். கருப்பையா பிள்ளை
405 எஸ். ஆர். எம். கதிரேசம் செட்டியார்
406 வி. தாமோதர பிள்ளை.
407 என். டி என் நடேசன் செட்டியார்
408 ஏ. வி ஏ. பழனியப்ப செட்டியார்
409 ஏ. வி. பி. எம். ஆர். எம். சிதம்பரம் செட்டியார்
410 என். என். சொக்கலிங்கம் செட்டியார்
411 எம். பி. ஆர். எம். காசிவிஸ்வநாதம் செட்டியார்
412 என். எஸ். பி. ஆர். எம். மேயப்ப செட்டியார்
413 எஸ். எம். வீரப்ப செட்டியார்
414 கே. ஆர். எஸ். பி. ராமநாதன் செட்டியார்
415 ஆர். எம் எ. ஆர். வீ, பி. பழனியப்ப செட்டியார்
416 என். கே. ஆர். எம். நாகப்ப செட்டியார்
417 எஸ். வி. சின்னத்தம்பி
418 வீ. ராமலிங்கம் பிள்ளை
419 எஸ். பி. எஸ். ஆர், எம், நாராயணன் செட்டியார்
420 வி. பி. ஆர். பி. எல். சொக்கலிங்கம் செட்டியார்
421 வி. எஸ். பி. அடைக்கலவாணன் செட்டியார்
422 பி. எம். என் எம். முத்துகருப்பன் செட்டியார்

குறிப்பு:— மேற்படி சந்தாதாரர்களுக்கு தமிழ் மக்கள் சுயமரியாதையின் சார்பாகவும் நமது சார்பாகவும் நமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துவதுடன், சந்தா நேயர்கள் சேர்க்கும் எமது அன்பர்களுக்கு ஆங்காங்குவேண்டிய சவுகரியங்கள் செய்து கொடுத்து சந்தா நேயர்களைச் சேர்த்துக் கொடுக்கும் எனைய அன்பர்களுக்கும் தமிழ் மக்கள் சுயமரியாதையின் சார்பாகவும் எமது சார்பாகவும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப—ர்.)

### தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் சங்கம் நிர்வாகக்கமிட்டிக் கூட்டம்

11—8—27 மாலை இரண்டு மணிக்கு 'தஞ்சை ஜில்லா போர்டு மீட்டிங்குஹாலில்' மேற்படி கூட்டம் நடைபெறும். தாங்கள் விஜயம் செய்யக் கோருகிறோம்.

விஷயங்கள்

1. மகாத்மா காந்திபடிகளின் சுற்றுப் பிரயாணம், 2 கோயமுத்தூர் மகாநாட்டுத் தீர்மானம். 3 நமது ஜில்லாவில் தாலூகா நகர் கிராம சங்கங்களை ஏற்படுத்தல், அதன் தேர்தல் முதலியவைகள். 4 நமது ஜில்லா சங்கத்தை மாகாண தென்னிந்திய நல உரிமைச் சங்கத்துடன் இணைத்தல். 5 திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் "திராவிடன்". ஆசிரியர் பதவி ஏற்பது 6 பிரசாரக்கமிட்டி ஏற்படுத்தல். மற்றும் காரியதரிசியால் கொண்டுவரப்படும் இதர விஷயங்களும் ஆலோசிக்கப்படும்.

இங்ஙனம் கே. சி. ராஜதுரை செட்டியார்
சி. நடராஜன்,
காரியதரிசிகள்.




நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்

### பழனி. சி. எம். சாமி மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையிலேயே நீற்றப்பட்டது. பெரிய மஹான்களின் முறை அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும் இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

### குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30

நற்சாட்சி:—நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சினேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பகோருகிறேன் கா. முகம்து அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

### குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்பு இவைகள்குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம

### சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

**C. மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னைபிராஞ்ச் ஆபீஸ்:—முருகன் எஜன்ஸி 43 அர்மனேக்காரத் தெரு ஜி. டி. சென்னை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் வந்துவிடில் கோவிலில் அக்குழந்தையை ஒரு துணியில் (பிச்சைக்காரர்கள் வீதியில் உட்கார்ந்து எதிரில் துணியை விரித்திருப்பதுபோல்) கிடத்தி பிச்சை யெடுப்பதாகப் பிரார்த்தித்துக்கொண்டு அவ்வாறே பிச்சையெடுப்பதை நேயர்கள் இன்னும் திருவிழாக் காலங்களில் பார்க்கலாம். இது எவ்வளவு இழுக்கான செய்கை? இப்படி அவகேட்டையும் அசட்டை செய்து ஐயமேற்கும் பெண்மணிகள் தாம் செலுத்தும் அப்பணம் எத்தகைய காரியங்களுக்குப் பயன்படுகிறதென உணர்கிறார்களா? கடவுள் அப்பணத்தை தம்மிடம் வாங்கிக்கொள்ளுகிறாரா? அல்லது ஏழைகளுக்குத் தருமங்கள் ஏதாகிலும் நடைபெறுகின்றனவா? ஆனால் என்ன நடைபெறுகின்றது? அது பல பாவச் செய்கைகளுக்குத்தான் செலவாகிறது. நம் பெண்கள் வாசித்தவர்களாயிருந்தால் "ஏற்பதிகழ்ச்சி" எனக்கூறிய ஔவையாரைப்பின்பற்றி மங்கையரில் மாணிக்கங்களாய் விளங்குவான்றோ? பெண் கல்வியை எதிர்க்கும் சகோதரர்களே யோசியுங்கள்.

## அடி தண்டம் போடுதல்.

இது, பெண்கள் தாங்கள் நீராடி ஒரு தேங்காயை எடுத்து உருட்டிவிட்டு அது நிற்கும் இடத்தில் அஷ்டாங்கமும் படும்படி விழுந்து நமஸ்கரித்து விட்டு மறுபடியும் அத்தேங்காயை எடுத்து உருட்டிக்கொண்டுபோவதாகிய பிரார்த்தனை முறை. இவ்வாறு சிலர் தங்கள் வீட்டிலிருந்து கோயில வரையில் என்றும், சிலர் கோயிலைச் சுற்றிலும் என்றும், மலையுள்ள கோயில்களாயிருந்தால் மலையைச் சுற்றியென்றும்பிரார்த்தித்துக் கொள்வதுண்டு. அது மிகவும் பரிகசிக்கத்தககதும் அருவருக்கத்தக்கதுமான செய்கையென்பதில் என்ன சந்தேகம். தெருக்களில் ஜனங்கள் எச்சிலுமிழுந்தும் குப்பைகளைக்கொட்டியும் அசுத்தப்படுத்துகின்றனர். அன்றியும் பல கால் நடைகளின் மலங்கள் தெருக்களில் மண்ணோடு மண்ணாகிப் போகிறபடியால் அவைகளிலிருந்து பல வித புழுககள் உண்டாக இடமேற்படுகின்றது. வைத்தியர்களும் ஜனங்கள் அதிகமாக வசிக்கும் (சென்னையைப் போன்ற) ஊர்களில் தெருக்களில் வெறுங் காலோடு நடப்பதே தவறு எனக் கூறுகிறார்கள், ஏனெனில், கொக்கிப் புழுவென்றொரு விதமான புழுக்கள் நம்காலின் சதையைப் பற்றித்துளைத்து உட்சென்று தீராத வியாதிகளை உண்டுபண்ணுமென்றியம்புகின்றனர். இப்படியிருக்க தேகமெல்லாம் எச்சிலும் குப்பைகளும் படும்படியாக தெருக்களில் விழுந்து நமஸ்கரித்துக்கொண்டே செல்லும் இக்கோலத்தைக்கண்டால் நம் மனம் பதறுகின்றது, கண்ணீர் பெருகின்றது. இதுவும் ஒரு பக்தியின் பெருக்கா என நினைக்க வியப்புண்டாகிறது. இத்தகைய வழக்கங்கள் தாங்கள் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் ஆரியர்களினூடேயும் இல்லை. நமது பெண்களே இத்தகைய நிலைமையிலிருக்கின்றனர். காரணம் கல்வியின்மையே.

## வேப்பஞ்சேலை யுடுத்தல்.

இவை பெரும்பாலும் கிராமங்களிலேயே நடைபெறுகின்றன. அநேகமாக பிரார்த்தித்துக்கொண்ட குடும்பத்தினரும் பிரார்த்தனைக்குள்ளானவர்களும் குறித்த ஆற்றங்கரைக்கோ குளத்தங்கரைக்கோ செல்லுவார்கள். அங்கு பூசாரிகள் தாங்கள் செய்யவேண்டிய வேலைகளைப் பூர்த்தி செய்து குறித்த ஆணையோ, பெண்ணையோ குளிக்குமாறு செய்து அவர்களணிந்திருக்கும் ஆடைகளைக்களையுமாறு கூறி வேப்பிலைக் கொத்துகளைக்கட்டிய கயிற்றை நீட்டி கட்டிக் கொள்ளுமாறு உத்திரவிடுகின்றனர்.

பிறகு பூசாரிகள் அதற்குரிய தெய்வத்தை வர்ணித்துக்கொண்டே முன்னர் செல்லுவார்கள். பின்னால் இவ்வேப்பஞ்சேலையுடுத்தவர்கள் முன்னவர்களைத் தொடர்ந்து ஊர்வலமாக வீதிகளில் சுற்றிக்கொண்டு வந்து அம்மன் கோயிலுக்குப் போய் பூசை முதலியவைகள் நடைபெறுவதுண்டு. இதில்தான் பூசாரிகளின் கொடுமை நிறைந்திருக்கிறது. யாதெனில் அப்பெண்ணோ, ஆணோ கொஞ்சம் இவ்வேப்பஞ்சேலை வைபவத்தை இகழ்ந்து கூறியிருந்தால் அவர்கள் அவமானப்படவேண்டியதுதான். அதிகம் சொல்வானேன்? அவர்கள் ஊர்வலம் வந்துகொண்டிருக்கையில் வேப்பிலைகள் கழுவி கொஞ்சம் கொஞ்சமாக கீழே விழுந்து விடும் அது அம்மனின் கோபமென வேப்பஞ் சேலை கட்டிக்கொண்டவர்களுக்குக் கூறி பயமுறுத்தப்படும். அதில் நடக்கும் பூசாரிகளின் சூதுகள் ஒன்றாகிலும் ஒருவராலும் கவனிக்கப்படுவது கிடையாது. உலகில் நாகரிகம் பரவி உடுக்க பருத்தி ஆடைகள் இருந்தும் நம ஜனங்கள் ஒரு நாளாகிலும் இலையாடைகளையுடுத்தி ஆனந்திப்பதை நோக்கில் கிறிஸ்துவர்கள் ஆதிகாலத்தில் தங்கள் மனிதர்கள் இலையாடைகளையுடுத்தியிருந்தனர் என்று கிறிஸ்துவ வேதத்தில் கூறியிருப்பதை இவர்கள் இன்று செய்கையில் காண்பிப்பது போல தெரிகின்றது. நந்தமிழ் புதல்வரும் புதல்வியரும் இத்தகைய அவகேட்டுக்காளாகாமல் தப்பித்துக் கொள்ளும் நாள் எந்நாளோ?

## கருடன்

ஒரு சிலர் தினந்தோறும் கருடனைத் தேடி அதைப் பணியாமல் போகிறதேயில்லை. அப்படி அதன் தரிசனம் கிடைக்காத நாளை துரதிர்ஷ்டமான கெட்ட நாளெனக் கருதுகின்றனர். சிலர் பச்சைக்கறிகளை அறுத்துப்போட்டு கற்பூராதனை செய்கின்றனர். அது எதற்கென்றே விளங்கவில்லை. ஏனெனில், மற்றொரு கடவுளாகிய நாகப் பாம்பை கருடன் கொன்று தின்று விடுகிறபடியால், அவைகளைக்கொல்லாமல் தாம் போடும் கறித்துண்டுகளைத்தின்று சும்மாயிருந்துவிடும் என்றெண்ணியோ அல்லது கடவுளிடமிருந்து ஐஸ்வரியங்களைக் கொணர்ந்து தம் வீட்டில் போடுமென்றோ தெரியவில்லை. இவர்களின் நம்பிக்கை எவ்வாறாயினும் பட்சிகளின் பாடு தினம் சாப்பாடு கிடைப்பதனால் சுகம்.

## பதி வைத்தல்.

ஒரு சிலர், பணங்களைச் செலவு செய்து ஒரு விளக்கெண்ணெய் விளக்கை நன்றாய் அலங்கரித்து வைத்து பூசாரிகளை வரவழைத்து அவர்களுக்குப் பணங்கொடுத்து அம்மனை வரவழைத்து தமக்கு வரப்போகும் இடுக்கண்கள் யாதென விசாரிப்பார்கள். அம்மாதிரி பூசாரிகள் வருவிக்கும்சமயத்தில்தான் நாம் முன்னொரு கட்டுரையில் குறித்துள்ளபடி மூலைக்கொரு சாமி தோன்றிவிடும். அதது தன்னிஷ்டம் போலும் காலநிலையை யுணர்ந்தும் ஒவ்வொன்றைக் கூறிவிட்டு மலையேறிவிடும். ஆனால் மறு ஞாயிற்றுக்கிழமையே தம் துன்பங்கள் பறந்தோடுமென நினைத்து பிறவுயிர்கள் பலி கொடுக்கப்படும். இப்போதைய அரசாங்கத்தில்தான் தன்னுயிரைப்போல் பிறவுயிரைக் காக்குமுறை மறைந்திருக்கின்றன. பேதைக் குடிகளும் அதையே யன்றோ பின்பற்றுவர். நம்மிந்தியாவில் இத்தனை மனிதர்களின்மீது தெய்வங்கள் இருக்கும் போது கற்சிலைகளை ஏனோ தொழல் வேண்டும்? தெய்வத்தை வரவழைக்கும் சக்தியுடைய மனிதர் இத்தனை பேர் நம் நாட்டிலிருக்க மகாத்மாகாந்தியின் மொழிப்படியும் மற்ற பெரியோர்களின் சொற்படியும் (அஹிம்சாபரமோதர்ம) நடப்பதைவிட்டு ஒரு ஆடு வெட்டி அம்மனை வரவழைத்து சுகந் தாம்வாங்கிக்கொள்ளலாமன்றோ! அந்தோ! வெட்கக்கேடு. நாம் எவ்வளவு ஏமாற்றுதல்களுக்குள் அகப்பட்டிருக்கிறோம்.

## குடைக் கலியாணம்.

அம்மையோ அல்லது இதர பயங்கர வியாதியோ வந்துவிட்டால் கலியாணத்திற்குமுன் குடைக்கலியாணம் செய்வதாகப் பிரார்த்தித்துக் கொள்வதுண்டு. அதேபோல் மணமகனை பெண்போல் சிங்காரித்து வீதிகளில் ஊர்வலம் வரச் செய்வதுண்டு. பகலில் ஊர்வலம் வந்து இரவில் கன்னித் தெய்வங்களுக்கு உயிர்பலிகளை நிகழ்த்துகின்றனர். இதில் அவர்களுக்குச் சிறிதாவது அருவருப்புத் தோன்றுவதேயில்லை. இம்மாதிரி நல்ல காரியங்களில் இரத்தஞ் சிந்தும் செயல்களை யகற்றி அப்பணத்தை தர்மகாரியங்களுக்குச் செலவிட்டு அதைக் கொடைக் கலியாணமாகச் செய்யலாகாதா? இத்தகைய கோரங்களெல்லாம் நமது நாட்டை விட்டு ஒழியும் வரை நாம் உய்யும் நாள் வரப்போவது கிடையாது. இவ்வளவுக்கும் அறிவின்மையே காரணமென்பதில் சந்தேகமோ.

## காட்டேரி.

ஒரு சாரார் வீட்டிலிருந்து எல்லா சாமான்களையும் கோழிகள் உட்பட எடுத்துக் கொண்டுபோய் எங்காவது வனங்களில் அல்லது தோப்புகளில் தங்கியிருந்து எல்லாச் சடங்குகளும் அத்தோப்பிலேயே நடத்தி அக்கோழியையோ ஆட்டையோ அறுத்து அந்த இரத்தத்தை எடுத்து நாலா பக்கங்களிலும் தெளித்துவிட்டு அக்கறியை எடுத்து அங்கேயே சமைத்து, அம்மனுக்குக் கள்ளு, சுருட்டு முதலியவைகளுடன் சமைத்த கறிகளையும படைத்து எல்லோரும் சேர்ந்து அவைகளைச் சாப்பிட்டுவிட்டு

மீதியை அங்கேயே புதைத்து பின் வீட்டிற்கு வருகின்றனர். மீதியை வீட்டிற்கு எடுத்து வந்தால் காட்டேரி கொன்றுவிடுமாம். கள்ளும், கறியும் தின்னும் பிசாசுகளும் [illegible]ர்களுக்குத் தெய்வமாயிருக்கின்றன.

### காணிக்கை கொடுத்தல்.

இதுபெரும் ஏமாற்றமான செய்கையென்பதில் ஐயமில்லை. நம்மில் அநேகர் கண்ணைப்போலும், மூக்கைப்போலும், காதைப்போலும், காலைப்போலும் பொன்னாலும் வெள்ளியாலும் செய்தும், பணங்களாகவும், காசுகளாகவும் காணிக்கை செலுத்துவதுண்டு. இக்காணிக்கையெல்லாம் கடவுளின் பொக்கிஷப் பெட்டிக்குச் செல்லுகின்றதா? நாம் கொடுக்கும் இக்காணிக்கைகளை கோயில் தாசிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இக்காணிக்கைப் பணமே அங்கவீனமில்லாமல் நன்றாயிருக்கும் ஒரு பகுதியாரைச் சோம்பேறித் தனத்திலாழ்த்தி வைக்கின்றது. ஏனெனில் கோயில்களில் செய்யப்படும் நைவேத்தியங்களை பிராமணர்களே பக்ஷித்துத் தின்றுவிட்டு யாதொரு வேலையும் செய்யாமல் சோம்பல் தொழிலை வளர்க்கின்றார்கள். அதோடு போகின்றதா? இன்னும் எத்தனையோ அக்கிரமங்கள் கோயில்களில் நடைபெறுகின்றன. பலவழிகளில் புரோகிதர்கள் அப்பணத்தை எடுத்துக் கொள்ளுகின்றனர். அவ்வாறு கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவதைவிட அவரது பேரால் கண், குருடு, செவிடு, நொண்டி, போன்ற சம்பாதிக்க இயலாத ஏழைகளுக்கு அன்னமளித்தால் எவ்வளவோ புண்ணியமிருக்கும். கடவுளுக்கு மேற்கூறிய வகைகள் போன்ற பிரார்த்தனைகளையெல்லாம் செய்துவிட்டு ஏழைகளுக்கு அன்னமளிக்கிறேனென்றும் பிரார்த்தித்துகொண்டு அதை நிறைவேற்றினால் எவ்வளவு புகழத்தக்கதாயிருக்கும். இவ்வாறு மேற்கூறிய வைதீகர் ஒரு சாரார் பகிரங்கமாகவே பெண்கள் கல்வி கற்பது கூடாது எனக்கூறி வருகின்றனர். கற்ற பெண்கள் மேற்கூறிய வழக்கங்களையெல்லாம் செய்வார்களா வென்று ஆராயுங்கள். பெண்கள் படித்திருந்தால் வீட்டிலிருக்கும் அனாச்சாரங்கள் இருந்திருக்கமாட்டா. கல்வியின்மையால் [illegible] கடவுள் வழிபடும் உண்மையான பாதையை உணராது உழலுகின்றனர். அந்தோ! [illegible] மங்கையர்க்கரசியார் போன்ற [illegible] இக்காலை [illegible] ஏதேனும் புரிந்தனரா? மங்கையர்க்கரசியாரின் கணவன் [illegible] சமயத்தைச் சேர்ந்து நின்ற போது இத்தகைய சிறு தேவதைகளுக்கும் கள்ளும், சாராயமும், கருவாடும் வைத்து படைத்தனரா? அல்லது மேற்கூறிய பிரார்த்தனைகளில் ஏதேனும் செய்தனரா? இல்லவேயில்லை. இவ்வாறு [illegible] இவை [illegible] பெரியோர்க்கும் [illegible] செய்யவேண்டிக் கொள் [illegible] அடி பணிந்து கேட்டுக்கொள்ளுகின்றேன்.

## பூளைமேடு, சர்வஜன வித்தியாசாலையின் மூன்றாவது ஆண்டு விழா.

ஷை ஹைஸ்கூல் [மானேஜ் மெண்டார்] பி. எஸ். ஜி. அன் சன்ஸ் அவர்களின் சார்பாக பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு அவர்கள் சென்னை அரசியல் வரவு செலவு (மெம்பர்) கனம் டி. இ. மாயர் சி. எஸ். ஐ. சி.எஸ்., அவர்கட்கு 8-8-27ல் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்து வெளியிட்ட 1926-27 ஆம் ஆண்டு அறிக்கை:—

அன்பர்களே!

பூளையம் பதியின்கண் இவ்வித்தியாசாலை தோன்றிச் சில ஆண்டுகளாக நடைபெற்று வந்தமை, வருகின்றமை, பெரியோர்களனைவரும் அறிந்தேயுள்ளீராயினும், இக்கலாசாலையைப் பற்றி ஆண்டுதோறும் அறிக்கைப்பத்திரம் வெளியிட்டு வருவதும, மகாநாடுகள் பல கூட்டுவதுமான எமது முக்கிய நோக்கம், தம்போன்ற கல்வியறிவிற் சிறந்த பெரியோர்களனைவரும சர்வஜன வித்தியாசாலை என்னுங்குழவியின் வளர்ச்சியையும், அதனைப் புரந்தற்கு எமதுள்ளத்திலுள்ள பேராவலையும் அறிவிப்பதேயாகும்.

நமது கலாசாலை என்னும் குழவியும், பெயர் சூட்டப்பெற்ற நாள் முதற்கொண்டு அறத்துறையோர் பலரால் போற்றி வளர்க்கப்பெற்று வருவதோடு கொஞ்சம் கொஞ்சமாக வளர்பிறைத் திங்கள்போல் வளர்ந்து கொண்டே வருகிறது. இக்குழவிக்கு மூன்றாட்டகவை நீக்கி, நான்காட்டகவை அரும்பியுளது. இதுவரையிலும் இக்குழவியைப் பாலூட்டி வளர்த்த அன்பர்களும், ஏனைய கனவான்களும் இம்மகவிடத்தில் அன்பு பூண்டு ஆசிகூறி, அன்னத்தை யூட்டி இதன் வளர்ச்சியையும், வருவாயையும் உறுதிப்படுத்துமாறு வேண்டுகின்றனம்.

### செல்வ நிலை.

இக்கலாசாலைக்கென அமைத்துள்ள கட்டிடத்திற்கு இதுவரை ரூ. 47,741—2—3 செலவிடப்பெற்றும், இவ்வளவு ஒரு பெருந் தொகை செலவிடப்பெற்றும், ஆண்டுக்காண்டு மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருதலால் போதிய கட்டிடப் புழக்கம் இருப்பதாக எண்ணுவதற்கில்லை. இக்கட்டிடத்திற்காக அரசியலாரால் எத்தகைய உதவியும் செய்யப்படவில்லை என்பது உண்மையாயினும், கடந்த ஆண்டு இன்றியமையாததாயிருந்த சயன்ஸ் கட்டிடம் ஒன்று அமைக்க ரூ. 13,270 மதிப்பிட்டு அத்தொகையில் ½ பாகம் கல்வியிலாக்காதார் கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். மீதி ½ பாகம் தொகையைத் தொகுக்கக் கோவையிலும், மற்றுமுள்ள பல தலைவர்களிடமும் நன்கொடையாகப் பெற்று வந்தபோது திருவாளர் காளீஸ்வரர் மில்ஸ் ஏஜண்டு, திவான்பகதூர் பி. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் அன்புகூர்ந்து தாமே ½ பாகத்தைக் கொடுப்பதாக வாக்குறுதி செய்து பெரும்பான்மையும் கொடுத்துதவியுள்ளார்கள் என்றதை தெரியப்படுத்துவதோடு இப்பெரியார்க்கு நமது நன்றியறிதலைச் செலுத்தி எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருளை நிறையப்பெற்று இன்பெய்தும் பொருட்டு ஆண்டவனை வாழ்த்துவோமாக. கலாசாலை தோன்றிய நாள் முதல் இதுவரை பொதுமக்களால் நன்கொடையாக வரவு கிடைத்த ரூ 30,764—2—0 இத்தொகையில் சயன்ஸ் கட்டிடத்தின் பொருட்டு திருவாளர், காளீஸ்வரர் மில்ஸ் ஏஜண்டு திவான் பகதூர் பி. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களின் உறுதிச் சொற்கு முன் தொகுக்கப்பட்ட தொகை ரூ. 1239-0-0. இப்பணத்தை மூலப் பொருளாகவும், மீதி தொகை ரூ. 28445-2-0 இத்தொகையை நிறைவேற்ற செலவுகட்கும் ஒதுக்கி வைக்கப்பட்டு இந்த நிர்வாகப் பொருளிலிருந்து இம் மூன்றாண்டுகளாக மாணவர்களால் சம்பள மூலமும், கல்வியிலாகாதாரால் கிராண்டு மூலமும் கிடைக்கப்பெற்ற தொகைகட்குமேல், கலாசாலை ஆசிரியரின் சம்பளவகையிலும், மேசை நாற்காலி, புத்தகங்கள், கடன் தொகைகளுக்கு வட்டி முதலியவற்றின் பொருட்டும் ஏற்பட்ட மிகுதிச் செலவுகள் நீக்கி ரூ, 9376—0—1 மீதி உள்ளது. இக்கலாசாலையில் இப்பொழுது பயின்றுவரும் மாணவர் பெரும்பான்மையும் உதவிச் சம்பளமும், பகுதிச்சம்பளமும் உள்ள மாணவர்களாக இருந்தால் மாணவர் சம்பளமூலமும், அரசியலாரால் கொடுக்கப்படும் கிராண்டுமூலமும் பெறக்கூடியபொருளைக்கொண்டு செலவுகளை ஈடுசெய்து கொள்ளலாம் என்பது இயலாத காரியம். நிர்வாகப்பொருள் குறைந்துவருங்காலத்து ஒரு மூலப்பொருள் அமைத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டிய உண்மையாகும். ஆதலால் இவ் அறத்தொண்டில் கண்ணோட்டம் வைத்துத் தத்தம்மால் இயன்ற பொருளுதவி செய்யவேண்டும் என்று பெரியோர்களை வேண்டுகின்றனம்.

### கல்வி.

இக்கலாசாலையில்சென்ற ஆண்டு279பிள்ளைகளும் 9 பெண்குழந்தைகளும் பயின்று வந்தார்கள். இவர்களுள் பெரும்பாலோர் தேர்தலில் தேறியிருக்கின்றார்கள். 10-ஆம் வகுப்பும் திறவப்பெற்று 14 பிள்ளைகள் பயின்று வந்தார்கள். அவர்களுள் ஒன்பதின்மா தேர்தல் பெற்றார்கள். எனவே நமது தலைமை ஆசிரியர் திருவாளர் ஆர். சீனிவாசய்யங்கார் அவர்களுடைய திறமையையும் ஏனைய ஆசிரியர்களின் கூட்டுறை வன்மையையும் முயற்சியையும், ஊக்கத்தையும் பன்னிப் பன்னிப் பகரவும் வேண்டுமோ! இனி, இவ்வாண்டு இக்கலாசாலையில் சரித்திரம் முதலிய சில பாடங்கள் தமிழிலேயே கற்பிக்கத்தொடங்கப் பெற்றுள்ளன. சயன்ஸ் சம்பந்தமான பாடங்களும் தமிழிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு நாட்டுக்கு நலம் பயக்குந் துறைகளில் நமது கலாசாலை ஆசிரியன்மார் அனைவருக்கும், கல்விபயின்றுவரும் மாணவிகட்கும், மாணவர்கட்கும் எமதுயனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகின்றோம்.

### மாணவர் விடுதி. (ஹாஸ்டல்)

சென்ற ஆண்டு ஹாஸ்டலில் 55 மாணவர்கள் உண்டு, உடுத்தி, உறைந்து கல்வி பயின்றுவந்தார்கள். விடுதியில் 4 மாணவர்கட்கு இலவச உணவு அளித்து வரப்பெற்றது. விடுதியில் திருவாளர் தலைமை ஆசிரியர் ஆர், சீனிவாசய்யங்கார் அவர்களும், திரு. தமிழ்ப்பண்டிதர் அன்பர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் இருந்து மாணவர்களை நல்லொழுக்கம் முதலிய துறைகளில் பயிற்சிபெறச் செய்தமைக்கு மிகவும் நன்றி பாராட்டுகின்றோம். ஆண்டு தோறும் இதுபோன்றே பலதுறைகளிலும் மாணவர்கள் பயின்று மேம்பட்டு நாட்டிற்குழைத்து நலம் பெற வேண்டி ஆண்டவனை வாழ்த்துகின்றோம்.

---

"சுயமரியாதையே நமது பிறப்புரிமை,சுயராஜ்யம் வயிற்றுச் சோற்றுரிமை."

# $ 500 இனாம்! $ 500 இனாம்!!

சதாநந்த யோகீஸ்வரருடைய
## மகா வீரியவிருத்தி லேகியத்தை

நாற்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையென்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவனேனும் செய்துகொடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500. (சிங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பெனியிலிருந்து வெகுமதியாய்க் கொடுக்கப்படும்.

ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.

இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்தலேகியம் அதி விலையுயர்ந்த பொருள்களாகிய அப்ரேச், அம்பர் கஸ்தூரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு இன்னுமனேகவிசமான கொட்டைகளையும், மூலிகைகளையும், பஸ்பவகைகளையுங்கொண்டு செய்யப்பட்டது இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களை யடக்கியதாகயிருந்தும், இதை தனவந்தர் முதற் கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு இதன் அபூர்வ சக்தியையும், துரித சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இது ஆண் தன்மையை கெட்டுப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, சுக்கில பலவீனம் மூதலியவைகளை போக்கி சுறு சுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும் இதுவுமன்றி நித்திரையில் நீர்வடிதலையும் நிறுத்தச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒருமுறைவாங்கி சாப்பிட்டு பரீட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாட்சியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுர் வேதவைத்திய சிரோமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனானி வைத்திய பண்டிதர்களும் இன்னம் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக ஏராளமான நற்சாட்சி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலதை மாதிரிக்காக பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.




உறுதிமொழிப் பத்திரம்.

டாக்டர் M. சொட்டாசிங் L. M. S.
டாக்டர் S. துரைசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S. ஜோஸ் டிவிஷனல் எஞ்சினீர் G. P O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்பரரின் பிரதம சிஷ்யரும், வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம் சாது சோமசுந்திர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான் இ. வீராசாமி நாயுடு அவர்கள்
ஆயுர்வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை ஆயுர்வேத சித்தவைத்திய பூஷணம்.
சு. லாஸரஸ் பண்டிதன்
ஸ்ரீமத் T. R, மகாதேவ பண்டிதர் அவர்களின் மருமகரும் மாணாக்கருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ M. நடராஜ பிள்ளை

முழு விபரமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2-வெள்ளிதான் ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு, உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் $ 3-75,

பிராஞ்ச் ஆபீஸ்:— 17, சைனா ஸ்திரீட், பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்த ரசம் கம்பெனி, 251 சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:-இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லது மருந்து அனுப்பப்படமாட்டாது

## மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு (S I.)

## மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ! 4 வி. பி. வேறு கேட்லாக் இனாம்.

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு S. I-

## சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, சதை வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனாம் விலை ரூ. 2. வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்சங்கோடு.

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

# அமெரிக்கன் ஸில்க்

தூய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

பாகிங் தபால்செலவு இனாம் விலை ரூ 6—8—0

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை

# மின்சார ரசம்.

மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பாலர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.




மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவார்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒரு வேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து, கேட்லாக் இனாம்.

விலாசம்:— மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.) தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:— T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப்பு வியாபாரம், தெற்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய நாடுகளுக்கு ஸோல் ஏஜெண்டுகள்:— ஆர். இ. மகம்மது காசிம் அண்டு கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்.



## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம் அல்லது 8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ்நாட்டு கிளையாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும் எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாக தமிழ்நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லா விவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட விஷயம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.



## மனமறி நூல

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான அருட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது

விலை ரூபாய் ஒன்று. மு. வடிவேல் செட்டி,
110, சுப்பராயன் தர்மராஜா கோவில் வீதி
புதுச்சேரி.



## உறையூர் அங்கவஸ்திரங்கள்.

அசல் 100 செ. நூலில் தயார் செய்யப் பெற்றது. பலராலும் நன்கு மதிக்கப் பட்டது. தினப்படி உபயோகத்திற்கு "கதர" மகிமை சதா அங்கவஸ்திரங்களை உத்தியோகஸ்தர் முதல் ஏழைகளவரை சாதாரணமாக உபயோகிக்கலாம்.

$2\frac{3}{4}$ அகலம் 5 முழம் 1க்கு ரூ 1—10—0
ஷை சரிகை சேர் 1க்கு ரூ 1—12—0

தபால் செலவு வி. பி. வேறு


மற்றும் ஜவுளி வியாபாரிகளுக்கு வேண்டிய சரிகை போட்ட 200 செ துப்பட்டாக்கள் முதலியனவும் கிடைக்கும் கமிஷனுக்கு சகாயமாக ஆர்டர்படி வாங்கி அனுப்பப்படும்.

மற்ற விபரங்களுக்கு எழுதகோருகிறோம்.

விலாசம் மானேஜர்
ஸ்ரீ சௌடாம்பிகா
ஜவுளி வர்த்தகசாலை
உறையூர் போஸ்டு
திருச்சி



## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு $3\frac{1}{2}$"x$2\frac{1}{2}$" ஆகும். இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்



இனாம்! இனாம்!! இனாம்!!!

## பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, நீலம், வயலெட், கருப்பு, செம்பு. ஸ்நப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான வசீகரத்தோற்ற முள்ளது.

$2\frac{3}{4}$ அகலம் 18 முழம் புடவை ... ரூ. 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
வில்க் அங்க வஸ்திரம் ... ... ரூ 4—8—0
$2\frac{3}{4}$ அகலம் $7\frac{1}{2}$ முழம் அழுத்தமான கை
நெசவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—6—0

"ஸ்பெஷல்" கேட்லாக் இனாம்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA


ஈ. வெ. ராமசாமியவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

*SUPPLEMENT TO THIS ISSUE.*

# Mathana Raja Theepa Halva.

This precious Halva is specially prepared at the request of friends and gentlemen. Its constituents are hundreds of Unani seeds costly medicinal drugs and gold and silver leaves. It cures all the diseases in the most important organs, viz; brain, heart and kidneys and strengthens them. It gives good appetite, good blood circulation, robust constitution and vitality. It completely removes the nervous debility and weakness in the limbs and waist. It furnishes a brisk and joyful mind.

**1 Seer (to be used for 48 days) Rs. 15.**
**½ Seer. Rs. 8.**

**Hakim, M. A. Shamsudin Sahib,**
***Unani and Tamil Sithavaithiam,***
**New Mosque Street, Mayavaram,**
Tanjore District, (S. India.)

# மதனராஜ தீபஹல்வா.

இவ்வரிய ஹல்வா பல நண்பர்களின் வேண்டுதலுக்கென்றே தயாரிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான யூனானி வித்துகளாலும், விலை உயர்ந்த சரக்குகளாலும் தயாரித்து தங்க ரேக்கு, வெள்ளி ரேக்குகளும் கலக்கப்பட்டுள்ளது. முக்கியமாய் இராஜ கருவிகளாகிய மூளை, ஹிருதயம், குண்டிக்காய் இவைகளை பலப்படுத்தி அவ்விடங்களிலுள்ள வியாதிகளையும் போக்கி, உற்சாகம், நல்ல பசி, நல்ல இரத்த விர்த்தி, மேலான தாது புஷ்டி, இழந்த ஆண்மை முதலியதை உண்டாக்கி கை கால், இடுப்பு முதலிய அசதிகளை அறவே நீக்கி கவலைகளை ஒழித்து சுறுசுறுப்பையும் மனதிற்கு ஓர்வித ஆனந்தத்தையும் தரக்கூடியது.

48-நாள் உபயோகிக்கக்கூடிய ஹல்வா 1-சேர் விலை ரூ. 15-0-0
½-சேர் ரூ. 8-0-0

**ஹக்கீம் ம. அ. ஷம்சுதீன் சாஹிப்,**
யூனானி தமிழ் சித்தவைத்தியம், புதுபள்ளிவாசல் தெரு,
மாயவரம், தஞ்சை ஜில்லா, (தென் இந்தியா.)

Vasantha Press, Mayavaram.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை